

www.tamilarangam.net

# நந்தலாலா

மார்ச் 5 - மே 5, 2001







காலாண்டு கலை இலக்கிய சஞ்சிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடலி

சிவசேகரத்தின் குறிப்பிடத்தக்க பல கவிதைகளை உள்ளடக்கிய இத்தொகுதி தேசிய கலை இலக்கிய பேரவையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

"வெட்டி சரித்தாலும், கீறி எடுத்தாலும், இந்த கரும்பனைகள் இங்கே தான் முளைக்கும் " எனும் கருத்தாக்கத்தை அழுந்த வெளிக்கொணரும் வடலி எனும் கவிதை பலவற்றையும் தளிர்க்க வைக்கக்கூடியது ஆழவேர் விடும் வேரின் திட்பத்தை கூட்டக்கூடியது.

இத்தகைய படிமங்களை வீரியமுள்ள எழுத்துக்கள் ஏற்கனவே சந்தித்துள்ள சந்தர்ப்பங்கள் உண்டு.

டால்ஸ்டாயின், புத்துயிர்ப்பில் இப்படியாய் சூள்கொள்ளும் ஆரம்ப வரிகள் தமது அழகும் வலிமையும் காரணமாக ஜெயகாந்தனை தனது இன்னுமொரு நாவலில் மேற்கோளிட வைத்தது.

ஜெயபாலன் கூட தனது கவிதை ஒன்றில் :

'வெடிச்சத்தங்கள் ஓய்கின்ற போதெல்லாம்
பறவைகள் பாடின
துயர்பாறையின் கீழ் நசிந்த போதிலும்
துளிர்க்கும் மனப்புல்'

என எழுதுகின்றார்.

மொத்தத்தில் சாகவிடாமல், "துளிர்க்கட்டும்" எனும் கவிஞர்களின் வீரம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு உள்ளடக்கங்களுடன் கூறப்பட்டே வந்துள்ளது.

இருப்பினும் இத்தகைய கவிஞர்கள் அநேகர் இல்லை.




முக்கியமாக, எமது இன்றைய சூழலில் ஆகவும் குறைவு. ஆனால் இதற்கான தேவைகளோ மிக அதிகம். சிவசேகரத்தின் இக்கவிதையில் ஆத்திரம் உண்டு. மக்களை சாரும் நெருக்கம் உண்டு. 'துளிர்க்கும்' நம்பிக்கை உண்டு. மனிதனைப் போற்றுதல் உண்டு. மேலும் தர்க்கரீதியாய் தொடரும் இக்கவிதை வரிகள்,

'பனைபோல அல்ல
பாரிலுள்ள மானுடர்கள்
பனைகளிலும் மிகவலியோர்
அவர் தமது பாலகர்கள்
இங்கே விழுவர்
இங்கேயே வேர் விடுவர்
இங்கே முளைப்பர்
நிமிர்வர்
காடாய் அவர் விரிவர்'

எனும் போது தனது தீவிர உச்சத்தை எட்டுவதும் உண்டு.

இதுப்போன்று பல குறிப்பிடத்தக்க கவிதைகளை கொண்டுள்ள இக்கவிதை தொகுதியில் ஓரிரு கவிதைகளை (அந்திமம், மந்திப்பு) தவிர்த்திருந்ததால் மேலும் நன்றாய் இருந்திருக்குமோ என்று தோன்றுகிறது.

வாசிக்கப்பட வேண்டிய இரண்டொரு கவிதைத் தொகுதிகளில் இதுவுமொன்று என்பதில் சந்தேகமில்லை.

விநியோகம்:
வசந்தம்
44, 3வது மாடி,
கொழும்பு மத்திய கூட்டு சந்தைதொகுதி
கொழும்பு 11.

www.tamilarangam.net




## சிறுகதை:

திரட்சி என்பது ...

(ராமையா முருகவேல்)

~ 15

## கவிதை :

ஒவ்வொரு

நிலாப்பொழுதும்

~ 19

## பேட்டி:

இன்குலாப்

~7

## சாருமதி :

உன் நினைவாய் ...

~ 25


**Nandhalala**
**133-1/1, Dimbula Road,**
**Hatton**

## தீக்குள் விரலை வைத்தால் ....

வணக்கம்

'முதலாளித்துவம், சோசலிஸத்தின் சில முக்கியமான அம்சங்களை உள்வாங்கி தன்னை நிலைப்படுத்தி கொண்டுள்ளது' எனும் பேராசிரியர் சிவத்தம்பியின் கூற்று (தாமரை, உயிர் நிழல்), 'சித்தாந்த ரீதியாகவே முதலாளித்துவமும் சோஷலிஸமும் சமாதான சகவாழ்வுக்கு ஒத்திசையும் யுகம் இது' என்று இன்றைய யுகத்தை வரையுறுக்குமளவுக்கு ஜெயகாந்தனை ஒத்திசைந்து பாட வைத்திருக்கின்றது (குமுதம்).

இடைக்காலத்தில் தவறவிடப்பட்டுவிட்டதாக கூறப்படும் 'மார்க்சிய லாஜிக்கை' இப்படியாக மீட்டெடுக்கும் முயற்சிகள் ஒரு புறம் நடந்தேறுகையில் முதலாளித்துவம், மௌனமாக தனக்குள் புன்னகைத்து கொள்வதாகவே படுகின்றது.

ஏனெனில் மிக அண்மையில், (டிசம்பர் 2000), உலகின் மிக செல்வம் கொழிக்கும் நாடுகளில் ஒன்றென வர்ணிக்கப்படும் கனடாவின் ஒன்ராரியோ மாகாணம், தனது தொழிலாளர்களுக்கு கிழமையில் 60மணித்தியாலங்கள் வேலை வழங்கப்பட்டு மேலும் சுரண்டலுக்கும், வாழ்க்கைப்பறிப்புக்கும், வாழ்க்கை சிதைவுக்கும் வழிசெய்யும் வகையில் தனது சட்டங்களுக்கு புதியதோர் திருத்தத்தை கொண்டு வந்ததன் மூலம் (***Ontario Bills***: 147& 139 ~ நாளுக்கு 12 மணித்தியாலங்கள் வேலை) வரலாற்றுப் புகழ்பூத்த மேதின தியாகங்களை அர்த்தமற்றதாக்கும் புதிய நாகரீகத்திற்கு வழிகாட்டி உள்ளது.

இந்த சூழலில் தான், இன்றைய முதலாளித்துவத்தின் முகத்தை அண்மைக் காலங்களில் பல்வேறு தினுசுகளில் வரையறை செய்யும் முயற்சி நாளாந்தம் மறுபுறத்தில் நடந்தேறுகிறது. இலங்கை ஜனாதிபதி, சந்திரிக்கா அம்மையார் கூட, பாரீஸ் பிச்சை வாங்கல் கூட்டத்தின் போது, மனித முகம் கொண்ட முதலாளித்துவத்தை நாங்கள் (நாங்களும்தான்?) முன்னெடுக்க விழைகின்றோம் என பவ்யமாக கூறி புல்லரிக்க வைத்தார்கள்.

இத்தகைய கருத்து முரண்களிடை லெனினின் கூற்று ~ முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஓர் கொடுக்கல் ~ வாங்கல் என்ற தினுசில் தான் நடந்தேறுகிறது ~ இதுவே மார்க்சிய அணிகளிடை திரிபுவாதம் வேரூன்றவும் காரணமாகின்றது என்ற பொருள்பட கூறிய கூற்று சாரம் பொதிந்தது ~ நுனித்து நோக்கத் தக்கது.

***..the bourgeoisie inevitably devises two systems of rule, two methods of fighting for its interests and of maintaining its domination, and these methods at times succeed each other and at times interwoven in various combinations. The first of these is the method of force, the method which rejects all concessions to the labour movement, the method of supporting all the old and obsolete institutions, the method of irreconcilably rejecting reforms... The second is the method of 'liberalism', of steps towards reforms, concessions, and so forth.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கவிதை :

கேட்டிருப்பாய் காற்றே
(சி.வி. வேலுப்பிள்ளை)

~ 16

## கட்டுரை:

தமிழினி ~ 2000
(ரஞ்சகுமார்)

~ 39

## கட்டுரை:

ஏவுகணைத்திட்டம்

~ 3

## கவிதை :

இந்த சமாதியிலே
(இன்குலாப்)

~ 10

அச்சுப் பதிவு :
Yaseen Printers
Colombo -12

## தீக்குள் விரலை வைத்தால் ....

......
***The zigzags of bourgeoisie tactics intensify revisionism within the labour movement....***

....
***The bourgeoisie passes from one method to the other not because of the malicious intent of the individuals, and not accidentally, but owing to the fundamentally contradictory nature of its own position. Normal capitalist society cannot develop successfully without a firmly established representative system and without certain political rights for the population, which is bound to be distinguished by its relatively high "cultural" demands. These demands for a certain minimum of culture are created by the conditions of the capitalist mode of production itself with its high technique, complexity, flexibility, mobility, rapid development of world competition, and so forth.***

இந்த வகையில், இன்றைய முதலாளித்தவத்தின் உண்மை முகம் எப்படி இருக்கின்றது என்பதை ஓரளவு, மேலெழுந்தவாரியாகவேனும் ஸ்பரிசித்து பார்க்கும் பொருட்டு, இவ்விதழுக்கான விடயதானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விடயங்கள் முடிந்த வரை முதலாளித்துவ பத்திரிகைகள், புள்ளி விபரங்களில் இருந்தே திரட்டப்பட்டுள்ளன.

இந்நடப்புக்கள் பொறுத்து ஓர் தெளிந்த பார்வையை உருவாக்கி கொள்ளாத வரை, இலக்கியம் உட்பட்ட எமது அனைத்து நடவடிக்கைகளும் திசையற்றதாய், நோக்கற்றதாய், குறியற்றதாய்த்தான் இருக்கும்.

இந்த வகையிலேயே, இவ்விதழின் பக்கங்கள், வழமையிலிருந்து சற்றே வேறுபட்டு, அதிகமாய் சர்வதேச அரசியல் மணம் வீசுவனவாக உள்ளன.

இதன் சாதக, பாதகமான விவகாரங்களை அடுத்த இதழில் விவாதிக்க முன்வருவோம். ~ வாழ்த்துக்கள்.. ~

**Nandhalala**
***133-1/1, Dimbula Road,***
***Hatton***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்காவின் அதிபயங்கர ஏவுகணைத்திட்டம்

– சிவசிதம்பரம்

கடந்த வருடத்தில் இடம்பெற்ற அதிமுக்கியமான சர்வதேச நிகழ்வுகளை பதிவு செய்து அதற்கூடாக பல்வேறு முரண்களை கூர்மையாக வெளிக்கொணரும் இக்கட்டுரை உலக அரசியலை சரியாக புரிந்து கொள்வதற்கு வழிசெய்யக்கூடியது. கூடவே சுவாரசியமான ரீதியில் எழுதப்பட்டிருப்பது இவ்விடயம் தொடர்பில் பலரையும் ஆர்வமூட்டக்கூடியது. (ஆ-ர்)

உலகமயமாக்கலின் மறுபக்கம் – ஏவுகணைத்திட்டம்

உலகை யுத்த விளிம்புக்கு தள்ளிவிடும் நாசமிகு எண்ணக்கரு

ஜீயார்ஜ் புஷ் தேர்தலில் வென்று அமெரிக்க ஜனாதிபதியாகி விட்டார் எனும் செய்தி பலருக்கு – முக்கியமாக – பல அமெரிக்க கம்பனிகளுக்கு உவப்பானது தான்.

ஜியார்ஜ் புஷ்ஷின் பல தகைமைகளுக்குள் (கஞ்சா அடித்த காலங்கள் போக, டெக்ஸாஸ் கவர்னராய் இருந்த போது நாசூக்காய் நூற்றுக்கு மேற்பட்டோரை மின்சார நாற்காலிக்கு அனுப்பி சாகடித்து அமெரிக்காவின் எந்த மாகாணத்தையும் விட கூடுதலானோரை தூக்குமேடைக்கு அனுப்பிய மாகாணம் என்ற பெருமையை தக்கவைத்தது போக, இவரது தேர்தல் செலவுக்காய் ஒரு அமெரிக்க ரிகார்டாக நூறு மில்லியன் டாலரை நண்பர்கள் திரட்டி தந்த சாதனை போக, புளோரிடா மாகாணத்தின் தனது சகோதர கவர்ணருக்கூடாக ஒரு செப்புக் காசுக்கு பயன்படாத, காலாவதியான வாக்குகளை எண்ணும் யந்திரங்களை அனுப்பி ஆயிரக்கணக்கான கறுப்பின மக்களின் ஓட்டுக்களை செல்லாமலடித்த சாதனை போக) உலகத்தை யுத்த விளிம்புக்குத்தள்ளிவிடக் கூடிய அமெரிக்க ஏவுகணை திட்டத்துக்கு மிகமிக உறுதியான ஆதரவாளர் என்ற சாதனையும் படைத்தவர் என்பதிலேயே இவரது இன்றைய முக்கியத்துவம் தங்கியிருக்கிறது.



ஏவுகணைத்திட்டம்? – அதுவும் நாஙம் உலகுக்கான வரப்பிரசாதங்கள் ...

புஷ்ஷின் பதவி ஏற்புக்கு பிறகு கடந்த ஜூலை 8இல் தோல்வியை தழுவிய அமெரிக்க ஏவுகணை திட்டத்துக்கு இனி யாது நடக்கப் போகின்றது – இது பொறுத்த, உலகின், ஏனைய பார்வைகள் என்ன என்பது இன்றைய சர்வதேச அரங்கில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த வினாவாக உருவாகி உள்ளது.

இந்த வகையில் ஜூலை8 ஏவுகணை சோதனை இடம்பெற முன்னதாகவும் பின்னதாகவும் உலக அரங்கில் இடம்பெற்ற நிகழ்வுகள் விவாதத்துக்கும், கவனமான பரிசீலனைக்கும், ஆய்வுகளுக்கும் உரித்ததாகும்.

ஜூலை8 சோதனை இடம்பெற கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்கு முன்பாகவே அமெரிக்கா இச்சோதனைக்கான அரங்கை தயார் செய்வதில் கவனமாக ஈடுபட்டது.

அமெரிக்க மத்திய புலனாய்வு நிலையத்தின் பணிப்பாளர் ஜியார்ஜ் டெனட், கடந்த வருடம் மார்ச் இறுதிப்பகுதியில் (23.03.00) அமெரிக்க வெளிவிவகாரத்திற்கான செனட்

www.tamilarangam.net

குழுவுக்கு அளித்த தனது வாக்குமூலத்தில் இன்னும் பதினைந்து வருடங்களில் அமெரிக்காவின் எல்லா நகரங்களும் வடகொரிய, ஈரானிய, ஈராக்கிய ஏவுகணைகளால் தாக்கப்படும் அபாயம் உண்டென அறிவித்தார்.


இவ் அறிவிப்பு விடுவிக்கப்பட்ட அதே காலப்பகுதியில் வடகொரியாவானது 2005ம் ஆண்டளவில் தனது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை தயாரித்து முடித்து விடும் என்ற வேறு பல அறிக்கைகளும் அமெரிக்காவில் வெளியிடப்பட்டன.

போதாதற்கு தற்சமயம் ரஷ்யாவும், சீனாவும் அமெரிக்காவின் எந்த ஓர் இராணுவ நிலையினையும் தமது ஏவுகணைகள் மூலம் ஊடுருவி தாக்கும் வல்லமையை கொண்டனவாகவே உள்ளன என்றுவேறு ஜியாஜ் டெனட் மேலும், தனது மேற்படி வாக்குமூலத்தின் மூலம் அமெரிக்க சமூகத்தை பயமுறுத்த தவறவில்லை.

ஆக, இந்த பயமுறுத்தல்களின் மறுபக்கம் யாதெனில் எவ்வளவு செலவாகினாலும் பரவாயில்லை. அல்லது எத்தகைய எதிர்ப்பு உலகளாவிய ரீதியில் கிளம்பினாலும் கூட பரவாயில்லை. ஆனால் செயற்கை கோள்களின் உதவியுடன் கூடிய தனது விண்வெளி சார்ந்த புதிய ஏவுகணைதிட்டத்தை அமுல்படுத்தியாக வேண்டும் என்ற அழுத்தமே அவரது மேற்படி வாக்குமூலத்தில் பரவி, ஊறி கிடந்தது.

அமெரிக்கா அமுல்படுத்த எண்ணியுள்ள தேசிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டமானது (NMDS) பத்திரிக்கை அறிக்கைகளின் பிரகாரம் 50கோடி அமெரிக்க டொலர்களை விழுங்கித் தள்ள கூடியது. இது போன்ற விவகாரங்களில் கணக்கு தொகை, புள்ளிவிவரங்கள், போன்றன மிகுந்த உள்நோக்கத்துடன் குறைத்தும் திரித்தும் கூறப்படுவன என்பது பலரும் அறிந்த ரகசியமே. இருந்தும் கூட, செலவானது 50 கோடி டாலர்களையே உள்ளடக்கியது எனக்கொண்டாலும் கூட, இந்த செலவு அனைத்தையும் அமெரிக்காவின் சாதாரண மக்கள் (ஏன், சரியாக சொல்லுவோமேயானால், உலகத்தின் சாதாரண மக்கள் என்று கூறலாம்.) ஏதோ ஒரு வகையில் யாருக்காகவோ சுமந்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தை உள்ளடக்கியே உள்ளது.

அமெரிக்கவின் வீடற்ற, கல்விவசதியற்ற, சுகாதாரமற்ற – பொதுவில் வாழ்வு – பறிக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டு விகார முகங்களுடன் அலைந்து திரிய விடப்பட்டுள்ள சாதாரண மக்கள் அல்லது இவர்களையும் உள்ளடக்கிய அமெரிக்காவின் சராசரி பிரஜைகளுக்கு ஏதோ ஒரு வகையில் மேற்படி திட்டங்கள், செலவுகள் பொறுத்து ஏதாவது காரணங்கள், நியாயப்பாடுகளை சொல்லியாக வேண்டிய நிர்பந்தம் அமெரிக்க அரசுக்கு உண்டு.




மறுபுறத்தில் மேலும் மேலும் சந்தைகளை உற்சாகமாக கைப்பற்றவும் மூலப்பொருட்களை பறித்து வளைத்துப் போட்டுக்கொள்ளவும் அதற்குரிய தன்னதிகாரத்தை உலகளாவிய ரீதியில் விரித்துப்பரப்பவும் இராணுவரீதியான மேலாதிக்கம் அமெரிக்காவுக்கு – அமெரிக்காவின் ராட்சச கம்பெனிகளுக்கு தேவையுறுகிறது.

இதற்கான தேவைப்பாடுகளில் தலையாய ஒன்று ஈராக்கில் பொழிந்ததுபோல குண்டு மழைபொழிந்தும் கொசோவாவில் பொழிந்ததுப் போல ஏவுகணை மழை பொழிந்தும் அதேவேளை தான் தாக்கப்படாமல் தன்னை சாமர்த்தியமாகக் காப்பாற்றிக் கொள்ளும் பாதுகாப்பரணை கச்சிதமாக உருவாக்கி கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

இவ்வடிப்படையிலேயே அமெரிக்க அரசு வடகொரியா, ஈராக், ஈரான் போன்ற நாடுகளை "காடைநாடுகள்" (ROGUE STATES) என்று பிரகடனப்படுத்தியும் அதற்கெதிரான பாதுகாப்புக்கான ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க, தான் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளதாயும் உலக நாடுகளுக்கும் தனது பிரஜைகளுக்கும் கதை பின்ன துவங்கியுள்ளது.

ஆனால் உண்மை யாதெனில் கடந்த காலத்தில் இடம்பெற்ற அமெரிக்க சோவியத்தின் மறைமுக யுத்தத்தின் பின் உலக ஆதிக்க அமைப்பில் புதிய ஓர் ஒழுங்குமுறையை கோரும் அமெரிக்கா, அது ஒற்றை ஆதிக்க முறையாக (UNIPOLAR) அமைதல் வேண்டும் என்றும் அதிலும் ஆதிக்கம்செலுத்தும் நாடாக தானே உச்சத்தில் இருந்தாக வேண்டும் எனவும் இன்று திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

இவ்விருப்பு அதனது அகநிலை விருப்பு என்பதைவிட அது கொள்ளையிட்டு குவித்துள்ள மூலதனத்தின் இயங்குவிதி என கூறுவதே பொருத்தமானதாகும்.

அமெரிக்க தலைமையின்கீழ் நேட்டோ ஸ்தாபனம் ஈராக்கில், கொசோவாவில் நடந்துகொண்ட முறைமைகளும் கூடவே, உலகின் ஏனைய பிரதேசங்களில், முக்கியமாக, முன்னைய சோவியத்தில் இருந்து பிரிந்துசென்றுள்ள நாடுகளில் கால்பதிக்க விஸ்வரூபம் கொள்ளும் ஆதிக்க நிகழ்வுகளும் அண்மைக்காலங்களில், சர்வதேச அரங்கில் மிக மிக கூர்மையுற்ற, ரஷ்ய, சீன, இந்திய, வடகொரியா போன்ற நாடுகளை வரலாற்றில் என்றுமில்லாதவாறு


www.tamilarangam.net

நெருங்கி வரச்செய்து அவற்றிடையே புதிய கூட்டுறவுகளை, இன்று, ஊக்குவிக்கவும் செய்துள்ளது.

## அமிரிக்க ஏவுகணைத்திட்டம்

இந்த பின்னணியிலேயே அமெரிக்கா தனது ஏவுகணை திட்டத்தை முன்கொணர்ந்தது. நாடுகளின் பாதுகாப்பையும் உள்ளடக்கும் வகையில் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற தீவிர பயங்கரவாத கருத்தை உள்ளடக்கியது புஷ்ஷினது பேராசை. இப்பயங்கர திட்டத்தின் நாசகார விளைவுகளை கருத்தில் கொள்ளும் உலக நாடுகளில் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் போக பிரான்ஸ் போன்ற நாடுகளே இத்திட்டத்தை இன்று ஆதரிப்பதாக இல்லை.

தாவும் ஏவுகணையைப் பெற்றுவிடும்~ எனவே "அதற்கு முன், அதற்கு முன்" என்ற தந்திர பின்னணியிலும் உடனே நடைமுறைக்கு வந்தாக வேண்டும் என்ற திட்டத்தின் பிரகாரமும் அமெரிக்கா சென்ற மார்ச் மாதத்தின் ஆரம்ப பகுதியிலிருந்தே திட்டமிட்ட ரீதியில் தனது காய்களை ஒவ்வொன்றாக உலக அரங்கில் நகர்த்த தொடங்கியது.




9600 கிலோமீட்டருக்கு அப்பால் இருந்து ஏவுகணை தளங்களை அழிப்பதற்காக ஒரு அந்நிய நாட்டு ஏவுகணை சுடப்பட்டு விரைகின்றது. 20 நிமிடங்கள் கழித்து அதை நோக்கி செய்மதியால் தூண்டப்பட்டு சுடப்படும் ஓர் எதிர் – ஏவுகணை அதனை வானில் 231 கிலோமீட்டர் உயரத்தில் இடைமறித்து அழிக்கின்றது

அமெரிக்க ஏவுகணை செயல்படும் முறை : வானிலிருக்கும் செய்மதி தரையில் இருக்கும் ரொக்கட்டைத் தூண்ட அது உள்வரும் எதிரியின் ஏவுகணை நோக்கி சீறிப்பாய்கிறது.

இத்திட்டத்தின் பிரகாரம், அமெரிக்காவை நோக்கி ஏவப்படும் ஏவுகணைகளை, விண்வெளியில் சுழலும் அமெரிக்காவின் உளவு செயற்கை கோள்கள் மோப்பம் பிடித்து அதற்கேற்ற வகையில் அமெரிக்க தளங்களில் அமைந்துள்ள தமது ஏவுகணைகளை தூண்டி உள்நோக்கி வரும் ஏவுகணைகளை பூமி பரப்பிற்குக் கிட்டத்தட்ட 230 கிலோமீட்டர்களுக்கு அப்பால் வைத்தே மோதி அழித்தொழிக்கும். இத்திட்டம் அமுல் படுத்தப்படுமேயானால் ALASKA, NORTH DAKOTA போன்ற தளங்களில் கிட்டத்தட்ட 200 ஏவுகணைகளை அமெரிக்கா பொருத்தி வைத்துக் கொள்ளும். இது கிளிண்டன் நிர்வாகத்தின் நடைமுறை.

ஆனால் அமெரிக்க தேர்தலில் வெற்றி பெற்ற ஜியர்ஜ் புஷ்ஷின் கருத்துப்படி மேற்படி திட்டம் போதுமானதில்லை. இத்திட்டமானது அமெரிக்க மாநிலங்களுக்கு மாத்திரமன்றி அமெரிக்காவின் நேச

## ஏவுகணைத் திட்டமும் உலக நாடுகளுக்கிடையே காய் நகர்த்தலும்

மேற்படி அமெரிக்க ஏவுகணைத் திட்டத்திற்கு தற்போது முழு ஆதரவு தருவது ஐரோப்பியாவைப் பொறுத்தவரை பிரிட்டனும், டென்மார்க்கும் மாத்திரமே. பிரிட்டனானது தனது தளங்களை பாவிக்க ஏற்கனவே ஒப்புதல் அளித்திருந்தாலும் ஐரோப்பிய நாடுகளை பொறுத்தமட்டில் அவை அமெரிக்காவின் மேற்படி ஏவுகணைத்திட்டத்தை எதிர்ப்பதாகவே தெரிகின்றது.

உள்வரும் ஏவுகணையை சுட்டொழிப்பதற்கான தனது மூன்றாவது சோதனைநாள் சென்ற வருடம் ஜூலை 8 என திகதி நிர்ணயிக்கப்பட்ட நிலைமையிலும், இவ் ஏவுகணைத் திட்டமானது 2005ம் ஆண்டு ~ இவ்வாண்டில் வடகொரியா தனது கண்டம்

## கிளிண்டனின் ரஷ்ய விஜயத்துக்கான முன்னேற்பாடுகள்.

ஜூன் மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற தனது ரஷ்ய விஜயத்தின் போது, கிளிண்டன் கைச்சாத்திடக் கூடிய ஒப்பந்தமானது மேற்படி திட்டத்திற்கான அங்கீகாரத்தை உள்ளடக்க வேண்டும் என்ற உள்நோக்கில் அவ்ஒப்பந்தம் கைச்சாத்திடும் தினங்களுக்கு சற்று முன்னதாகவே, அத்தகைய சுவாத்திய நிலையை ஏற்படுத்தும் நோக்குடன் கடுமையான கருத்துக்கள் அமெரிக்காவின் சார்பில் தெரிவிக்கப்படத் தொடங்கின.

உதாரணமாக, அமெரிக்க செனட்டின், வெளிவிகாரக் குழுவுக்கான தலைவர் ஜெனி ஹெம்ஸ் மேற்படி ஏவுகணை திட்டத்திற்கு குறைவான எந்த ஒரு ஒப்பந்தமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் அப்படி ஓர் ஒப்பந்தம் செய்யப்படும் பட்சத்தில் அது செனட்டால்

(தொடர்ச்சி 42ம் பக்கம்)

www.tamilarangam.net

## ஜனநாயகத்தின்

# 20 லட்சமாவது கைதி...!

அமெரிக்கா அண்மையில் தனது 20 லட்சமாவது கைதியை சிறையிலிட்டு சாதனை படைத்துள்ளது.(DUNCAN CAMPBELL WASHINGTON POST )

இதுபொறுத்து மேலும் தெரிய வருவதாவது உலக சனத்தொகையில் ஐந்து வீதத்தை உள்ளடக்கியுள்ள அமெரிக்கா, உலக கைதிகளின் மொத்ததொகையில் 25 சதவீதத்தை தனது சிறைகளில் அடைத்து வைத்துள்ளது என்ற திடுக்கிடும் தகவல் WASHINGTON POST ஆல் வெளிக்கொணரப்படுள்ளது. மேற்படி அறிக்கையின் பிரகாரம் உலகில் வேறு



கால்களும் சங்கிலியால் பிணிக்கப்பட்டிருப்பதை காண்க

எந்த ஓர் நாட்டிலும் ஒரு நாட்டின் குடித்தொகையில் இவ்வளவு அதிகமான விகிதாசாரத்தோர் சிறையில் இருப்பதாக இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது. கூடவே இப்படி சிறையில் இடப்படுவதால் குடும்பங்கள் சிதைவுறுவதும் சிறுவர்களின் வாழ்வு பாதிப்புறுவதும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

மேற்படி அறிக்கை நியுயார்க்கின் மூன்றில் ஒரு கறுப்பின இளைஞர்கள் சிறையில் இருப்பதையும் சுட்டி காட்ட தவறவில்லை. இது குறித்து வேதனைப்படும் ஒரு அறிஞர் கூறுவதாவது: 'நாங்கள் பள்ளிக்கூடங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் செய்ய வேண்டிய செலவை சிறைச்சாலைகளுக்குச் செய்து கொண்டிருக்கிறோம்'.

அமெரிக்க சிறைகள் குறித்து ஆராயும் ஆய்வாளர்கள் (CHIRISTIAN PARENTI என்பவரின் கூற்றுப்படி) அண்மைக்காலங்களில் தனியார் சிறைசாலைகள் விஸ்தரிக்கப்பட்டு வருவதும், 27 அமெரிக்க மாகாணங்களில் அத்தகைய தனியார் சிறைச்சாலைகள் 100க்கும் மேற்பட்டு இருப்பதாகவும் இவை கிட்டத்தட்ட ஒரு இலட்சம் சிறைக்கைதிகளை பராமரிப்பதாகவும் அறியக் கிடக்கின்றது. மேலும் ஒவ்வொரு வருடமும் சிறை கட்டுவிக்கும் ஒவ்வொரு ஒப்பந்தமும் 2,3 கோடி டாலர்கள் வரை செய்து கொள்ளப்படுவதாயும் மேற்படி அறிக்கை சுட்டிகாட்டுகிறது.

சிறை கட்ட வருடத்துக்கு 7 கோடி டாலர் செலவிடப்படுவதாயும், சிறைக் கைதிகளைப் பராமரிக்க 35 கோடி டாலர் செலவிடப்படுவதாகவும், மேற்படி சிறைகள் 523,000 பேருக்கு வேலைவாய்ப்பு தருவதாகவும் – இது அமெரிக்காவின் மிக பெரிய வேலை வழங்குபவரான ஜெனரல் மோட்டர்ஸ்க்கு அடுத்த படியாகவே உள்ளதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆக உலகின் உயரிய ஜனநாயகத்துக்கான செலவு ரொம்பத்தான் மிஞ்சிப் போகிறது என அலுத்து கொள்கிறார்கள் சில ஆய்வாளர்கள்! (உதயமூர்த்திகள் கவனித்தால் நன்று.)

## உனது சந்தை ! எனது சந்தை எனது சந்தை எனது சந்தை !!

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இரும்புக்கு 19வீத வரி செலுத்தும் வகையில் ஒழுங்குமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி ஏற்பாடுகளால் அமெரிக்காவுக்கு இரும்பு ஏற்றுமதி செய்யும் 20 நாடுகள் பாதிப்புக்கு உள்ளாகும் எனவும் இவற்றில் ஜப்பானும், இங்கிலாந்தும் அதிகமாக பாதிப்புக்குள்ளாகும் எனவும் NEW YORK TIMES (12.02.00) கூறியுள்ளது. ஏனைய நாடுகளின் வரி ஏற்பாடுகளை தளர்த்தி சந்தை வசதிகளை கோரும் அமெரிக்கா தனது சந்தையை வேறுநாடுகள் ஊடுருவா வண்ணம் பல்வேறு வன்முறைகளால் பலமாக பாதுகாப்பது உலகம் அறிந்த ஒன்றே. இந்த நீதி முறையை நிலைநாட்டுதற்கான முன் ஏற்பாட்டுக்காகவே மில்லியன் கணக்கான டாலர்களை அமெரிக்கா ஏவுகணைத் திட்டத்தில் கொட்டி செலவழிக்கின்றது என கருதுவோரும் உள்.

www.tamilarangam.net



# இன்குலாப் கவிதைகள்

## அவை பிறப்பெடுத்த பின்னணி

- **உங்கள் கவிதைகள் எத்தகைய சூழலில் பிறப்பெடுக்கின்றன? சஞ்சிகைகள் கேட்பதால் எழுதுகின்றீர்களா அல்லது ஏதோ ஓர் உத்வேகத்தால் உந்தப்பட்டு எழுதுகின்றீர்களா அல்லது ஓர் குறிப்பிட்ட காலத்தில், எழுதப்பட வேண்டும் என்பதால் எழுதப்படுகின்றதா?**

பல சமயங்களில், சொல்லியாக வேண்டும் என்ற உணர்வுகள் அழுத்த நான் எழுதுகின்றேன். அண்மைக் காலங்களில் தான் சஞ்சிகைகளின் கோரிக்கைகளின் அடிப்படையிலும் எழுத தொடங்கியுள்ளேன். ஆனால் முன்னர் அவ்வாறில்லை. மேலும் பல சந்தர்ப்பங்களில் எமது தோழர்கள் நடத்தக் கூடிய கவியரங்குகளுக்காகவும் எழுத நேர்ந்தது. ஆக எனது கவிதைகள் மூன்று வகைப்பட்டது எனச் சொல்லலாம். நானாய் எழுதியது கவியரங்குகளுக்காய் எழுதியது. பின் பாடலுக்காய் எழுதியது.

- **இன்குலாப் கவிதைகள் என்று நீங்கள் வெளியிட்ட தொகுதியில் கண்மணி ராஜம் என்ற ஓர் கவிதை உண்டு. எந்த சூழலில் இது பாடப் பெற்றது என கூற முடியுமா?**

பீட்டர்சாலை என்பது நான் பணியாற்றக் கூடிய கல்லூரிக்கு அண்மையில் உள்ள சாலையிலேயே அமைந்திருக்கிறது. நடைபாதையில் குடிசைகள் – கோணிப்பைகள் மூலம் கூரைகள். ஒரு சமயம் பெய்த அடைமழையில் அந்த குடியிருப்பில் இருந்த பெண் குழந்தை இறந்தது என்ற செய்தி வந்தது. அந்த நடைபாதை எனக்கு நன்றாய் தெரிந்த ஒன்று. இந்த சம்பவத்தை நான் எழுத வேண்டும் என்று எண்ணினேன். ஏனெனில் அச்சமயம் திராவிட முன்னேற்றகழகம் பதவிக்கு வந்திருந்தது. அதிலும் குறிப்பாக இப்போதைய முதல்வரே அப்போதைய முதல்வராகவும் இருந்தார். வெறும் சொற்களாலேயே மக்களை மயக்கி வைக்கலாம் என்ற ஓர் நிலமை விரவிக் கிடந்த காலம் அது. " ஏழையின் சிரிப்பாகவே இறைவனைக் காண்கின்றோம்.." இப்படி மேடையில் ஏதேதோவெல்லாம் முழங்கினார்கள். ஆனால் நடைமுறையில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, உழைக்கும் வர்க்கத்தினருக்கு கடுமையான பாதிப்புக்கள் இருந்தன. அவர்களை ஏமாற்றுபவர்கள் கூடுதலாக இருந்தனர். இவ் ஏமாற்றுதலால் பாதிக்கப்பட்டவர்கள் அனந்தம். இதை அம்பலமாக்கவும், கண்டனம் செய்யவும் என்ற நோக்கத்திலேயே இந்த கவிதையை நான் எழுதினேன்.



பின் இந்த கவிதையை நான் இளவேனில் நடாத்திய "கார்க்கி" பத்திரிகைக்கு கொடுத்தேன். " கார்க்கி " பத்திரிக்கை கேட்டதால் எழுதினேனா அல்லது நானாக எழுதினேனா என்பது சந்தேகமாயிருக்கிறது.

ஆனால், இன்னுமொன்றையும் கூறலாம். இக்கவிதை வெளிவந்த காலத்தில் ஆந்திராவைச் சேர்ந்த திகம்பர கவிஞர் அவர்களும் நலிந்தவர்கள், நடைபாதைவாசிகள், விலைமாதர், தொழுநோயாளர் – இப்படி சமூகத்தில் பாதிக்கப்பட்ட, பார்க்கப்படாத பிரிவினர் மீது தன் பார்வையை செலுத்தி கொண்டிருந்தார்.

இந்த பாதிப்பு என்னிலும் இருந்தது எனலாம். தமிழ் கவிதை வேறு திசையில் செல்ல வேண்டும் என்ற உத்வேகம் என்னில் தோற்றம் கொள்ள இதுவும் ஓர் காரணமாய் இருந்திருக்கலாம்.

- **பீட்டர்சாலையில் இருந்த சேரிமக்களிடம் உங்களுக்கு தொடர்பு இருந்ததா - முக்கியமாக இந்த பாடல் எழுந்த காலகட்டத்தில்.**

பிரதானமாக தொடர்பு என்று ஒன்று இருக்கவில்லை.

- **வேறு சேரி மக்களுடன் தொடர்பு இருந்ததா?**

சேரிகளில் நான் சார்ந்த இயக்கங்கள் இருக்கவில்லை. சேரியில் இருந்து வந்த சிலர் இயக்கங்கள் குறித்து பேசினார்கள். ஆனால் விடயம் இதுதான் ~ சேரிமக்களுடன் எனக்கு நேரடி தொடர்பில்லாமல் இருக்கலாம். ஆனால் நான் இந்த கவிதையை எழுதிய காலகட்டத்தில், நடந்தவற்றை பற்றி பேசினேன்.

- **சரி. ஆனால் சேரிமக்களுடைய வாழ்வு இதுதான் - இத்தகையது தான் என்ற அறிவை பெற்றிருந்தீர்களா?**

நிச்சயமாக. பல சமயங்களில் நான் அவர்களுக்கூடாக நடந்து செல்லவேண்டி இருந்துள்ளது. மேலும் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். நான் இப்போது குடியிருக்கும் வீட்டுக்கு முன்னாடி நான் வாழ்ந்த வீடுகள் எல்லாமே பாதி சேரி வகைப்பட்டதுதான்.

ஆக அந்த வாழ்க்கையை நான் பார்த்திருந்தது மாத்திரமல்ல ~ நான் வாழ்ந்தது கூட கிட்டத்தட்ட ஒரு வகையான பாதி சேரி வாழ்க்கைதான்.

- **சேரி மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மனித நாகரீகங்களை அவதானித்திருக்கிறீர்களா?**

பதில் கூறுவது சற்றே கடினமான விடயம். சில சந்தர்ப்பங்களில் சில விடயங்கள் நமக்கு ஏற்புடையதாக அல்லாமல் அருவருப்பை உண்டு பண்ணக் கூடியதாகவும் இருக்கும். சூழல் அவர்களை ஒரு நல்ல வாழ்நிலைக்கு கொண்டு வராமல் அப்புறப்படுத்தி வைத்திருக்கின்றது. ஓர் கிராமிய வாழ்விலிருந்து வித்தியாசப்பட்ட வாழ்வினை அவர்கள் வாழ்கின்றார்கள். அதேவேளை கிராமம் என்பது அனைத்தும் புனிதம் என்பதும் இல்லை.

- **இப்படி கூறுவோமே. நட்பு விருந்தோம்பல் - பணம், மனிதன் - இவற்றுக்கு அவர்கள் தரும் முக்கியத்துவம் எந்தெந்த அளவில் பிரிடுகின்றது.**

றொமான்டிக்காக பார்க்கிறீர்களா? சரி. பல

www.tamilarangam.net

## அந்த ஓலத்தை இவர்கள் செவிமடுக்க தயாராக இல்லை.

சமயங்களில் காசுக்கு சண்டை போட்டுக் கொள்கிறார்கள். நாமும் தான் போட்டுக் கொள்கின்றோம். அவர்கள் 5 பைசா 10 பைசாவுக்காக சண்டை போடுகையில், அதில் ஒரு நியாயம் இருக்கத் தான் செய்கின்றது.

ஆனால் எனக்கு எப்பவும் வியப்பளிக்கும் விசயம் யாதென்றால் பல சந்தர்ப்பங்களில் மாட மாளிகைகளுக்கு பக்கத்திலேயே வசிக்கக் கூடிய இந்த மக்கள் அந்த மாடமாளிகை சுவாத்தியத்தால் எந்த ஓர் பாதிப்பையும் காட்டாதவர்களாக இருக்கின்றார்கள். இந்த நடைபாதை வாழ்க்கை ரொம்ப ரொம்ப போதாததாக இருக்கிறது. இதில் இருந்து ஓர் விடுபாடு – முன்னேற்றம் – இந்த நினைப்பே அவர்களுக்கு வருவதில்லை. அதாவது ஒரு பற்றற்ற நிலை – பேராசை அற்ற போக்கு. .

**சமயத்தில் ஒரு பாடலை பாடும் போக்கும் இருக்கு என்கிறீர்களா?**

ஆமாம். ஆமாம். அதுதான் எனக்கு வியப்பை தருகின்றது.

நான் அவர்களின் திருமணங்களில் கலந்து கொண்டிருக்கின்றேன். பல சமயங்களில் மூடநம்பிக்கைகள் எல்லாம் இருக்கு. சடங்குகள் செய்ய முடியாத நிலையில் பல சடங்குகளை அவர்கள் தவிர்கிறார்கள். ஆனால் அவர்களில் யாருக்கும் ஏதாவது ஒன்றென்றால் ஓடிப்போய் உதவுவது – நேற்று இரண்டு பேர் தலைமுடியை பிடித்திழுந்து சண்டை போட்டிருப்பார்கள். இன்று ஓடிப்போய் உதவி கொள்வார்கள். இது என்னை ரொம்பவும் கவர்ந்திருக்கின்றது. ஆயினும் வருத்தம் என்னவென்றால், இப்படி பாராட்டிக் கொண்டிருப்பது எனக்கு உடன்பாடில்லாத ஓர் விடயமாக இருக்கிறது. உதிரிகளாக இருக்கும் இவர்கள் ஒன்று திரள வேண்டும். அத்திரட்சி, அவர்களுக்கு ஓர் வாழ்வு உண்டு என்பதை உணர்த்தி, அவர்களை ஓர் போராட்ட திட்டம் பொறுத்து அநுசரிக்க வைக்க வேண்டும். ஆனால் இதை எந்த ஓர் இயக்கமும் சரியாக செய்ததாக தெரியவில்லை.

**கண்மணி ராஜம் - பாடலை நீங்கள் தொழுகையோடு இணைத்துள்ளீகள். அதற்கு ஏதேனும் அடிப்படைகள் உண்டா?**

நான் பணியாற்றிய புது கல்லூரி ஓர் முஸ்லீம் கல்லூரியாகும். அந்த கல்லரியில் ஒரு மசூதி உண்டு. அந்த மசூதியில் அதிகாலையில் வாங்கு சத்தம் ஒலிக்கும். அதில் ஒரு வரியின் பொருள் ' தூக்கத்தை விட தொழுகை மேலானது ' என்பதாகும். நபிகள் நாயத்தின் காலத்தில் விடுவிக்கப்பட்ட கறுப்படிமையின் குரல் – இதுதான் அதன் பின்னணி. இனி கல்லூரி விடுதியில் இருக்கும் போது நான் கேட்கும் ஓசை இது. இதே சமயம் பள்ளிவாசல் ஸ்தலத்திற்கு பலரும் தமது கார்களில் வந்து இறங்கி தங்களுடைய தொழுகையை செய்துவிட்டு போனதை நான் காண நேர்ந்தது. வெள்ளி கிழமைகளில் மத்தியான வேளைகளில், கார்களில் வருவதும், அவற்றை பக்கத்து மைதானத்தில் நிறுத்தவதும் ஓர் ஆடம்பர நிகழ்வாகவே நிகழ்ந்தது. இல்லாதவர்கள் வந்து, அந்த வாசலில் இருந்து மைதானம் வழியாக வரிசையாக நிற்பார்கள்.

இந்த ஒரு போக்கையும் நான் பார்த்து, அன்று வெதும்பினேன்.

ஆக ஐந்து வேளை தொழுகை என்பது ஒரு மனித உயிர் படக்கூடிய துன்பத்தை பார்க்க தூண்டவில்லை. பார்க்க செய்யவில்லை.

கண்ணுக்கு முன்னால், சமூகத்தில் இருந்து, ஒடுக்கப்பட்டவர்களின் ஓலம் கேட்கின்றது. அந்த ஓலத்தை இவர்கள் செவிமடுக்க தயாரக இல்லை. அப்படிப்பட்டவர்களின் தொழுகை ஓர் ஆன்மீக வெளிப்பட்டின் அழகாக எனக்கு தோன்றவில்லை. அப்படி இருந்திருதால் எனக்கு ஓர் ஆன்மீக உடன்பாடாவது இருந்திருக்கும்.

குறைந்த பட்சம் தனது சகமனிதனின் துயரத்தை, அவனது வலியை உணர்வதாகக் கூட இல்லையே என்ற கோபமும் என்னுள் இருந்தது. இவ்விடத்தில் இன்னொன்றையும் உங்களுக்கு சொல்லியாக வேண்டும். இந்த இடத்தில் மசூதி இல்லாமல் கோயில் இருந்திருந்தால் தொழுகையை நான் சொல்லியிருக்க மாட்டேன். இந்த கவிதை நிகழக்கூடிய இடம் கோயிலாக இருந்திருந்தால் கோயில் மணியை வைத்து சொல்லியிருப்பேன். இது போக இதை ஒட்டித்தான் முதலமைச்சரின் வீடு வேறு இருக்கின்றது. அவர்கள் பேசியது, " ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன்," மேலும் இந்துராஜ், மற்றும் சோசலிசத்தை அடைந்து விடுவோம் என்பதைப் போல பேசியது – இதெல்லாம் தான் இப்பாடலுக்கான பின்னணியை தந்தன. இருக்கும் இடத்தில் உள்ள அழுகுரல் கேட்காமல் ..!

இந்த சூழலில் தான், பாங்கின் ஒலி இங்கு வரக்கூடியவர்களின் மனதை தீண்ட தவறிற்று என்ற கருத்துப்பட என்னை எழுத வைத்தது.

இது, உண்மையில், சமயத்தை மாத்திரமே நினைத்து மனிதனை மறக்க நினைக்கின்ற அத்தனை பேருக்காகவும் எழுதியது என்பதே சரி.

**இந்த வரிகளால் பெரிதும் பாதிக்கப் பட்டீர்களா. .?**

நிச்சயமாய். 'சொறிநாய் ஒன்று தூக்கம் கலைந்ததால் ஊளையிட்டது' எனும் வரி.. அது இன்றளவும்

### கண்மணி ராஜம்

கண்மணி ராஜம்

"தூக்கத்தைவிடத்
தொழுகை மேலானது"
அல்லா பெரியவன்..
அல்லா பெரியவன்..

நெருப்பு விரல்கள் .
நிலத்து வீணையில்
வெயில் கீதம்
மீட்டும் வேளைக்கு
முந்திய கருக்கலில்
அந்தக் கல்லூரிக்குள்ளே
மசூதியில் இருந்து
அழைப்பு வந்தது

வெளியே
நீண்ட வீதி..
அதுதான்
பீட்டர் சாலை.. பெரிய சாலை
அங்கே–
சொறி நாய் ஒன்று
தூக்கம் கலைந்ததால்
ஊளையிட்டது எதிரொலிபோல

ஆதத்தின் குழந்தைகள்
அந்தகாரத்தின் கைதிகளாய்
இன்னும் கண்மூடிக் கிடந்தனர்
"தூக்கத்தை விடத்
தொழுகை மேலானது.."
. .. .. .. ..

பீட்டர்சாலை
பெரிய சாலை
.. .. .. .. ..

தஞ்சை நகரின்
பெரிய கோயிலும்
மழையில் நனைந்தது..
வாசலில் நிற்கும்
ராஜராஜனின் சிலையும்
நனைந்தது
மக்களாட்சியின்
மகோன்னதம் பேசும்
மாண்புகள் எல்லாம்
மழையில் நனைந்த
ராஜராஜனின்
சிலைக்காக வருந்தினர்

www.tamilarangam.net

# அவர்கள் யாவரையும் கௌரவப்படுத்த பாடியது இது

முஸ்லீம்களின் கடுமையான கோபத்துக்கு உள்ளாகி இருக்கின்றது. பலர் என்னிடம் நேரடியாக கேட்காமல் பாய்ந்திருக்கின்றார்கள் வெளியில். நேரடியாக விளக்கம் கேட்டு வரவில்லை. இதை நான் ஓர் கூட்டத்தில் விளங்கப்படுத்த நேர்ந்தது.

பாங்கு ஓசையை இழிவு படுத்துவது எனது நோக்கமல்ல. ஆனால் மனிதவுடைய துன்ப கதறலை, அவனுடைய அவல அழுகையை, அவனுடைய பெருமூச்சை காணமுடியாது நீங்கள் போவீர்களேயானால், அப்போது, இது ஓர் ஊளையின் ஓசையாகவே எனக்கு கேட்கும் என்றே கூறினேன். இதை நான் கிறிஸ்தவ இலக்கிய இயக்கத்தில் உரையாற்றும் போது கூறினேன். அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் அதனை கட்டுரைப்புத்தகமாக வெளியிடும் போது அந்த பந்தியை நீக்கிவிட்டார்கள். அதனை வெளியிடுவதற்கு கூட அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. ஆனால் எனது நோக்கம் இது தான். இன்றும் நாளையும் கூட இதற்கான ஓர் மறைமுகமான அச்சுறுத்தல் வந்து கொண்டிருக்கிறது. நான் எழுதிய போது யாரும் வந்து பயமுறுத்தவில்லை. அதுவும் நான் இப்படித் தான் எழுதினேன் என்று கூட்டத்தில் வெளிப்படையாக சொல்லிவேறு இருக்கின்றேன். இதில் எனக்கு வருத்தமில்லை. ஆனால் இது தொடர்ந்தும் பலருக்கு தொடர்ச்சியான வருத்தத்தை தருமானால் ~ அந்த இரண்டு வரிகளையும் நீக்கலாம் என நான் முடிவு செய்துள்ளேன்.

- **அடுத்து உங்களுடைய கவிதைகளில் ஒன்றான <u>பாடகன் வருகிறான்</u> - இதுவும் சற்றே வித்தியாசமான ஓர் பாடலாக தென்படுகின்றது. இப்பாடல் எழுந்த பின்னணியை கூறுவீர்களா?**

இங்கே நான் தனி ஒரு கவிஞனை மாத்திரம் பார்க்கவில்லை.

சமூக மாற்றத்திற்காக போராடிய புரட்சியாளர்கள் தமது இளமையில் மற்றவர்கள் அனுபவிக்க துடிக்கும் இன்பங்களை எல்லாம் மறந்து ஓர் துறவியைப் போல வாழ்வை மேற்கொள்கின்றார்கள். துறவிக்கு சமூகப் பற்று கிடையாது. ஆனால் இவர்களுக்கு சமூகத்தின் மீது ஆழ்ந்த பற்றுதல் இருக்கின்றது. அந்த பற்று காரணமாகவே போராட்டத்தையும் அதன் துன்பங்களையும் ஏற்று சகித்துக் கொண்டு போகின்றார்கள். அவர்களை, இங்கே பாடகனாக உருவப்படுத்திப் பாடினேன். இதில் நானும் இருக்கலாம். ஆனால் நான் மாத்திரமே இல்லை.

- **எந்த காலப்பகுதியில் இப்பாடலை எழுதினீர்கள் எனக் கூறமுடியுமா?**

போராட்டங்கள் வலிமையுற்ற காலத்தில்.

- **இந்த ' பாடகன் வருகின்றான் ' எனும் உருவகத்திற்கு நிறையவே தோழர்களை நீங்கள் சந்தித்திருக்கக் கூடும். அதில், முக்கியமான தோழர்களாக யாரை நீங்கள் இனங்காணக் கூடும்?**

அந்த சமயத்தில் நான் சந்தித்திருந்த தோழர்களில் அநேகர் எனக்கு முந்திய காலகட்டத்தை சேர்ந்தவர்கள். இந்திய போராட்ட காலகட்டத்தைச் சேர்ந்தவர்கள்.. பகவத்சிங் .. அவர் நினைவாகத் தான் என் மகனுக்கு சூட்டினேன். இது என் மனதில் பதிந்து போன நிகழ்வு.

அதே போன்று, நான் வாழ்ந்த காலத்தில் மிக கடுமையாக போராடியவர்கள் இருந்தார்கள்.

தனிப்பட்ட வாழ்க்கையை விட பொது வாழ்க்கையில் வர்க்கப் போராட்டத்தில் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றினார்கள்.

அதே வேளை, இக்குறிப்பிட்ட காலகட்டம் நக்சல்பாரி இயக்கம் உருவாகிக் கொண்டிருந்த காலகட்டம். பலர் தலைமறைவாகிப் போய்க் கொண்டிருந்தார்கள் என நான் கேள்விப் பட்டுக் கொண்டிருந்த காலகட்டம். அவ்வேளை எனக்கு அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவர்கள் குடும்பத்தைவிட்டு பிரிகின்றார்கள், வீட்டைவிட்டு பிரிகின்றார்கள் - என்பதெல்லாம் எனது மனதை ஆக்கிரமித்த விவகாரங்கள். எனவே எழுதினேன். தனிப்பட்ட ஒருவரை நான் சொல்லமுடியாது. ஒரு வரலாற்றின் பதிவிது என யாரும் அழைக்கலாம்.

வரலாற்றை முன்னகர்த்த, மனித விடுதலைக்காக யார் யாரெல்லாம் வந்து தங்கள் தியாகத்தால் முன் நின்றார்களோ அவர்கள் யாவரையும் கௌரவப்படுத்த பாடியது இது.

- **பயண களைப்புக்கு**
  **நிழல் கொடுத்தால்**
  **-ஒரு**
  **பாடல் தருகின்றான்**

- **இப்படி போகின்ற இளைஞர்க்கு, மக்களே, ஆதரவு தாருங்கள், நிழல் தருவீர் - எனும் வேண்டுகோளை விதைத்து தந்துள்ளீர்கள்?**

ஆம். அவர்கள் கவிஞர்களும் தான். தங்கள் கனவிலே கவிதையை கொண்டவர்கள். **வாலிப நாட்களின் காலைகளில் அவன் வாழ்வில் மகிழ்ந்தர்னா - தன் வசந்த பூமியை நினைப்பதெல்லாம் - ஒரு மயக்கம் கொண்டானா.**

இப்படிப் பட்டவர்கள். நிச்சயமாக, விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவு தரப்பட வேண்டும் என நான் நிச்சயமாக நினைக்கின்றேன்.

## கண்மணி ராஜம்

பீட்டர் சாலையில்
பெய்த மழையால்
ராஜம் என்ற
இந்நாட்டு ராணி
(எல்லோரும் இந்நாட்டு மன்னர் – பாரதி)
ராஜராஜனின்
சிலைபோல் நனைந்தாள

சாலையில் எழுதப்பட்ட
உயிர்க்காவியத்தைப்
பேழையில் வைத்துப்
பேணாத காரணத்தால்
மழையின் நீர்க்கரம்
அழித்துவிட்டது
- - - - -
பண்பாடு மிக்க
பாரதநாட்டின்
மானுடம் மட்டுந்தான்
மலிவாய்ப் போனது

வாடையில் வருந்திய
மயிலுக்காகப்
போர்வையைத் தந்த
புண்ணியபூமியில்
மனிதர்கள் மட்டும்
வாடையில் விறைத்தனர்.

பாஞ்சாலி என்ற
ராஜகுமாரிக்குத்தான்
புரமாத்மாவும்
பட்டாடை கொடுப்பான்
ராஜத்திற்கு ஒரு
பருத்தியாடை கொடுப்பானா?

ராஜராஜனின்
சிலைக்காக வருந்துகிறார்
ராஜரானின்
சிலையின் உள்ளே
நரம்புகள் உண்டா?
நாளங்கள் உண்டா?
இதயத்துடிப்பையேனும்
கேட்டதுண்டா?
சிலையாகுமுன்னர்
ஜீவித்திருந்த இம்மன்னன்
என்னத்தைச் செய்து
கிழித்து விட்டானாம்?
- - - - -
ஓணம் கெட்டது
தீர்த்தக் கரைகளில்
ராஜத்தின் பிணங்கள்!
மங்களம் பாடுவோம்
மங்களம் பாடுவோம்
தூக்கத்தை விடத்
தொழுகை மேலானது
மாநில சுயாட்சி
அடைந்தே தீருவோம்
ஜெயஹே.. ஜெயஹே..
ஜெயஜெயஹே!


www.tamilarangam.net

# இந்த சமாதியிலே...

இன்குலாப்

இந்தச் சமாதியிலே –
என்
இதயத்தை
நான்விதைத்தேன்
இந்தச் சமாதியின்
மேல் – என்
இருவிழி
நீர்தெளித்தேன்!

சின்னப் படங்களைப்போல் –
மலர்ந்த
செடியின் மகுடங்களே!
என்ன கனவுகளால் –
உங்கள்
வண்ண வண்ணங்களோ?



வானச் சன்னதியில் –
வெளிச்ச
வண்ணத் தீபங்களாய்
மானின் கல்லறையில் –
அழகாய்
மலரும் புள்ளிகளே!

எந்த ஆசைகளால் –
நீங்கள்
இந்தவிதம் மலர்ந்தீர்?
எந்த ஏக்கங்களால் –
நீங்கள்
இந்தவிதம் உதிர்ந்தீர்?

## சென்ற நூற்றாண்டின் படுபாதகமான செயல் – கமிஷன்

ருவான்டா படுகொலைகள் தொடர்பில் ஆப்ரிக்க ஒற்றுமைக்கான ஸ்தாபனம் (*Organaization for African Unity*) நியமித்த சர்வதேச கமிஷன் தனது விசாரணை முடித்து அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.

### 800,000 டுட்சி இனத்தவர் படுகொலை

சென்ற நூற்றாண்டின் படுபாதகமான செயலென மேற்படி படுகொலைகளை வர்ணித்துள்ள

மேற்படி கமிஷனானது தனது அறிக்கையில், படுகொலைசெய்யப்பட்ட 800,000 டுட்சி

### ஐக்கிய நாட்டு சபையின் வாய் பிளப்பு!

இனத்து மக்களின் இறப்புக்கு அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஓரளவுக்கு பங்குதாரிகளாக இருந்துள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

கமிஷன், ருட்சி (*TUTSI*) சிறுபான்மை இனத்தவர் பெரும்பான்மை இன உட்டு (*HUTU*) அரசாங்கத்தால் திட்டமிட்டு அழித்தொழிக்கப்பட்டு கொண்டிருக்கையில் ஐக்கிய நாட்டு பாதுகாப்புச்சபை உறுப்பினர் இக்கொலைகள் நடக்கும் முன்பே இதுகுறித்து போதிய அறிவை பெற்றிருந்தாலும் ஒன்றும் பேசாது வாளாதிருந்ததை சுட்டிகாட்டியது.

மேற்படி அறிக்கை, மேற்படி கொலைகள் நிகழ்வதற்கான சூழலில் அமெரிக்கா வேண்டுமென்றே ருவண்டாவில் இருந்த ஐக்கிய நாட்டுபடைகளின் எண்ணிக்கையை குறைத்ததையும், ருவண்டா அரசாங்கத்தின் மீது போதிய செல்வாக்கு கொண்டிருந்த பிரான்ஸ் அரசானது கொலைகளை நிறுத்த எந்த ஒரு பிரயத்தனம் செய்யாதது மாத்திரமல்ல – ருவண்டாவின் அரசியல், ராணுவ தலைமைகளை எல்லையைக் கடந்து சாயரே நாட்டுக்குச் செல்ல அனுமதித்ததையும் மேற்படி தப்புவிப்பு மத்திய ஆபிரிக்காவின் இன்று தொடர்ந்து கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு முக்கிய காரணியாக வழி வகுத்துள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

ருவண்டா படுகொலையின் போது தமது

### ஏனைய நாடுகள் பங்குதாரிகள் !!

கடமைகளில் தவறிய பெருந்தவறைப் புரிந்த ஏனைய சக்திகளாக, மேற்படி அறிக்கை, ஐக்கிய நாட்டு செயலகத்தையும், பெல்ஜியத்தையும், ரோமன் கத்தோலிக்க திருச்சபையையும் இனங்காட்டியுள்ளது. இவற்றில் பிரான்ஸ் அரசும் கத்தோலிக்க திருச்சபையையும் தவிர ஏனையவை – பெயருக்காகவேனும் சர்வதேச சமூகத்திடம் மன்னிப்பு கோரியுள்ளது குறிப்பிடத்தக்கது. (*HINDU* 9.07.2000)

www.tamilarangam.net

# இழந்த காதலை சொல்வது கூட ஓர் எதிர்ப்பொலித்தான்

**• இந்த சமாதியிலே ..? - இதுவும் ஓர் முக்கியமான கவிதையாகப் படுகிறன்றது. இது இழந்து போன காதல் தொடர்பிலானது என கருதுவோரும் உண்டு.**

இருக்கலாம். ஆனால் இது என்னுடைய காதல் மாத்திரம் சம்பந்தப்பட்டது அல்ல. பலர் இன்று உண்மையாக நேசிப்பது, சமூக ஏற்றத்தாழ்வுகளால் இழந்தவையாக தீர்க்கப்படுகின்றது. இவையெல்லாம் தொடர்பு படுத்திப் பார்க்க கூடியபதே இந்த பாடல்.

**• அதாவது பாரதி தாசன் கூறியது போல கஞ்சியை மாத்திரமல்ல, மாறாக வாழ்வின் மற்றும் பல மென்மையான பல உன்னதங்களையும் - காதல் உட்பட - சேர்த்தே தான் இச்சமூகம் பறித்தள்ளது என்பதாகுமா..**

இங்கே இழந்து போன ஓர் நேசம் – பிரியம் சம்பந்தமானது இப்பாடல். இப்படி எனக்கு உருகிப் பாடக்கூடிய காதலி, என் வாழ்வில் இல்லாதிருந்திருக்கலாம். ஆனால் காதல் என்பது பல பரிமாணங்களைக் கொண்டது.

**தனி ஓர் இழப்பை பாடும் போது கூட, எனக்குள், உள்ளுக்குள் இருக்கக் கூடிய ஓர் கருத்து தளத்தில் முட்டி மோதியே இவை வெளிப்படும்.**

## பாடகன் வருகிறான்

பாலைவனத்தின் சோலைகளே
ஒரு
பாடகன் வருகின்றான்
அவன்
பயணக் களைப்புக்கு
நிழல் கொடுத்தால் –
ஒரு
பாடல் தருகின்றான்!

வாலிப நாட்களின்
காலைகளில் –
அவன்
வாழ்வில் மகிழ்ந்தானா?
தன்
வசந்த பூமியை
நினைப்பதல்லால் ஒரு
மயக்கம் கொண்டானா?

சோலை மலர்களின்
கூட்டங்களே
என்
சொந்த நாட்டினரே
உம்
தோளை உயர்த்தெனக்
கோழைகள் ஆதிக்கத்
தொல்லையை ஓட்டுபவன்

நீலவானத்திற் கப்பால்
எதையோ
நினைத்துப் போகின்றான்
நீண்ட உலகத்
துயர்களைய நெஞ்சை
நனைத்துப் போகின்றான்!

பாலைவனத்தின்
சோலைகளே ஒரு
பாடகன் வருகின்றான்.. -

**• அதாவது ஓர் அக உணர்வு கவிதை பல்வேறு பரிமாணங்களை எடுக்கக் கூடியதாக உளது என்கிறீகளா? அதாவது குறிப்பிட்ட அனுபவம் புனிதப் படுத்தக் கூடிய தூய்மை நிலையை எட்டும் போது -அது காதல் அனுபவமாக இருப்பினும் கூட உங்களின் 'பாடகன் வருகின்றான;' போன்று ஒரு தோழனை இழந்து போன வேதனை ராகத்தை அது மீட்ட கூடிய ஒன்றாக உருப்பெறுகின்றது என்கிறீகளா?**

நிச்சயமாக. ஏனெனில் இழந்த காதலை சொல்வது கூட ஓர் எதிர்ப்பொலி என்றேதான் நான் கருதுகின்றேன். மேலும் தனி ஓர் இழப்பை பாடும் போது கூட, எனக்குள், உள்ளுக்குள் இருக்கக் கூடிய ஓர் கருத்து தளத்தில் முட்டி மோதியே இவை வெளிப்படும்.

**• புரிகின்றது. உங்களுக்கு நேசமாக இருக்கக் கூடிய எல்லா விசயங்களின் ஸ்பரிசமும் அப்பாடலில் அடங்கியிருக்கக் கூடும். இதே போன்று, 'நீங்கள் என்னை கம்யூனிஸ்ட்டாக்கினீர்கள்' என்ற பாடல் ஓர் முக்கியமான அரசியல் கவிதையாகப் படுகின்றது. குறிப்பிட்ட காலத்தில் இருக்கக் கூடிய அரசியல் போக்கை தொட்டுக் காட்டுவதாகவும் அதில் நீங்கள் ஆகர்சிக்கப்படும் விதம் குறித்தும், கூறி, மேலும் சிந்தன் என்னும் ஒருவரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளீர்கள். அவரின் பின்னணி யாது?**

அவர் மார்க்ஸிஸ்ட் கட்சியின் (CPI –M) தொழில் சங்க தலைவர்களில் முக்கியமானவர். வி.பி சிந்தன் என்று பேர். சிம்சன் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் அவர். அவர், எனக்கு நெருங்கிய தோழராக இருந்தார். என்னை ஊக்குவித்து, என்னை நிறைய எழுத தூண்டினார். அவரது தாய்மொழி மலையாளம். இருந்தும் தமிழ் மொழியில் வரக்கூடிய சிற்றிலக்கியத்தில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். நன்றாய் பாராட்டுவார். பொதுவில் கம்யூனிஸ்ட்டுகள் பாரதியாரை தாண்டி வரமாட்டார்கள். சிந்தன்தான் பாரதிதாசனையும் முதன்மைப்படுத்த வேண்டும் என இடையறாது கம்யூனிஸ்டுகளிடமும் மார்க்ஸிஸ்ட் பார்ட்டியிடமும் வலியுறுத்தி வந்தவர். இப்படி பல வழிகளிலும் இவர் எனக்கு வலுவூட்டக்கூடியவராக இருந்தார். இவர் இந்த போராட்டத்தின் போது கடுமையாக தாக்கப்பட்டார்.

**வி.பி சிந்தன் என்று பேர். சிம்சன் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் என்னை ஊக்குவித்து, என்னை நிறைய எழுத தூண்டினார். அவரது தாய்மொழி மலையாளம்.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்கள் என்னை கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்...

இன்குலாப்

**பேட்டியின் முக்கியத்துவம் குறித்து இக்கவிதை பிரசுரமாகிறது.**

கூட்டம் தொடங்கியது!
குசேலர் பேசினார்:
சிந்தன் தமது
சிந்தனையை விரித்தார்
அது–
நேப்பியர் பூங்காவில்
நேற்று நடந்தது
அப்பொழுது –
இரவுப் பூக்கள்
இதயம் திறந்து
தென்றல் சொன்ன
செய்தியைக் கேட்டன.

அவர்கள்

சிம்சன் தொழிலாளர்
இரத்தத் துளிகளை
நைவேத்யம் கேட்கும்
நவீன காலத்துக்
கோட்டை தெய்வங்களுக்கு
எதிர்க்குரல் கொடுத்தார்கள்
.. .. .. .. ..

புராணங்கள் சொல்லும்
பொய்மைக் கடவுள் கூடப்
பித்தன் என்றும்
பேயன் என்றும்
பக்தன் சொன்னதைப்
பொறுத்துக் கொண்டனவாம்

பாராளு மன்றப்
படுதா மறைவில்
ஐசுவரிய தேவதைகளை
ஆலிங்கனம் செய்வோர்
எதிர்ப்புக் குரல்கேட்டு
எரிச்சல் படுகிறார்கள்..

ஆனால்

கலைஞர் என்றும்
உலகமகாகவி என்றும்
பட்ட மந்திரங்களில்
பரவசப்படுகிறார்கள்

உதயகுமாரின்
உதிரப் புனலில்
கால்களை நனைத்த
கருணைக் கடவுள்கள்
டாக்ரர் பட்டங்களுக்கு
வாழ்க்கைப்படுகிறார்கள்!

தான்பெற்ற
பிள்ளையைத்
தகப்பன் மறுத்த
விசுவாமித்திர
விபரீதம் நடந்தது
தி.மு.க வின்
தெய்வேந்திர ஆட்சியில்தான்

அன்று
விஸ்வாமித்ரன்
சகுந்தலையை மறுத்தான்
இன்று
உதயகுமாரின் தந்தை
பிள்ளையை மறுக்கிறார்

நினைத்துப் பார்க்கிறேன்!
நெஞ்சம் நிமிர்கிறது!
வயிற்றில் பசியின் கை
கலகம் வளர்கையில்
போராடத் துணியாமல்
போதங் கேட்டுப்
படுத்துத் தூங்க
நாங்கள் பரமாத்மாக்கள் அல்லவே!

வேர்வைக் காவியத்தில்
வெந் தீ வைக்க
காட்டூர் தர்பார்
கங்கணம் கட்டியது!

நாங்கள்
வேலை நிறுத்த
எரிமலைகளாய் வெடித்தோம்
சைக்கிள் செயினைச்
சாட்டைகளாக்கி
காட்டூரார் ஏவிய
காலிகள் அடித்தார்கள்
கருணாநிதியின்
காவல் துறையோ
தடியடிப் பிரயோக
தர்மம் செய்தது

எங்கள் வீடுகளில்
இருவிழி சிந்தினோம்..
தொழிற்சாலைக்குள்ளே
இரத்தம் சிந்தினோம்..
கருங்காலிகள்
எங்கள்மீது கைவைத்தபோது

ஐந்து விரல்களின்
ஐக்கியமானோம்
மூர்க்கத்தனமாய்
பொலீஸார் மோதினார்கள்
நாங்கள்
எஃகுப் பாறைகளாய்
இறுகி நின்றோம்
.. .. .. .. ..

அடடா..
"போராடும் போதுதான்
மனிதன் பிறக்கிறான்"
நான்தான்
அரசியலை விரும்பாத
சராசரி ஆயிற்றே!
உழைப்பைப் பலிகொடுத்து
உரிமைப் பட்டயம்பெறாத
நாட்கள் எனது
நினைவில் நகர்கின்றன.
. .. .. ..

சிந்தனைக் குளத்தில்
கேள்வித் தூண்டில்
விடியலில் வீட்டுக்கு
வெளியே வந்தேன்
சுவரில் ஒரு
சினிமா போஸ்டர்–
நீங்கள் என்னை
கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்,

தூண்டிலை ஏதுவோ
சுண்டி இழுக்கிறது
வானத்தைப் பார்த்தேன்..
சிவந்து கிடக்கிறது
வைகறைப் பறவை
சிறகு விரிக்கிறது!
.. .. .. ..

வேலை நிறுத்தப்
போராட்டக் களத்தில்
நிராயுத பாணிகளாய்
நின்றவர் மீது
ரோமாபுரிப் பாண்டியனின்
காவலாளிகள்
கற்கால நாகரிகத்தின்
கைவரிசையைக்
காட்டி விட்டார்கள்

சிந்தன் குசேலர்
சுந்தரம் சிந்திய
இரத்த வெள்ளம்
கானல் நீராகி
மறையுமா?
இல்லை
ஒரு பிரளயத்தைப் பிரசவிக்கும்!

தொழிலாளர் வர்க்கத்தின்
தூய புதல்வர்கள்மேல்
கைவைக்கத் துணிந்த
காட்டுமிராண்டிகளே:
இந்த ரத்தத்தின்
ஈரம் உலருமுன்
எங்கள்
தோழர்கள்
உங்களைச்
சூறையாட வருவர்ர்கள்!

பெருமூச்சு ஒத்திகையில்
பூரணம் பெற்ற
புரட்சிப்புயல் ஒன்று
புறப்பட்டு வருகிறது
தொழிலாளர் விரோத
துரோக உரங்களில் வளர்ந்து
விஸ்வரூப நிழல்காட்டும்
நச்சுக்கொடிகளே!
சட்டத்தின் கருஞ்சிறகால்
செஞ்சுடர்ச் சூரியனை
மூட நினைக்கும்
முட்டாள் வௌவால்களே
அந்தைகள் கூட்டமே!
இருளின் ஆத்மாக்களே!
நீங்கள்–
சூரியனிலிருந்து
புறப்பட்ட சூறாவளியால்
சரித்திர மேட்டில் சாம்பலாவீர்கள்!

புரட்சி ஓங்குக! புரட்சி ஓங்குக!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்டை உடைக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் ஆழ்த்தப்பட்டார்

**• இது எது சம்பந்தமான போராட்டம்.**

சிம்சன் தொழிற்சங்க போராட்டம். ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் போன்ற கொள்கைகளை முன் வைத்து நடத்தப்பட்ட போராட்டம். அந்தவேளை, கருணாநிதி இரும்புக் கரம் கொண்டு போராட்டத்தை அடக்கி போராட்டத்தை மேலும் சிக்கலாக்கி விட்டார். கடுமையான தாக்குதல் நடந்தது. அதனை கண்டித்து எழுதினேன்.

**• இதில்,**

உதய குமாரின்
உதிரப் புனலில்
கால்களை நனைத்த
கருணைக்கடவுள்கள்
டாக்டர் பட்டங்களுக்கு
வாழ்க்கைப்படுகிறார்கள் ..

**என வந்து போகின்றதே. யார் அந்த உதய குமார்.**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கருணாநிதிக்கு டாக்டர் பட்டம் கொடுக்க ஏற்பாடாகி வரவேற்பு நடந்தது. அவர் வரவை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அப்போது காவல் துறையினர் கடுமையான தாக்குதலை மேற்கொண்ட போது அடிவாங்கிய மாணவர்களில் ஒருவன் குளத்தில் விழுந்து இறந்து போனான். அவனின் சடலத்தை பிறகே கண்டெடுத்தனர். கண்டெடுத்ததும், அந்த சடலம் மாணவனது இல்லை என்று காவல் துறையினர் கதை மூட்டினார்கள். உதயகுமாரின் தகப்பனை கூட்டிவந்து பிள்ளை இல்லை என்று சொல்லச் சொன்னார்கள். அவரும் சொன்னார். இது என்னை கடுமையாக பாதித்தது. அதாவது , இந்த மாதிரி, எல்லா துறைகளிலுமே பாசிச போக்குக் கொண்டவராக விளங்குகின்றார் என்ற தாக்கத்திலேயே இதனை எழுதினேன். அதனால் உதயகுமாரனையும் இதில் சேர்த்தேன்.

(மிகுதி அடுத்த இதழில்)

கடந்த ஜுன் 2இல், அமெரிக்க தொழில் திணைக்களம் வெளியிட்ட அறிக்கைகளின் பிரகாரம் அமெரிக்காவில் வேலை இல்லாத் திண்டாட்டம் 4.1 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த ஒன்பது வருடங்களில் இதுவே மோசமான புள்ளி விபரம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மே வரையில் (5 மாதங்களில் மாத்திரம்) 116,000 பேர் தொழில் இழந்து தெருவுக்கு வர நிர்பந்திக்கப்பட்டனர்.
NEW YORK TIMES

வி.பி.சிந்தன்
என்னை ஊக்குவித்து
என்னை நிறைய எழுத
தூண்டினார்..
~ இன்குலாப்



1967 ஆம் ஆண்டில், தி.மு.க. அமைச்சரவை அமைத்த சிறிது காலத்திற்குள் நகரின் தமிழகத் தொழிற்சங்க இயக்கம், அதிலும் குறிப்பாக சென்னை நகரின் தொழிற்சங்க இயக்கம் முதலாளிகளின் பெரும் தாக்குதலை சந்திக்க வேண்டியிருந்தது. அது, 1971ஆம் ஆண்டுக்குப் பின் அதிகரிக்கத் தொடங்கியது. சிம்சன் தொழிலாளர் சங்கத்தை எவ்வாறாவது கைப்பற்றிவிட வேண்டுமென்று ஆளும்கட்சியை சேர்ந்தவர்கள் அடாத செயல்களில் இறங்கினர்.. நிர்வாகம் புகுத்தும் வேலை பளுவை செய்ய மறுக்கும் தொழிலாளிகளை பெஞ்சு மீது நிற்க வைத்து பெல்ட்டால் அடிப்பது, தொழிலாளிகளை அடித்து மிரட்டி பணிய வைப்பது – இவற்றை நோக்கமாக கொண்ட பிரதாபசந்திரன், சிம்சன் கண்டினில், தொழிலாளருடன் நடந்த அடிதடியில் மாண்டு போனார்.

பிரதாபசந்திரனின் இறுதி நிகழ்ச்சியில் பேசிய எம்.ஜி.ஆர் 'கம்யூனிஸ்ட்டுக்களுடைய கருவிலிருக்கும் குழந்தை உட்பட அனைவரையும் பூண்டோடு ஒழிப்போம்' என பேசி கம்யூனிஸ்ட்டுகள் மீது வெறியூட்டி விட்டார்.

இதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொடிக்கம்பங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன. கூட்டங்கள் நடத்தவிடாமல் செய்யப்பட்டன. குசேலர், விபி.சிந்தன் ஆகிய முன்னணி தொழிலாளர் தலைவர்களை கொலை செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டன. தொடர்ந்து, ஜுலை 18ம் திகதி, ஓர் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள சென்ற சிந்தன் இடையில் மறித்துத் தாக்கப்பட்டார். இறந்துவிட்டார் என நினைத்து அவர் 'உடலை' எதிரிகள் விட்டுச் சென்றனர். கிட்டதட்ட ஒரு மாதகால ஜீவ போராட்டத்தை வைத்தியசாலையில் கழித்த சிந்தனை வரவேற்க பல தொழிலாளர், தலைவர்களின் தலைமையில் கூட்டம் அலைமோதிய போது, இரண்டே வரிகள் பேசக்கூடியதாகவே அவரது உடல்நிலை இருந்தது. தன் உடல் பலவீனத்தைப் பொறுத்து கொண்டு, தொழிலாளர்களின் அன்பு கருதி மிகுந்த பிரயாசையோடு அவர் பேசிய இரண்டு வரிகள்: 'தோழர்களே, அதிக நேரம் பேச முடியாமலிருக்கிறேன். ஏராளமான ரத்தம் சிந்தப்பட்டதால் நான் மிகவும் பலவீனமாக இருக்கிறேன். மிச்சமிருக்கும் ரத்தமும் சதையும் உங்களுக்காகத்தான்.'

1948 காலப்பகுதியில் கம்யூனிஸ்ட் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட போது தலைமறைவு வாழ்வை மேற்கொண்ட சிந்தன் மூன்றாண்டு சிறைவாசத்தின் பின் 1951 இல் மீண்டார். சிறையில் பல சித்திரவதைகளுக்கு ஆளானர்.

மண்டை உடைக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் ஆழ்த்தப்பட்டார். இக்காலப்பகுதியில் சிறைகளில் கம்யூனிஸ்ட்டுக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சேலம் சிறையில் 22 கம்யூனிஸ்ட்டுக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடலூர் சிறையில் இருவர் கொல்லப்பட்டனர். இதை அன்றைய அரசு திட்டமிட்டு, உணர்வு பூர்வமாகவே செய்தது. (இதற்கு முன் 1940இல் இருவருடங்கள் சிறையில்) 1951 இல் விடுதலையான சிந்தன் தனது இறுதிக்காலம் வரை தொழிலாளர்களிடை, 'செல்வாக்கு கொண்டவராய் விளங்கினார்.

*(என்.ராமகிருஷ்ணன் எழுதிய வி.வி.சிந்தன் எனும் நூலில் இருந்து..)*

# அமெரிக்க குழந்தைகளுக்கு வரப்பிரசாதம்

**வருடத்துக்கு**
**10,000 வன்முறைக் காட்சிகள் !**
**ஒரு மணித்தியாலத்தில் எட்டுபாலியல் காட்சிகள்!!**
**விளைவு .. ?**

அண்மைக் கால அமெரிக்காவில் சிறுவர்கள் மேற்கொள்ளும் வன்முறை மிகப்பெரும் தலையிடியாக உருவாகியுள்ளதை பெற்றோருக்காக வெளியீடப்படும் ஓர் அமெரிக்க பத்திரிகை – SUBURBAN PARENT ZONE 2 தனது Sept. 1999 இதழில் விசனத்துடன் தெரிவித்திருந்தது.

15க்கும் 24க்கும் இடைப்பட்ட இளம் வயதுடையோர்களின் இறப்புக்களுக்கு மேற்பட்டி இளைஞர் வன்முறை கலாச்சாரமே இரண்டாவது காரணியாக உருப்பெற்றுள்ளதாக மேற்படி இதழ் சுட்டி காட்டியுள்ளது.

Youth Violence எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள தனது கட்டுரை ஒன்றில் அமெரிக்க குழந்தைகள் கிழமைக்கு 16–17 மணித்தியாலங்களுக்கு குறையாமல் தொலைக்காட்சி பார்ப்பதையும், ஒரு குழந்தையானது வருடத்தில் 10000 த்துக்கு குறைவில்லாத வரையில் வன்முறைக் காட்சிகளை கண்டு களிப்பதையும், அமெரிக்க தொலைக்காட்சிகளில் குடும்ப நேரத்தில் (FAMILY HOUR) ஒரு மணித்தியாலத்துக்குள் எட்டு பாலியல் காட்சிகள் காட்டப் பெறுகின்றன என்பது போன்ற விலாவாரியான தகவல்களை மேற்படி பத்திரிக்கை தந்துள்ளது.

மேலும் குறிப்பிட்ட பத்திரிக்கை சிறுவர்கள் தொடர்பான பின்வரும் சம்பவங்களை பாரதூரமானதாக கருதி தொகுத்து தனது வாசக பெற்றோர்களுக்கு அறியத்தந்துள்ளது.:

1. **Sept** 1995 : காரில் சென்ற ஓர் குடும்பத்தினர் பிழையான முறையில் காரை ஓர் வளைவில் திருப்பி எடுத்தனர் என்பதற்காக அருகே இருந்த கும்பல் ஒன்று காரை குண்டுகளால் துளைத்தெடுத்ததில் ஒரு மூன்று வயது குழந்தை பலியானாள்.

2. **Nov 1996** : டெல்வாரே எனும் இடத்தில் உள்ள லாட்ஜ் ஒன்றில் ஓர் குழந்தை பிரசவிக்கப்பட்டது. அதன் டீன்ஏஜ் பெற்றோர்கள் அதை அடித்துக் கொலை செய்து, ஓர் பிளாஸ்ரிக் பைக்குள் போட்டு, குப்பைத் தொட்டியுள் எறிந்து விட்டுச் சென்றனர்.




3. **June 1997** : ஓர் டீன்ஏஜ் பெண், நியுயோர்க்கில், தனது பாடசாலை நடன விருந்தின்போது, ஓர் குழந்தையை குளியலறையில் பெற்றெடுத்த பின் அதை குப்பைத் தொட்டியுள் வீசி எறிந்த பின் தொடர்ந்து நடன நிகழ்ச்சியில் பங்கேற்றாள்.

4. **Oct 1997** : **Pearl MI** எனும் இடத்தில் 16 வயது பையன் தனது தாயை கொன்றதன் பின், தன் பாடசாலை சென்று ஒன்பது மாணவர்களை சுட்டுத் தீர்த்தான். இருவர் கொல்லப் பட்டனர். அவர்களில் ஒருத்தி அவனது காதலி.

5. **Dec 1997** : WEST, KY எனும் இடத்தில் அமைந்துள்ள HEATH மேல்நிலை பள்ளியில் ஒரு சிறுவன் பிரார்த்தனை கூட்டத்தின் போது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டான். அவனது வகுப்பு நண்பர்களில் மூவர் காலி. ஐவர் காயமடைந்தனர்.

6. **April 1998** : நியுயோர்க்கைச் சேர்ந்த Yonkers எனும் இடத்தில் 15 வயது சிறுமி தனது கர்ப்பிணி ஆசிரியையை சம்மட்டியால் அடித்து அவளது மண்டை ஓடுகளை பல இடங்களில் முறியுமாறு செய்தாள்.

7. **April 1999** : இரு பதின் வயது சிறுவர்கள் தங்களை TRENCHCOAT MAFIA என அழைத்துக் கொண்டு லிட்டில்டனை சேர்ந்த கொலம்பிய மேல் நிலைப்பள்ளியில் துப்பாக்கிப் பிரயோகத்தை சரமாரியாக மேற்கொண்டதில் ஒரு ஆசிரியரும் 12 மாணவர்களும் ஸ்தலத்தில் கொல்லப் பட்டனர்.

இதெல்லாம் வெறுமனே பனிமலையின் ஒரு நுனிதான் இதை விட படுபயங்கரமான நிகழ்வுகள் நாளாந்தம் அமெரிக்கவின் பல்வேறு நகரங்களில் பெருந்தொகையில் நடைபெற்று வருகின்றன என்பதும் அவை பெருமளவு அம்பலத்துக்கு வராமல் அடிபட்டுப் போகின்றன என்பதும் அம்பலத்துக்கு வந்துள்ள மற்றுமொரு செய்தியாகும்.

www.tamilarangam.net

# திரட்சி எனப்படுவது...

ராஜமையா முருகவேல்

இக்கதையை வரையறை செய்ய 'மண்வாசனை' எனும் பதம் போதாதாகி விடுகிறது.
மலையக வாழ்வியலில் புஷ்பிக்க முனையும் அனந்த மலர்களில் பல இங்கே காயப்படாமல் அழகுறக் கொய்யப்பட்டு கோவையாக்கப்பட்டுள்ளது.

ட்ரைவரின் குரல் பலத்து ஒலித்தது! "ஏய் ரெண்டாவது அட்டி முன்னுக்கு தள்ளிக் கிட்டு இருக்கு.. உள்ளுக்கு தள்ளு.."

சாணி லொறியின் சைடிட்கிளாசை பார்த்துக் கணித்து கொண்டு கத்திக் கொண்டிருந்தான் அவன்.

பின்னர் தலையை இன்னும் நன்றாக ஜன்னல் வழியாக வெளியில் போட்டு கழுத்தை சுளுக்கும் அளவுக்கு திருப்பிப் பின்னால் பார்த்து கொண்டு, கண்களை விரித்து, நெற்றி சுருங்க மூக்கை அடைத்துக் கொண்டு சாணி அட்டியை சரிசெய்துகொண்டிருந்தவனை நோக்கி மீண்டும் தன் குரலை உயர்த்திக் கத்தினான்.

"ஹேய் அங்க பாரு.. பச்சபில்லு.. அத எடுத்து வீசு.. அப்படியே அமல ஏதும் நீட்டிகிட்டு இருக்கானு பாரு.."

அவனின் கூச்சல் தொடர லொறியின் பக்கத்தில் நின்றவனை நோக்கினேன்.

திறந்த லொறியில் சட்டத்திற்கு மேலாக நிரம்ப நிரம்ப சதுரவடிவில் அடுக்கப்பட்டிருந்த சாணி, நேர்த்தியான முறையில் அடுக்கப்பபடாமல் சில இடங்களில் உள்ளும் வெளியுமாக சற்று வளைந்தும் நெளிந்தும் வெளியே துருத்திக் கொண்டு இருந்தது..



அவனோ தன் இரு கரங்களையும் இணைத்து சொடக்கு போட்டான். பின் லாவகமாக கைகளை வீசி அலட்சியமாக குனிந்து பூமியில் சிந்தி கிடந்த சாணத்தில் சிறிதை வாரி எடுத்தான்.. கிளினரை ஒரு தரம் பார்த்தான். சப், சப்பென்று சாணி நிரம்பலில் அறைந்தான். மீண்டும் குனிந்து வாரி முன்பை விட வேகமாக, வளைந்திருந்த இடங்களுக்குள் இரண்டொரு அறை அறைந்தான். சப்.. சப்.. சப்.. அப்போதெல்லாம் லொறியின் நீலநிறமான தகடுகள் கரும்புள்ளிச் சித்திரமாக மாறியது.

அவனும் கூட உழைப்பின் சித்திரமாகத்தான் நின்றிருந்தான். கைகள் எல்லாம் கரும் பச்சை நிறக்கோடுகள். முகம், நெற்றி எங்கும் சாணி நீர் வடிந்து அவனை உரு மாற்றி வைத்திருந்தது. அவன் சுற்றி சுற்றி நடந்தான். பார்வையிட்டான். லொறியின் ஒவ்வொரு பக்கமும் சென்று வேகம் கொண்டு அறைந்தான். முஷ்ட்டியை முறுக்கி குத்தும் போதெல்லாம் அவனின் கெண்டை கால்களின் தசைகள் திரண்டு திரண்டு விடைப்பதும் ம்றைவதுமாய் இருந்தது. அவனின் விழிகள் பெரிய விழிகள் நான் என் கவனிப்பை கூர்மைப்படுத்தினேன் சாணி நீரின்அவிச்சலில் அவனது கண்கள் சிவந்து கிடந்தது. கன்னங்கள் தசைப்பிடிப்பாகவும் சவரம் செய்யாதும் இருந்தது அவனது கண்களும் அவனது திரண்ட கால்களும் என்னில் ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தி அவனை மீண்டும் பார்க்க தூண்டியது. உண்மை தான் அவை என்னை நெருடின. அவற்றை நான் முன்பு பார்த்திருக்கிறேன் அந்த விழிகள் அந்த கால்கள்.. அவை என்னோடு போட்டிபோட்டுள்ளன.. இணைந்து நடந்திருக்கின்றன.. இப்போது ஞாபகம் வந்தது. இவன்.. என், ஆரம்ப பள்ளித்தோழன்.. என் லயத்து மனிதன், என் செல்வம்.

அந்த வேலை நிறுத்தமும் அதன் நேரடி விளைவும்தான் இன்று இவன் சாணி லொறியில் உழைக்கும் ஒருவனாய், இவனை மாற்றி உள்ளது. இவன் ரசித்த தொழிலைவிட்டு விட்டு இப்போது இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளான் போன்றே தோன்றுகின்றது. ஆயினும் அன்று ரசித்த தொழிலில் காட்டிய ஈடுபாடு, உழைப்பு, நேர்மை அனைத்தும் அவனது ஒவ்வொரு அசைவிலும் இப்போதும் கண்டேன். வாழ்த்துக்கள் நண்பனே. உழைப்பின் மீது நீ கொண்டுள்ள கம்பீரத்துக்காய், உன்னில் நான் கொண்டுள்ள பிணைப்புக்காய் மீண்டும் ஒரு முறை கௌரவப்படுகிறேன். எம் லயத்து வாழ்வின் போது என்னுள் நீ வீசிவிட்டு போன கீற்றுக்கள் தான் எத்தனை.

www.tamilarangam.net

# அவள்

உச்சி வெயிலின் கோரமோ
அன்றி
பருவக் காற்றின் சீறலோ
இல்லை
கசியும் நீரின்
பெருகும் கோபமோ
எம் பெண்டிர் காலை
கட்டுவதில்லை.

நலிந்த இந்த
மானுட வண்டிகள்
கூடையின் பாரங்கள்
சுமையாய் அழுத்த
தங்கமாய் பொங்கும்
தேயிலை சுமந்தே

மலைகளின் உச்சிகள்
வரட்டு பள்ளங்கள்
மேடுகள் என்றே
யந்திர கதியில்
ஏறியும் இறங்கியும்
அசைந்து அசைந்து
இறுதியாய் அங்கே
நிலுவையின் கணத்தினை
நோக்கி நகர்வர்.

ஓர்,
அற்ப தவறோ
ஓர்,
அற்ப பிழையோ
இல்லை,
முற்றிய இலையோ
அன்றி,
நிரைகளில் பிந்தலோ
இல்லை
தன் பச்சிளம் குழந்தையை
நிலையத்தில் பிரிந்ததில்
சுணங்கிட்ட இரண்டொரு
அற்ப கணங்களோ

அட,
போதுமே இவை
ஓர் ஆயிரம் தூஷிப்பை
இவர் மேல் சொரிய
ஒரு நாளின் உழைப்பை
இவரிடம் பறிக்க!



சி.வி.வேலுப்பிள்ளை

# கேட்டிருப்பாய் காற்றே...

## அவளின் இரவு

இரவு,
அதுவும் நீண்டு
மீள இவளில்
வதைகளை பொறிக்கும்.
அவளின் கணவன்
குழந்தைகள் வீடு
யாவும் அவளின்
உழைப்பினை கோர
இவளோ,
சமைத்து முடித்து
அலுத்து சோர...
உண்மை
இரவு,
அதுவும் நீண்டு
மீள இவளில்
வதையாய் தொடரும்.

*

விடியலின் புன்னகை
பிரட்டின் கூவல்
இவற்றை எண்ணி
உடுக்களின் சுடரை
கொண்டவள் கண்கள்
துயின்றும் விழித்தும்
கனவில் சோர
களைத்து நைந்த
அவளின் உடலம்
சரிந்து பாயில்
கிடக்கும் இரவில்.

எத்தனை ஆண்டுகள்
எத்தனை ஆண்டுகள
உழைப்பு மிகுந்த
அவளின் பகல்கள்
அதனை தொடரும்
அவளின் இரவு
இதுவாய் இதுவாய்
முடிந்தது இங்கு.

“அடே பூரி வெறகுக்கு போவமா”

**தனிமை கண்டதுண்டு**
**சாரம் நிறைந்ததம்மா ...**
**திரட்சி என்பதோ ....**

அவன் தான்..

இப்படித்தான் என்னை அழைப்பான் அந்த காலங்களில். சனிக்கிழமைகளில் அவன்தான் முதலாவதாகத் தொடங்குவான்.. நாங்கள் சனி, ஞாயிற்று கிழமைகளில் விறகுக்கு போயாக வேண்டும். இதை நாங்கள் நேர்த்தியாகவே செய்து வந்திருக்கிறோம்.

“ கொஞ்சம் இருடா.. தண்ணி ரெண்டு வாளி ஊத்திட்டு வந்துறேன்”

“இதுதான் ஒனக்கு. நாங்க எல்லாம் ரெடி. நீ எப்பவும் இப்பிடித்தான்..” செல்வம் சலித்துக் கொள்வான். நானும் மொழிவேன்:

“ சரி சரி.. ஒரு அஞ்சு நிமிஷம் நில்லு..”

“ சுருக்கா.. அங்க பாரு, மகேந்திரன்,.. மைலா கார்மதி எல்லாம் சாக்க சுத்திட்டானுங்க. சுருக்கா.. சரி,சரி எனக்கு வாளியைத் தா..”

அவசர அவசரமாக வாளியை பிடுங்குவான். வீராப்பாக ஓட்டம் எடுப்பான். நானும் அவனுக்கு ஈடாக விரட்டி செல்வேன். பீலியில் நான் முந்தி, நீ முந்தி என்று போட்டி போடுவோம். எல்லாவற்றையும் விட நீர் நிறைந்த வாளியை அவன் தூக்கி வரும் விதம்.. அப்பாடா.. ஒரு கையால் வாளியை பிடித்து மற்ற கையை சீராக மேல் உயர்த்தி தோளுக்கு நேராக நீட்டி வைத்து அந்த கைக்கு ஏற்றாற் போல் தலையை சாய்த்து வாளியின் பாரத்துக்கு சரி செய்து நடக்கத் தொடங்குவான். ஒத்த காலை கெந்தி.. கெந்தி.. வாளி காலை உரச.. உரச.. வேகமாக போகும் விதம்.. ம்..ம்.. என்னால் முடியாது அவனைப் பிடிக்க.. ஒரே மூச்சில் வீட்டில் வாளியை வைத்து விட்டு நிமிர்வான். மேல் மூச்சி.. கீழ்மூச்சி வாங்கும்.

“பூரி.. சாக்க வெளியில எடுத்து போடு.. நா கயிர அவுத்து எடுக்கிறேன்.. நீ வீட்ட பூட்டு..” கட்டளைகள் கட கடவென பிறப்பெடுக்கும். நான் வீட்டை பூட்டி விட்டு திரும்பும் போது எனக்கு ஒரு டோல் தயாராக இருக்கும். டோல் என்றால் கயிறையும் சாக்கையும் சுற்றி(?) அதற்கு மேல் ஒரு கயிற்றால் சாக்கின் இரு முனைகளையும் கட்டி.. தோளில் மாட்டிக்கொள்ளுவது. டோல் காரன் போல் முன் நடக்க செல்வம், மைலா, கார்மதி, மகேந்திரன்.. பின்தொடர எங்கள் அணிநடப்பு தொடங்கும். லயத்தைத்தாண்டி மண் ரோட்டுக்கு வருவோம்.

செல்வம் என்னை இழுத்துப் பின்னால் தள்ளினான். முன்னால் ஓடி கால்களை அகட்டி உடம்பை விறைத்து வான் நோக்கி இழுத்து.. கால்களை லாவகமாக தட்டி.. மிதித்து நாக்கை வெளியில் நீட்டி கண்களை விரித்து புஜத்தை குலுக்கி அருள் வந்தவன் போல்.. ஸ் ம்.. ஸ்ஸ்.. என ஒலி எழுப்பி தலையை சிலிப்பிக் கொண்டு.. ரோட்டின் குறுக்காய் ஓடி.. அதே வேகத்தில் பின் திரும்பி என் முன் நின்றான்.

**சிமியோவை.. தான் எடுத்துமே.**
**எமராஜன்.. எம ராஜன்..**
**ஓடி வந்தேனே..**

செல்வம் பாடத்தொடங்கினான். எந்தப்பணிப்பும் இன்றி நாங்கள் மீண்டும் அதே வரியை பாட



எங்கள் முன் வீரம் சொரிந்த எமதூதன் விரிந்தான்.. சுழன்று சுழன்று ஆடினான்.. ஆடி வந்தான்.. அந்த அக்கினி ஆட்டத்தில் மண்ரோட்டின் புழுதி கிளம்பல் மேல் எழும்பிச் சென்று, எங்களையும் மறைக்க தொடங்கியது.. தொடர்ந்து ஆடிக்கொண்டே..

**தேவ சபை ஒலை இதுவே**
**எமராஜன்**
**எமராஜன் தாங்கி வந்தேனே..**
.. .. .. ..
.. .. ..

பாட்டை நிறுத்திவிட்டு.. குதித்து குதித்து கைகளை விசிறி.. மின்னல் போல் சுழன்றான்.. மகேந்திரனும் கார்மதியும் செல்வத்தின் இடுப்பில் கயிறை போட்டு பின்னால் இழுத்துப் பிடித்தும், அவன் ஆட்டம் ஓயவில்லை. தள்ளினான்.. மையிலாவை பாவணையில் அழைத்து.. ஓலை ஒன்றை கொடுப்பது போல் பாவணை செய்து, அவளை குலுக்கி.. இழுத்து தலை மயிரையெல்லாம் களைத்து விட்டான்..

‘.. ஏய்.. ஏய்.. வுடுடா.. மாட்டுபயலே.. ஆ..’

மையிலா தாக்குப்பிடிக்க முடியாது கத்தினாள். ஆயினும் இவன் விட்ட பாடில்லை.. அவளோ கால்களை இறுக ஊன்றி, கரத்தை அவன் மார்பில் ஊன்றி அவனைப்பினனால் தள்ளி சென்றாள். கார்மதியும் மகேந்திரனும் கயிற்றால் அவனை பின்னால் இழுக்கவும் இவளும் தள்ளவும் அவன் சற்றுத் தடுமாறி தேயிலை நிரைகளில் சாய்ந்தான்.. இவளும் சட்டென்று குனிந்து அவனின் காலைப் பிடித்து இழுத்துவிட தேயிலை புதரினுள்ளே அப்படியே விழுந்து விட்டான்..



‘சாமி.. ஆடுதா.. .. சாமி.. இப்ப எப்பிடி..’ சிரித்துக் கொண்டே.. ஓட ஆரம்பித்தாள் மைலா..

செல்வம் தேயிலை புதரில் இருந்து பிரண்டு எழுவதற்கு முயர்சித்தான். நான் கைகொடுக்க வேகமாக எழுந்தான். கால் கையெல்லாம் தேயிலை வாதுகள் கீறி.. சாம்பல் நிற கோடுகள் விழுந்திருந்தது. வலித்திருக்குமோ. ஆயினும் சிரித்தான். பின் அவள் ஓடுவதைக் கவனித்துவிட்டு, விரட்டிச் சென்று அவளின் முடியை பிடித்து இழுத்தான்.

‘ஏய் வுடுடா.. வலிக்குதடா.. அட வுடுடா..’அவன் விடவில்லை.. இவள், இந்தச் சண்டைக் கோழி அவனின் கைகளை பிடித்துக்

www.tamilarangam.net

கொள்வதை விடுவதாயில்லை. இது போல் எத்தனை சண்டைகள். இந்தக் கோழிச் சண்டைகளில் அவ்வப்போது இடையில் நானும் மாட்டிக் கொண்டு விழித்த நேரங்கள்..

பாடசாலைக்கு அழைப்பதற்காய்தான் இந்த காலை நேரங்களில் வருவாள். இன்றோ வேறு விதமாய் வந்து நின்றாள். என்னைப் பார்த்தாள்..

அன்று மைலா என்றுமில்லா வகையில் திரு திருவென படங்கை இடையில் கட்டிக் கொண்டும் கொங்காணி சாக்கை கையில் எடுத்து கொண்டும் வந்தாள். பொதுவில் பாடசாலைக்கு அழைப்பதற்காய்தான் இந்த காலை நேரங்களில் வருவாள். இன்றோ வேறு விதமாய் வந்து நின்றாள். என்னைப் பார்த்தாள்..

நன்றாகக் கவனித்துவிட்டு.. குனிந்துக் கொண்டாள்... விழிகள் மிரள.. ஒதுங்கி.. போய்..

'ஸ்கூல் போறியா'.. என்றாள்..

'பேர் பதிஞ்சிட்டியோ'

'ஆமா.. எங்க பெரியம்மா' இதற்கு மேல்..



அவளால் பதிலளிக்க முடியவில்லை. அவளின் இமுப்புக்கள்.. அவளின் விழிகளில் நீர் முட்டவைத்தது.. கொங்கானி சாக்கால் விழிகளைத் துடைத்துக் கொண்டாள். உள்ளே போனாள். நேராக எனது அம்மாவின் கால்களில் விழுந்து வணங்கினாள்.. அம்மாவும்.. விபூதி போட்டுவிட்டு.. கொங்காணி சாக்கை வாங்கி மடித்து தலையில் மாட்டிவிட்டாள்.. இப்போது அவள்.. அவள்.. புதிதாய்.. கோலம் கொண்டாள்..

'கவனமா போயி நல்லா வேல செய்டி..' அம்மா புத்தி சொன்னாள்.. அவளும்.. தலையாட்டிக் கொண்டாள்..

'எத்தனையாம் நம்பர்'

'ஏழு' என்று உடன் பதில் வந்தது..

'யாரு கங்காணி..'

'முத்து தான்'

'அவன் கத்துவான்டி'

"பாப்போம் பெரியம்மா'

" இப்படித்தாண்டி நாங்களும் சொன்னோம்.

" .. .. .. .. .. .. .."

என்னை வெறுமனே பார்த்துவிட்டு அம்மாவிடம் மாத்திரம் சொல்லிக் கொண்டு பாதையை மாற்றி வேகமாக நடந்தாள்...

முத்து கங்காணி.. பொறுத்து அப்பா இப்பிடித்தான் சொல்வார்.. கங்காணி வேலங்கரது.. மகாராஜா வேலஹுத்தான் அவன் நெனப்பு" முதல் நாளே இவனிடமா இவள்

தன் தொழிலையே ரசித்து நேசிக்கும் இவன் ஒரு பெண்ணை எப்படியெல்லாம் நேசித்திருப்பான்..

வேலை செய்ய வேண்டும்,... ஆயினும்.. அவளது வார்த்தைகள்.. 'அதையும் பாத்துடுவம்..' இவளின் இந்த துணிவு.. சிலவேளை தேயிலைவெளிக்கு புதிய பரிமாணமாக இருக்கக்கூடும்..

* * *

செல்வம் வீட்டுப் பக்கமே வரவில்லை.

அவன் பெரட்டுக்கு போய் வந்ததாக அறிந்தேன்.

இன்று புதிய தொழிலாளர்கள் தங்களின் முதல் உழைப்பை இந்த மண்ணுக்கு வார்க்க மலைகளில் உற்சாகமாக ஏறினர். இந்த புதிய தொழிலாளர்கள், பல தலைமுறைகளை மீண்டும் மீண்டும் பிரட்டின் அதிர்வுக்கே கொணர்ந்து சேர்த்த இந்த வாழ்க்கை வட்டத்தை



ஒருவேளை மாற்றக்கூடும். இப்போது ரவுன் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை ஐந்தாக குறைந்து விட்டிருந்தது.

ரோட்டில் மாங்காய் கொட்டைகளை எத்துவதற்கு ராமு இல்லை.. வகுப்பறைக்கு பூத்தேடும் கார்மதி இல்லை.. பேப்பர் ரொக்கட் தயாரிக்க மகேந்திரன் இல்லை. எங்கள் கூட்டம் சிறுத்துப் போயிருந்தது.. நாங்கள் பங்களா மரத்தில் மாங்காய் அடித்தோம். எத்தனை முறை முயற்சிக்க வேண்டியிருந்தது.. செல்வம் இருந்தால் ஒரே அடியில் எத்தனை மாங்காய்களை விழவைத்திருப்பான். அவன் குறிபார்த்து அடிக்கும் விதம், அவனின் திறமை யாவும், இப்போது தான் புரிந்தது எமக்கு. மாங்காய் உண்ணும் கூட்டம் சிறுத்திருந்தது ஒருவிடயம்: ஆனால் பறித்து, போட்டி போட்டு, பங்கிட்டு தின்ன வரும் உற்சாகம் இல்லாது போக மிஞ்சிப்போனது மாங்காய். பையில் வழமைக்கு மாறாக இரண்டை திணித்துக் கொண்டேன். மிகுதியை வீசிவிட்டோம். மனதில் தான் எதுவும் ஒட்டவில்லையே. மனது சற்று வெறுமையாகிப் போனது. மாலையில் என் செல்வத்தை நான் பார்ப்பேன். அதுவே இப்போதைக்கு இன்பமாய்ப்பட்டது. தொழிலாளியாய் மாறிப்போன செல்வம் அவ்வப்போது தன் தொழில் பொறுத்து விவரிப்பான். அன்று இப்படித்தான்.. நான் குளிப்பதற்காக பீலிக்கு போனபோது அவன் தண்ணிக்கல்லில் கவ்வாத்துக் கத்தியை தேய்த்துக் கொண்டிருந்தான்.

'என்னடா.. கவ்வாத்தா..' நான், கேட்க

'ஆமாண்டா..' எனக்கு பதில் அளித்துவிட்டு கத்தியை நன்றாக அழுத்தி.. கல்லில் இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு.. மடக்கி இருந்த

www.tamilarangam.net

# ஒவ்வொரு நிலாப்பொழுதிலும்

ஒவ்வொரு நிலாப்
பொழுதிலும்
மனம் மெல்ல
உயிர் பெறும்

மலைகளின் தழுவலுக்கு
தப்பி
மரக் கிளையின்
இடுக்கில்– ரகசியம்
பேசி . . .
எங்கள் லயத்து
கூரைகளை மினுக்கி
சுவர்களில்
தொங்கும் கூடைகளில்
நிழல் வரையும் – எங்கள்
நிலவு ..

சிறுசுகள்
கூடும் .. ..
எம் முன்னோர்
ஓர்
நூற்றாண்டாய்
படைத்த
சாதனை கேட்க

பத்தாம் நம்பர்
மலையில்
சேகரித்த
மிளாரு விறகு கட்டுகள்
முற்றம் எங்கும்
தொடராய்
சிறு சிறு கரும் பாறைகளாய்
துயில் கிடக்கும்.
நிலவோ.. . கசிந்திளகும்.

குட்டு சாக்குகளும்
தலை ரெட்டுகளும்
போர்வைகளாகும்.
சிறுசுகள்
கும்மாளம் இட்டு
இடம் பிடிக்கும்
மிளாரு சிம்மாசனத்தில் . . .

நிலவு தலைமறையும்
சிங்கமலையின்
தெளிந்த நிழல்
ஒன்று
எம்மில்



படரும் ...

சிங்கமலை
இமை சாய்த்து
தலை கவிழும்

பின்
விம்மி வெடித்து
திமிறி
மரணமற்ற– பாத்திரமாய்
நிமிர்ந்து.. நிற்கும்.

மிளாரு சிம்மாசனங்களோ

பொறுமை காக்கும், – எம்
தாத்தாக்களினதும்
பாட்டிகளினதும்
வருகை நோக்கி..
கதைகள்
துவங்கும் ..
ஓர்
நூற்றாண்டின்
வியர்வையும்
ஓர் நூற்றாண்டின்
போர்க்குண
உறுதியும் – ஆங்கு
படைத்தல் ஆகும் ..

அப்போதெல்லாம்
சிங்க மலை – அப்பப்பா . .
கர்வத்துடன்
மரியாதை மிக்க
வார்த்தைகளில்
துயில் கிறக்கும்
எம்மை ..
உசுப்பி உசுப்பி விடும்.

எம் குழந்தை பருவத்து
இன்பமெலாம்
இணைந்த – அவ்
லயங்களின் திண்ணை ..
கூடவே,
அதோ
தெரியும்
எம்
மிளாரு சிம்மாசனம் ..

இவற்றை
சேர்த்தே, இணைத்து, கொணர்ந்து
ஓர் நூற்றாண்டு
ஊழைத்த கதையின்
புதிய கருவை – இன்று
செதுக்க எண்ணியோ
ஒவ்வொரு நிலாப்பொழுதும்
நீயும் நிலவுமாய் நிற்காது
சிரிக்கிறாய் – என்
சிங்க மலையே ?

www.tamilarangam.net

கால்களில் ஒன்றை நீட்டிவிட்டு

'நம்ம வேளாங்கண்ணி தாத்தாக் கிட்டதான் ஒரு பத்துப் பேரு பழகுறோம்..'

மீண்டும் மௌனமானான். கத்தியை பெருவிரலில் வருடி.. அதன் பதத்தை சரிப்பார்த்தான்.. இருந்துக் கொண்டே லாவகமாக கத்தியை சுற்றி ஒரு வீசு வீசிப் பார்த்தான். " ம்.. கவ்வாத்து பழகிட்டா போதும் பூரி எல்லா வேலையும் செய்தமாதிரித்தாண்டா.. "

இமைகள் மூட, உதட்டில் குமிழ்ந்து நின்ற



சிரிப்புடன், அவன் இதைச் சொன்னான், மீண்டும் கத்தியை பெருவிரலால் வருடி பார்த்துக் கொண்டு..

'கவ்வாத்து மாதிரி.. ஒரு வேலையும் இல்லடா '

செல்வம்.. தன்னை மறந்து சொல்லிக் கொண்டிருந்தான். என்ன மனிதன் இவன் தன் உழைப்பு சுரண்டப்பட்டு கொண்டிருக்கும் போது அதற்கு எதிர்மறையாக இந்த தொழிலை நேசிக்கிறானே.. மீண்டும் செல்வம் மொழிந்தான். " கவ்வாத்து அழகுடா.. " இந்த வார்த்தைகள் அவனது இன்பத்தில் தோய்த்து வந்தது. இவனைப் போல் பலர் இவ்வாறு தான் இந்த கவ்வாத்து வேலைப் பொறுத்து சிலாகித்து இருக்கிறார்கள். அவனை ஏனோ சீண்டிப்பார்க்க ஆசையானது.

'கவ்வாத்துல என்னடா அழகு? முள்ளம்பன்றி முள்ளுமாதிரி தேயிலமரம் சிலிப்பிக்கிட்டு இருக்கு. மவுசன் நடக்கக் கூட முடியாது. கால எல்லாம் குத்தும்.. என்னடா அழகு '

நான் முடிக்கமுன் அவன் முகமே கறுத்துப் போனது. ஆனால் கண்களில் புதிய ஒளிவீசியது. என்னை நன்றாகப் பார்த்துவிட்டு "போடா, ஒனக்கு என்னாத்த தெரியும்.. கவ்வாத்து வெட்டுறது ஒன்னும் லேசு இல்ல. ஒரே அளவா.. பூச்சி வாதெல்லாம்.. அறுத்து நல்லா கலச்சி வெட்டினா.. முள்ளம்பண்டி முள்ளுமாதிரி இருக்காதுடா.. இந்த அழக, பாசான் தொடச்சதும் பாரு - புது அரும்புவெடிக்கறப்ப பாரு.. புது கொழுந்துவரும் போது பாரு"

செல்வம் தன் ஆதங்கம் அனைத்தையும் கொட்டித்தீர்த்தான்.. தொழில் மீது அவனுக்குள்ள காதல்தான் எத்தனை ஆழமானது. பலன் தராத தேயிலைகளை வெட்டி எரித்துவிட்டு புதியவைகளை உருவாக்குவதால் உண்டான ஆர்வமா இது? காலம் ஓடியது. என் உயர்தரப் படிப்பை முடித்துக் கொண்டு ஆசிரியனானேன்.. நான் நியமனம் பெற்றபோது என் லயத்து மனிதர்கள் காட்டிய பெருமையும் மகிழ்வும் இன்னும் என் விழிகளில் ஈரம் சேர்க்கும்.

" எங்க லயத்த பயலுக்கு சேர்வேல கிடச்சிருக்கு " என்று இவர்கள் உரத்து கதைத்து திரிந்தது.. அது என்னவோ தாங்கள் எல்லோருக்கும் மாற்றம் வந்துவிட்டது என்பது போல் அல்லவா அது ஒலித்தது. அப்போது தான் செல்வம் மைலாவை திருமணம் முடித்தான்.. அவர்களின் காதல் பொருத்து யாரும் அறிந்திருக்கவில்லை.. மிகமென்மையாக யாரும் அறியாவிதத்தில் ரகசியமாக காத்து வந்திருந்தனர். தன்தொழிலையே ரசித்து நேசிக்கும் இவன் ஒரு பெண்ணை எப்படியெல்லாம் நேசித்திருப்பான்..

அதை சொல்லத்தான் வேண்டும்..

ஒரு நல்ல இதயத்தின் காதல் கூட, பண்பட்டதாகத் தான் அமைந்து விடுகிறது.. ஒரே லயத்தில் குடியிருக்கும் இவர்கள் எப்படி இத்தனை நாகரீகமாக அடுத்தவரை நெருடா வகையில் தங்களின் காதலை கட்டி வளர்த்திருக்கின்றனர். திருமணம், சடங்கு, மரணம் என்று லயங்களில் நிகழும் போது .. இந்த மனிதர்கள். எத்தனை பண்பட்டவராக மாறிவிடுகின்றனர்.. செல்வத்தின் திருமண ஏற்பாடுகளில் முழு தோட்டத்து பையன்களும் கரைந்து போனார்கள்.. மகேந்திரன் மூர்த்தக்கால் ஊன்றுவதற்கு தனியாக ஒரு பன்னிரெண்டு அடி கருப்பந்தையில மரத்தை வெட்டி வந்து அசத்திவிட்டான். காலையிலேயே கணக்கப்பிள்ளையிடம் கதைத்து காவக்காரனிடம் எதையோ சமாளித்து தானே வெட்டி.. ஏழுமணிக்கெல்லாம் கொண்டு வந்து சேர்த்துவிட்டான். நாங்கள் மரம் வெட்டுவதற்கு ஆள் தேர்வுசெய்து கொண்டிருக்கும்போது அவன் கொண்டு வந்து போட்டுவிட்டான். பின் பந்தல் போடுவது சமையல் வேலைகள் சாப்பாடு பரிமாறுவது எல்லாவற்றிற்கும் தோழர்கள் அமர்க்களப்படுத்தினர். எல்லோரும் பூரித்துப் போனோம். நட்பு, வார்த்தையில் இல்லை. செயலில்தான் உண்டு என்பதை யாரும் இவர்களுக்கு சொன்னதாய் இல்லை. அனைவரும் தமது சொந்த வேலையை செய்வது போல செய்து ஆர்ப்பாட்டம் பண்ணி செய்து கொண்டிருந்தார்கள். அன்று திருமணம் முடிந்த இரவு நண்பர்கள் போட்ட ஆட்டமும் பாட்டும் முழுத்தோட்டத்தையும் ஆடவைத்தது.

(மிகுதி அடுத்த இதழில்..)

## அமெரிக்க படைகளிடமிருந்து சுற்றாடல்களை காப்பாற்றுங்கள்

தென்கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவம், தான் சியோலின் பிரதான நதியான யொங்சானில் டொக்சிக் இரசாயனப் பொருளை கொட்டியதாக ஏற்றுக் கொண்டது. மேற்படி இரசாயனச்சேர்க்கை புற்றுநோயையும், பிறக்கும் சிசுக்களில் நிரந்தர குறைகளை ஏற்படுத்தி பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியது. சுற்றாடலின் பாதுகாப்புக்கான கொரிய அமைப்புக்கள் மேற்படி விடயத்தை அம்பலப்படுத்தி போராட்டம் நடத்தியதை அடுத்து அமெரிக்க இராணுவம் குறிப்பிட்ட தன் நடவடிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளது. கடந்த ஐம்பது வருடங்களாய் அமெரிக்கர்கள் தங்கள் நாட்டின் சுற்றாடல்களை நஞ்சாக்கி வருகின்றனர் என சுற்றாடல் குழுவினர் கொரியாவில் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

15.07.2000 - Hindu

www.tamilarangam.net

# சாருமதியின் நினைவுக்கூட்டத்தில் நந்தலாலாவினரால் விடப்பட்ட குறிப்பு ...

விதை விதைத்தாயிற்று.
பயிர்கள் இனி முளைக்கும்.
சிறு மழை பெரு மழை
சீராகவும் சீரற்றும்..
வரைகள் நிறையும்
வக்கடைகள் உடையும்.

மார்கழி முடியும்.
மழை,
தூறலாகச் சிறுக்கும்.
நிமிர்ந்த பயிர்கள்
காற்றின் மோதலால்
தலை விரித்தாடும்.

குடலைகள் பயிரின்
தலையில் ஜனிக்கும்.
நிமிர்ந்த பயிர்கள்
நாணிக் கோணும்.

பருவம் அறிந்த
பறவைகளின் வருகை ...
குடலை காயும் வரை
எனது கிராமத்தின்
குடல்களும் காயும்.




வான்கோ எவ்வாறு தனது கோதுமைவயல்களும் காகங்களும் (*Wheat Field with Crows*) எனும் ஓவியத்தில் ஓர் கிராமத்து உழைப்பு திருடு போவதை சூட்சுமமாய் அம்பலப்படுத்தி எதிர்த்து விமர்சித்து நின்றானோ, அதே விமர்சன நாசூக்கை அடிபொட்டி அண்மைக்காலங்களில் எழுதிய இவ்வரிகளின் சொந்தக்காரன், சாருமதி, இன்று எம்மிடை இல்லை.

எழுபதுகளில், உழைக்கும் மக்களின் போர்முகத்தை தனது எழுத்தில் பிரதிநிதித்துவப் படுத்திய இக்கவிஞனின் தோற்றம் வெளிப்பாட்டு ரீதியில் சுபத்திரன் – பசுபதி போன்றோரிடமிருந்து வித்தியாசமுற்றிருந்தாலும் அடிப்படையில் அவ்வணியின் தொடர்ச்சியாகவே இருந்து வந்துள்ளது.

இருந்தும், சுபத்திரன் – பசுபதி போன்றோர் முகம் கொடுக்க வேண்டிய சூழலை விட சிரமமானதோர் சூழலையே சாருமதி தன் வாழ்நாளில் சந்தித்தாக வேண்டி இருந்தது. சர்வதேச ரீதியாகவே உழைக்கும் மக்கள் சக்தியின் பின்னடைவு, கூடவே இலங்கையின் நசிவு தரும், இன நெருக்கடிகளின் மோசமான பரிமாணங்கள் – இனி இதற்கு மத்தியில் இக் கவிஞனின் தடம் புரளாமை – பிறிதொன்றை அல்ல ஆனால் சாருமதியின் ஆளுமையை சுட்டுவதாகவே உள்ளது.

பெரும்பாலும் முற்று முழுதாய், எழுபதுகளில் உழைக்கும் மக்களின் போர்முகத்தை மாத்திரமே தனது எழுத்தில் வழங்க தலைப்பட்டிருந்த சாருமதியின் எழுத்து எண்பதுகளில் இன நெருக்கடிகள் கூர்மையடைந்திருந்த ஓர் காலகட்டத்தில் இம்முரண்களில் இருந்து தன் வழியே அந்நியம் கொள்ளாமல் போரினவாதத்தை பெரிதும் சாடுவதாக உருப்பெறத் தொடங்கிற்று. சாருமதியின் தீர்த்தக்கரை எழுத்துக்கள் இவற்றுக்கு உதாரணம். இதுவே சாருமதியை ஓர் யாந்திரீக ரீதியான பொதுவுடமைவாதியில் இருந்து அவரை எமக்கு வேறுபடுத்தி காட்டுவதாகவும் உள்ளது.

எழுபதுகளில் மிகத்தீவிரமாக எழுதி, பின் அண்மைக் காலங்களில் பூவரசு இலக்கிய வட்டம் வரை அவர் தொடர்ந்திருக்கக் கூடிய இலக்கியச் செயற்பாடுகள், எழுத்துக்கள் யாவும் சரியாக தொகுக்கப்பட்டு பதிவு செய்யப்படுமானால் அது உழைக்கும் மக்களின் நலனை என்றும் விட்டுக் கொடுக்க முன்வராத ஓர் செழுமைமிக்க போக்கு, எப்படி ஓர் இன நெருக்கடிமிக்க இலங்கைச் சூழலில், கூடவே குறிப்பாக உழைக்கும் மக்கள் தமது கேந்திர ஸ்தானங்களை சர்வதேச ரீதியாகவே இழந்துப் போன ஓர் நிலமையில் தன்னை புணரமைக்கவும், புடம் போடவும் முன்னெடுத்த முயற்சிகளை எமக்கு உரைப்பதாய் இருக்கும். வரும் சந்ததிகளுக்கு அவற்றைக் கையளிப்பதாகவும் இருக்கும்.

நாற்பத்தேழு வயதை மரணிப்பதற்காக ஓர் கவிஞன் தேர்வது சோகமானது. அதிலும் "ஏழைகள் அழுத கண்ணீர் கூரிய வாள் என கூறுவோர் பெரியோர்" என்றதோர் நாகரீகத்தினால் ஈர்க்கப்பட்டு இறுதிவரை தன் கவிதை வரிகளை என்றுமே இல்லாத வஞ்சிக்கப்பட்ட மக்கள் சைன்யத்திற்காய் அர்ப்பணிக்க முற்பட்ட ஓர் மனிதன் மறைவது அதனிலும் சோகமானது.



வான்கோவின் ஓவியம்

www.tamilarangam.net

ஆதவன் பத்திரிகையில் இருந்து ...

# மலையகத்தில் சளி படைத்த தேக்குடையோர் ?

**பின்வரும் குறிப்பானது மானபங்கப்படுத்தப்பட்ட மலையகப் பட்டதாரிகள் என்னும் தலைப்பில் அஞ்சலி `என்பவரால் எழுதப்பட்டு ஆதவன் பத்திரிகையில் பிரசுரமானது. அச்செய்தயின் சில பகுதிகளை. மாத்திரம் மறுபிரசுரம் செய்கின்றோம். (ஆ-ர்)**

9.12.00 சனிக்கிழமை மலையகப் பட்டதாரிகள் ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்று அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இளம் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் முன்னாள் பா.உ. யோகராஜன், இன்னாள் உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு. மெய்யநாதன் தலைமையில் இக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவர் தனது உரையில் இங்கு எல்லோரும் சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிக்கலாம். நீங்கள் அரசியலைப் பற்றி சிந்திக்கத் தேவையில்லை என்று கூறினார். பிறகு மேலதிக கல்விப் பணிப்பாளர் இராசய்யா உரையாற்றுகையில், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்குமாறும் மத்திய மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்கள் நிறுவனங்களில் 25% மாவது இந்திய வம்சாவளித் தமிழர் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பின்னர் முதுநிலை இளம் பட்டதாரிகள் அங்கு உரையாற்றினார்கள். ஒரு சிலர் தாங்கள் கல்வி கற்றவிதத்தையும், மற்றும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியும் எடுத்துரைத்தனர். குறிப்பாக இளம் பட்டதாரிகள் வேலை வாய்ப்பை பெற்றுத் தருமாறும் முதுநிலை பட்டதாரிகள் தாங்கள் உயர்கல்வியை மேற்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றியும் அரசியல் எதிர்காலம் பற்றியும் பேசினர். இவர்கள் இ.தொ.கா. வை ஆதரிக்குமாறு மறைமுகமாக கூறினர்.

பிரச்சினைகளையெல்லாம் செவிமடுத்த பின் உரையாற்றிய எவரும் பிரச்சினைகளுக்கு தீர்வெதனையும் முன் வைக்கவில்லை.

முன்னாள் பா.உ.யோகராஜன் பேசுகையில், மலையக மக்கள் தற்போது கல்வியில் முன்னேறி வருவதாகவும் பல்கலைக்கழகம் செல்லும் தொகை அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும்

**நீங்கள் அரசியலைப் பற்றி சிந்திக்கத் தேவையில்லை**

கூறினார்.

இன்னாள் பா.உ. ஜெகதீஸ்வரன் பேசுகையில், தாங்கள் குறைந்தது 400 பட்டதாரிகளை எதிர்பார்த்ததாகவும் 50 பட்டதாரிகள் இங்கு வந்திருப்பதால் ஏனைய பட்டதாரிகளுக்கு பிரச்சினைகள் இல்லை என்பது தெளிவாகின்றது எனக் கூறினார்.

கட்சிவிட்டு கட்சி மாறிய கந்தசாமி நாயுடு பேசுகையில் கட்டுக் கோப்பான சிந்தனை அவசியம் என்றும் நாம் அரசியலை பொழுது போக்காகவோ வியாபாரமாகவோ மேற்கொள்ளக்கூடாது எனவும் மலையக சமூகத்தின் பொருளாதார மற்றும் கல்வி மேம்பாடே எனது குறி என்றும் கூறினார்.

அடுத்து அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பேசுகையில் நான் உங்களது குறைகளையோ பிரச்சனைகளையோ கேட்க வரவில்லை மனிதன் என்றால் நிச்சயமாக பிரச்சினைகள் இருக்கும். மூக்கிருந்தால் கட்டாயமாக சளி வரத்தான் செய்யும். (கூட்டத்துக்கு வந்ததிலிருந்தே கைக்குட்டையால் மூக்கு சிந்திக் கொண்டிருந்தார்.) நான் எமது சமூகப்பிரச்சனைகளுக்கு தீர்வு கேட்கவே கூப்பிட்டேன் என்று கூறினார். தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு இன்னும் ஒருவரையும் நியமிக்கவில்லை. இரண்டு முறை நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளை நீக்கிவிட்டேன். இந்தியாவிலிருந்து கொண்டு வந்தே வெற்றிடங்கள் நிரப்பப் போகின்றேன்.

மலையக பட்டதாரிகள் மற்றும் இலங்கையிலுள்ள எவரும் பொருத்தமாக

**ஜனாதிபதிப் பதவியையே பெற்றுக் கொடுத்திருப்பேன்**

இல்லையாம். இந்தியாவில் வேலையற்றிருக்கும் அவர்களது உறவினர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கப் போகிறார் போலும். மூன்று மாதத்துக்கு முன்னர் வேலையில்லை என்று கூறியிருந்தால் ஜனாதிபதிப் பதவியையே பெற்றுக் கொடுத்திருப்பேன் எனக் கூறினார்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கான 15 இணைப்பதிகாரிகளை நியமித்து, பட்டதாரிகள் நியமனம் செய்யவேண்டிய இடத்தில் கட்சிக்கும் தனக்கும் வேலை செய்த க.பொ.த சாதாரணதரம் கூட எழுதாதவர்களுக்கே நியமனம் வழங்கினார். இந்த நிலையில் 3 மாதத்துக்கு முன்னர் கூறியிருந்தால் அமைச்சை வழங்கியிருப்பேன் எனக் கூறுவது அவரது அடாவடித்தனத்தையே குறிக்கின்றது.

நன்றியுரை வழங்கிய இ.தொ.கா வின் பின்னால் அலையும் ஒருவர் அரசர் மாறுவேடம் போட்டு வந்து குறைகேட்டு செல்வது போல் அமைச்சரும் எமது குறைகேட்டுச் செல்கின்றார் எனக்கூறினார். பட்டதாரிகள் எடுத்துக் கூறிய பிரச்சினைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகவே காணப்பட்டது இவருக்கே அது விளங்கவில்லை. எவரும் பிரச்சனைக்கு தீர்வு வழங்கவில்லை.

நடைபெற்ற கூட்டம் மொத்தத்தில் பட்டதாரிகளை அவமானப்படுத்துவதற்கென்றே கூடிய கூட்டம் போல் தெரிகிறது. அமைச்சர் ஒன்றைப் பேச பட்டதாரிகள் பிரச்சனைகளைப் பற்றி பேசப்படவேயில்லை. நேரத்தை வீணடித்த இ.தொ.கா விற்கு சபாஸ்.

# 12 மில்லியன் ஹெக்டேயர் வெள்ளையரிடம்!

ஏப்ரல் 6ம் திகதி சிம்பாவே பாராளுமன்றம், வெள்ளையரின் பிடிக்குள் இருக்கும் சிம்பாவேயின் நிலத்தை அரசு கையேற்றும் வகையில் தனது சட்டத்துக்கு ஓர் புதிய திருத்தத்தை கொணர்ந்தது.

சிம்பாப்வே காலனித்துவ ஆட்சியில் இருந்த போது மேற்படி நிலங்கள், இலங்கையைப் போன்றே, மிக மலிவாக வெள்ளையரால் கைப்பற்றப் பட்டிருந்தன.

உதாரணமாக 1908ம் ஆண்டளவில் சிம்பாப்வே பண்ணை நிலங்கள் வெள்ளையரால் ஏக்கர் ஒன்று எட்டரை பென்ஸ்க்கும் பயிர்செய் நிலங்கள் ஏக்கர் ஒன்று 3 ஷிலிங் 9 பென்ஸ்க்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

இதன்படி 12 மில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பு



தென்னாபிரிக்க் தோழமையுடன் சிம்பாப்பே எதையும் முகம் கொடுக்க தயார் நிலையில் இருக்கிறது.

4500 வெள்ளையரிடம் சிக்கிக் கொண்டுள்ளது.( சிம்பாப்வேயின் மொத்த குடித்தொகையில் வெள்ளையர் ஒரு சதவீதத்தினர்) இதில் பாதி நிலத்தை பொறுப்பேற்பதற்காகவே சிம்பாப்வே அரசு முயல்கிறது.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளின் முன் சிம்பாப்வே சுதந்திரம் பெற்றபோது பிரிட்டன், சிம்பாப்வேயின் அமுல்படுத்த வேண்டிய நில சீர்திருத்தத்தின் தேவையையும், அவ்வடிப்படையில் அந்நாயை ஓர் சீர்திருத்தத்தை 'ஒழுங்குமுறையாக' மேற்கொள்ள தனது பங்கிற்கு (வெள்ளையரை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடு என்ற வகையில்) நஷ்டஈடு வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. *(LANCASTER HOUSE NEGOTIATIONS)*

ஆனால் 1988ம் ஆண்டு முதல் பிரிட்டன், நிலச்சீர்திருத்தத்துக்காய் தான் ஏற்றிருந்த கடப்பாட்டை, கொடுப்பனவுகளை நிறுத்தி, எந்த ஓர் கொடுப்பனவையும் வழங்கமுடியாது என அறிவித்தது. (1988 வரை, 20 வருடங்களில் 44 மில்லியன் பவுன்களை வழங்கி இருந்தது.

இச்சூழலில் மேற்படி பிரச்சனை உக்கிரமுற்று வெள்ளையரிடம் அடைந்து கிடைக்கும் நிலங்களை கிட்டத்தட்ட பலாத்காரமாய் சிம்பாப்வே மக்கள் பறித்தெடுக்கும் நிலைமைக்கு அண்மைக்கால சூழ்நிலைகள் சிம்பாப்வேயில் உருவாகின.

(81/2 பென்ஸ்க்கு வாங்கிப்போட்ட நிலங்கள் சிம்பாப்வேயின் மிக பெரும்பான்மையான பயிர் செய்நிலங்களாக உள்ளன என்பதும் வெள்ளையர் சிம்பாப்வேயின் மொத்த குடித்தொகையில் ஒரு வீதமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சூழலில், இவ்உக்கிரத்துக்கு போராட்ட, அரசியல், சட்ட வடிவு கொடுத்த முகாம்பேயின் அரசு, நிலங்களை நஸ்ட ஈடின்றி கைப்பற்றும் வகையில் தனது சட்டமூலத்திற்கு திருத்தம் கொணர்ந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, நோர்வே, போலந்து, ஸ்வீடன், உலக வங்கி ஆகியன தாங்கள் சிம்பாவேக்கு கொடுக்க ஒப்பந்தம் செய்திருந்த 228 மில்லியன் சிம்பாப்வே டாலர்களை முடக்கி வைத்துள்ளதாய் *Financial GAJYLTE – Harare* செய்தி வெளியிட்டது.

இதனைத் தொடர்ந்து சிம்பாப்வேக்கும் பிரிட்டனுக்கும் நடந்த பேச்சு வார்த்தையில் (27.4.2000) பிரிட்டன் 36மில்லியன் பவுன்களை சிம்பாப்வேக்கு தருவதாகவும் ஆனால் அதற்கு நிபந்தனையாக சிம்பாவே (1)

**81/2 பென்ஸ்க்கு வாங்கிப்போட்ட நிலங்கள்**

அண்மைக்காலங்களில் பலவந்தமாக கைப்பற்றப்படும் வெள்ளையரின் நிலப்பரப்பை உடனடியாக நிறுத்தி (2) தேர்தலை நியாயமாக மே மாதத்தில் நடாத்த வேண்டும் எனவும் தெரிவித்தது.

ஆனால் சிம்பாப்வே தூதுகுழுவினரால் மேற்படி நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டன.

20வருடங்களின் முன் சிம்பாவே சுதந்திரம் பெற்ற தருவாயில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பிரிட்டன் நில சீர்திருத்தத்துக்கான நட்டதொகையை செலுத்த கடமைப்பட்டுள்ளது. அக்கடப்பாட்டுக்கு இப்போது புதிய நிபந்தனைகள் விதிக்க முடியாது - டோனி பிலேயரின் அரசு நஷ்டஈடு வழங்கும் கடப்பாடானது தன்னிச்சையாக இடைநிறுத்தியதே தற்போதுள்ள கொந்தளிப்பான சூழ்நிலைக்கு காரணம் என சிம்பாப்வே தூது குழு அறிவித்தவிட்டது.

முகாம்பே தற்போது நன்கொடையை நிராகரித்து நிலசீர்திருத்தத்தை முன்னெடுக்கிறார். இந்நடவடிக்கைக்கு எதிராக வெள்ளையர் நீதிமன்ற நடவடிக்கை, வேலைநிறுத்தங்கள் போல பல எதிர்நடவடிக்கைகளை தூண்டியும் எடுத்தும் வந்தாலும் முகாம்பேயின் தீவிரம் குறைந்ததாக தெரியவில்லை.

## நிலத்தைத் தேடி அலையும் நிலமற்ற சிம்பாவே மக்கள்...

ஜீன்

இறுதிப்பகுதியில் நடந்த தேர்தலில் முகாம்பேயின் *ZANU - PF* கட்சி வெற்றி பெற்றது. (120 ஆசனங்களில் 62ஐ கைப்பற்றியது) இதுபோக வெற்றிபெற்ற முகாம்பே 30 ஆசனங்களுக்கு நியமிக்கும் உரிமையை சிம்பாப்வே சட்டத்தின் பிரகாரம் கொண்டிருக்கிறார்.

தேர்தல் முடிந்தகையோடு முகாம்பே 'ஐரோப்பியர்



ஐரோப்பியர் மகாதிருடர்கள்


மகாதிருடர்கள்.அவர்கள், தாங்கள் தான் சிம்பாப்வே நிலங்களின் சொந்தக்காரர்கள் என கூறமுடியாது' என அறிக்கைவிட்டு 'நிலசீர்த்திருத்தம் தொடரும்' என வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டு கலகங்களை தூண்டிவிடும் வெள்ளையரின் முயற்சி தோல்வியை எய்தி உள்ளதாக காணக்கிட்டுகிறது.

இச்சூழலில் ஏனைய வல்லரசுகள் இனி எடுக்கவிருக்கும் எதிர்நடவடிக்கைகளை பொறுத்துத்தான் பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால் தென்னாபிரிக்காவை தன் தோழமை நாடாக கொண்டுள்ள சிம்பாப்வே எதையும் முகம் கொடுக்கும் தயார் நிலையில் இருக்கிறது.

www.tamilarangam.net




இசை வல்லுனர் BRUCE SPRINGSTEEN தனது பத்து இசை நிகழ்வுகளை அண்மையில் நியுயார்க், , மெடிசன் சதுக்கத்தில் துவக்கினார்.



எதிர்ப்பு பாடகர்: விழாவில்

இது தொடர்பில், நியுயார்க்கைச் சேர்ந்த இரு பொலிஸ் அமைப்புக்களின் பிரதான தலைவர்கள், மேற்படிஇசை நிகழ்வை பகிஸ்கரிக்கும் படியும், மேற்படி இசைக் குழுவினர்க்கு தனிப்பட்ட ரீதியில் எந்த ஒரு பாதுகாப்பையும் தரக்கூடாது எனவும் தமது சக பொலிஸ் அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

காரணம் SPRINGSTEEN இன் மிக அண்மைக்கால பாடலான AMERICAN SKIN ~ 41 SHOTS ~ ( அமெரிக்க தோல் ~ 41 சூடுகள்) எனும் பாடல் பெப்ரவரி ~99 இல் அமெரிக்க பொலிசாரால் 41 தடவை(!) சுடப்பட்டு கொல்லப்பட்ட மேற்கு ஆப்ரிக்க குடியேற்றவாசியான AMADOU DIALLO சுடப்பட்ட நிகழ்வை குறிப்பதாய் இருப்பதே. AMADOU DIALLO சுடப்பட்ட போது அவர் எந்த ஓர் ஆயுதமும் தித்திருக்கவில்லை.

அவர் தனது பர்சை எடுப்பதற்காக கையை தனது பொக்கட்டுக்கு கொண்டு போனதாகவும், அதை தவறுதலாக ஆயுதத்தை எடுப்பதற்காக கொண்டு போனதாக நினைத்த பொலிஸார் அவரை நோக்கி 41 சூடுகள்(!) சுட்டு தீர்த்ததாகவும் பொலிஸ் தரப்பில் நீதிமன்றில் எடுத்துக் கூறப்பட்டது. நீதிமன்றம் இந்த சுவாரசியமான வாதத்தை கடுகளவும் சந்தேகிக்காமல் ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட அனைத்துப் பொலிஸ்காரரையும் ஒட்டுமொத்தமாக விடுதலை செய்தது.

ஓர் வெள்ளை மனிதன், அமெரிக்காவில், தன் காற்சட்டைப் பைக்குள் கையைவிட்டால் அது தனது பர்ஸ்ஸை எடுப்பதற்காக மட்டுமே ~ ஆனால் ஒரு கறுப்பின மனிதன் கையை விட்டால் அது துப்பாக்கியை எடுப்பதற்காகத் தான் ~ என்ற தர்க்கத்தின் அடிப்படையில் ஓர் பாவமற்றவனை கொன்று தீர்த்துள்ளார்கள். அதையும் அமெரிக்க நீதித்துறை ஆமோதித்துள்ளது என ஆத்திரமுற்ற கறுப்பினத்தவர் குமுறி இருந்தனர்.

இப்போது, SPRINGSTEEN இத்தகைய பாடல்களைப் பாடி இத்தகைய 'பழைய' காயங்களை மீளதிறப்பது பொருந்தாது என நியுயார்க் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

அமெரிக்க ஜனநாயகமும் நீதியும் நாளுக்கு நாள் சுவாரசியமான விடயங்களை உலகிற்கு சமர்ப்பிப்பது உலகத்தின் நகைச்சுவை உணர்வுக்கு வளம்' சேர்ப்பதாக அமைகிறது. USA




ஞானம்

பகிர்தலின்
மூலம்
விரிவும் ஆழமும்
பெறுவது
ஞானம்

எனும் பிரகடனத்தோடு வரும் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையின் 9வது இதழ் வெளிவந்துள்ளது. நு·மானின் மொழிபெயர்ப்புக் கவிதைக்ள், முருகையன் சிவசேகரம் போன்றோரின் சுவையான குறிப்புக்கள் ~ எஸ்.யோகானந்தன், எம்.எஸ்.எம்.அனஸ், துரை மனோகரன் ஆகியோரின் எழுத்துக்களை தாங்கி வந்துள்ள இவ்விதழை பெற விரும்புவோர் :

தி. ஞானசேகரன்,
19/7, பேராதனை வீதி,
கண்டி.

அடுத்த இதழில்



**காரசாரமான பேட்டி:**

'வேலை நிறுத்தம் செய்யமாட்டோம் என செய்யப்பட்ட ஒப்பந்தம் கிழித்தெறியப் பட வேண்டும்'



'ஊதிய உயர்வை மறுக்கும் வர்த்தமானி வெளியீடு வாபஸ் பெற வேண்டும்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனி சிறுவர்களை வசதியாக தூக்கிலிடலாம்! இப்பரிசை அமெரிக்காவில் வென்றவர்களில் அதிகமானோர் கறுப்பினத்தவர்.

சிறுவர்களை தூக்கில் தொங்க வகை செய்யும் ஏனைய நாடுகள் உலகில் அமெரிக்காவைத் தவிர, நான்கே நான்கு தான். ஈரான், நைஜீரியா, பாக்கிஸ்தான், சவுதி அரேபியா ஆகிய நான்குமே அவை. இனி இப்போது ஐந்தாவது நாடாக அமெரிக்கா சேர்ந்துள்ளது. ஆனால் கடந்த காலம் விடுபட்டதை எல்லாம் எட்டிப் பிடித்தாக வேண்டும் என அவசரப்படுவதுபோல் டெக்ஸாஸ் மாகாணத்தில் மாத்திரம் (ஜனவரி முடிவில்) 28 சிறுவர்கள் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சாவை எதிர்நோக்கி இருந்தனர். இவர்களில் 24 பேர் சிறுபான்மை இனத்தவர் ( 12 பேர் கறுப்பினத்தவர். 12 பேர் லத்தின் இனத்தவர்கள் ) மிச்சிகன் மாகாணம் 11 வயது

ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூறுகளிலேயே அமெரிக்கா தனது சிறுவர்களைப் பார்த்து உண்மையாகவே பயப்படத் தொடங்கியது என MARTINE KETTLE எனும் ஆய்வாளர், எழுதியுள்ளார். (GUARDIAN WEEKLY – JANUARY 20-26)

1992 இல் இருந்து அமெரிக்காவின் 50 மாகாணங்களில் 44 மாகாணங்கள் சிறுவர் சம்பந்தமான தமது சட்டங்களை மாற்றி அமைத்து அவர்களை இனிமேலும் சிறுவர்கள் போல கணிக்க முடியாது பெரியோர்கள் போலக் கணிக்க வேண்டும் எனக்கூறி அவர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடர ஏற்பாடு செய்து முடித்துவிட்டதை இவ் எழுத்தாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இச்சட்டத் திருத்தங்களுக்கு ஏற்ப, அமெரிக்க சிறுவர்களை இனி வசதியாக தூக்கிலிடலாம். மேற்படி திருத்தங்களின் பிரகாரம் கடந்த ஜனவரி வரை 13 அத்தகைய சிறுவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதை MARTINE KETTLE சுட்டி காட்டியுள்ளார்.

**உலக நாடுகள் அனைத்தையும் சேர்த்தாலும் இந்த அளவில் தூக்கிலிடப்பட்ட சிறுவர்கள் இல்லை– (AMNESTY INTERNATIONAL)**

இத்தகைய நிகழ்வுகள் உலகில் எந்த நாடுகளிலும் நடக்கவில்லை என்பது மாத்திரமல்ல – உலக நாடுகள் அனைத்தையும் சேர்த்தாலும் இந்த அளவில் தூக்கிலிடப்பட்ட சிறுவர்கள் இல்லை என (AMNESTY INTERNATIONAL) சுட்டி காட்டியுள்ளது.



28 சிறுவர்கள் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சாவை எதிர்நோக்கி இருந்தனர்.

www.tamilarangam.net

(ABRAHAM – படத்தில் உள்ள சிறுவன்) கறுப்பின சிறுவனுக்கு பெரியோரைப் போல தண்டனை விதித்து நீதி வரலாற்றிலேயே ஆக குறைந்த வயது சிறுவனுக்கு தண்டனை வழங்கிய பெருமையை 1997 இல் சுவீகரித்துக் கொண்டது.

சிறுவர்கள் செய்யும் குற்றங்கள் யாரால் தூண்டி விடப்படுகின்றன? இவர்கள் இந்த வயதில் குற்றங்களை இழைக்கத் தூண்டும் சமூக காரணிகள் யாவை? – இவை எல்லாம் அமெரிக்க நீதிக்கு தென்படுவதில்லையா என பல எதிர்ப்புக் குரல்கள் அமெரிக்காவிலேயே ஒலித்துள்ளது. இதை விட முக்கியமானது, கறுப்பினத்தைச் சார்ந்த வளர்ந்தோருக்கு எதிராகவே பாதக கொடுமைகளை செய்யும் அமெரிகக் பொலிஸார், சட்டம் இந்த அளவு அவர்கள் சார்பில் இடம் தந்தால் கறுப்பின சிறார்களை யாது செய்ய கூடும் என்ற வேதனை குரலும் எழவே செய்கின்றது. செய்வதெல்லாம் செய்துவிட்டு கூச்ச நாச்சமின்றி ஐ.நா.வுடன் சேர்ந்து சிறுவர் தினத்தை குதூகலமாய் கொண்டாடுங்கள் என உபதேசம் பண்ணும் நாடும் அமெரிக்கா போன்று வேறு உலகில் இலையெனலாம்.

# ஆறு வயது சிறுவன் மீது கொலை குற்றச் சாட்டு

மிச்சிகன் மகாணத்தில் 6 வயது சிறுவன் 1ம் வகுப்பில் உள்ள தனது சக வகுப்பு தோழியான KAYLA



அவளுக்கு சாவதற்குரிய வயதில்லை.

ROLLANFI (இவரும் ஆறு வயது) துப்பாக்கியால் கழுத்தில் சுட்டுகொன்றான். (03.03.2000) மேற்படி துப்பாக்கி 19 வயதுடைய ஜேம்ஸ்னுடையது என்றும், குறிப்பிட்ட ஜேம்ஸ் கவலையீனமாக தனது துப்பாக்கியை வைத்துள்ளான் என்பதால் அவனும் குறிப்பிட்ட ஆறு வயது சிறுவனுடன் அமெரிக்க நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளான்.

குறிப்பிட்ட ஆறு வயதுச் சிறுவனின் தந்தையும் தாத்தாவும் சிறையில் இருப்பதால் அவன் மாமா வீட்டில் வசித்ததாகவும் அங்கே போதை பொருட்களையும், இன்னுமொரு தோட்டாக்கள் ஏற்றப்பட்ட துப்பாக்கியையும் தேடுதலின் போது பொலிஸார் கண்டெடுத்ததாகவும் கூறியுள்ளனர். இத் துப்பாக்கிச் சூட்டுக்கு முதல் நாள் இருபிள்ளைகளும் சண்டையிட்டுக் கொண்டார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. 'இது ஒரு துக்ககரமான சம்பவம். அவளுக்கு சாவதற்குரிய வயதில்லை. அவள் இன்னும் வாழ்க்கையை ஆரம்பிக்கவில்லை' என்று மேற்படி சிறுமியின் ஆயாவான அமி லமோக்ஸ், மேற்படி துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக தனது விசனத்தை உலகத்துக்கு தெரியபடுத்தி உள்ளாள். இந்த ஆயாவுக்கு வேறு, வயது – 15.

இனி இந்த கூத்துகள் போக, இது பொறுத்து கிளிண்டனின் கேள்வி வருமாறு. 'பிள்ளைக்கு வயது ஆறு. இவளுக்கு துப்பாக்கி எப்படி கிடைத்தது? பிள்ளைக்கு துப்பாக்கி சுடக்கூடியதாக இருந்தது எதனால்? பிள்ளைகள் சுட முடியாத பொறிமுறையை துப்பாக்கிகளில் பொருத்தக் கூடிய தொழில்நுட்பம் எம்மிடம் இருக்குமானால் நாம் ஏன் அதை செய்யக்கூடாது'

நல்ல உபதேசம். அதைவிட, உண்மையாக, நல்ல தேசம், போங்கள்!

# வைத்தியரின் கையில் பூமாலை

நியுயோர்க் நீதிமன்றம் ஒன்று, ஓர் இளம் தாய்க்கு 1.75 மில்லியன் டாலரை நஷ்டஈடாக செலுத்துமாறு, அவரது



மகப்பேறு வைத்தியருக்கு – Dr. ALLAN ZARKIN – 61 வயது – தீர்ப்பு வழங்கியது. காரணம், அறுவைச்சிகிச்சையின் பின்னர் குறிப்பிட்ட வைத்தியர் சம்பந்தப்பட்ட மாதின் வயிற்றுப் பகுதியில் தனது பெயரை A.Z என செதுக்கியுள்ளார்.

குற்றவாளி எனக் காணப்பட்ட குறிப்பிட்ட வைத்தியர் தனது மூளையின் பின்பக்கமாய் தூண்டப்படும் சில குளறுபடிகள் காரணமாகவே இப்பிழையைத் தான் செய்ய நிகழ்ந்துள்ளதாக கூறியுள்ளார். குரங்கு கையில் பூமாலை போன்று இவ் அமெரிக்க வைத்தியர் கையில் அறுவைக் கத்தி.

www.tamilarangam.net

# ஓர் ஓவியனின் வழியனுப்பலுக்கான தோப்புத்துப் பாடல்

நிகல் லிங்கர்

லயங்கள்
ரகசியம் பேசிக் கொண்டன..
போகிறாராம் . .
போகிறாராம் . . !

விழிகளில் நீர்
முட்ட
கைகூப்பி . . வழி
அனுப்பி வைத்தோம்

தோழனே
ஒன்று சேரலில்
லயங்களை சேர்ந்தவனே !
உனக்கு
தெரியுமா . .

நைந்த சட்டையுடனும்
சிந்தா மூக்குடனும்
மீண்டும்
மீண்டும்
பிரட்டின் அதிர்வில்
சங்கமித்து போகும் – சிறுசுகளின்
வாழ்வில்
அந்தரங்கமாய்
உருத்திரதாண்டவம் ! – நீ
கீற்றுகளை விதைத்தாயே !

புரிகிறது தோழா . .
எனது தோழமைமிக்க
மக்களுக்காய் . . அவர்களின்
செழுமைக்காய்
ஒரு
பாடல் இசைக்க
நீ
கொண்ட சூழ்ச்சிமை
புரிகிறது தோழா–
வீர முரசு கொண்டு
பூமி பந்தை
புரட்டி காட்டுவேன்
என மார்தட்டும்
கூட்டம் ஒரு
புறம்..

எப்போதுமே !
தன் நலனுக்காய்–
பை சுமந்து
கால்பிடித்து
நைந்தவற்றின்
சாரமாய் ..
நரிகளின் குறியீடுகள்
ஒரு
புறம் . ..

இவர்களின்
மத்தியில்
மானுடத்தின் – கம்பீரத்தை
யௌவனத்தை–
தீட்டித்தர – இனியும்
மக்கள் வருவார்
எனும்
சித்திரமாய் – நின்ற நீ
மறுபுறம்

சென்று வா – தோழ
வாழுதி நீ.
நின் ஓவியம்
நிற்கா இசை மீட்டட்டும்
தொடர்ந்து –
அவை, மலைகளூடு.

## தலையங்கம் தொடர்பில்...

முதலாளித்தும் ஒழிக! என்று கழுத்து நரம்புகள் புடைக்க முஷ்டியை உயர்த்தி முழக்கமிட்டவர்களில் ஒருவன் தான் நான்.

முதலாளித்துவம் ஒழிக என்ற கோஷத்தை முதலில் பிரகடனம் செய்தவர் கார்ல் மார்க்ஸ் தான்! கம்யூனிஸ்டு அறிக்கை இவ்வாறு இறுதியில் பிரகடனம் செய்கிறது.

"உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள். நீங்கள் இழப்பதற்கு உங்களைப் பிணைத்திருக்கும் சங்கிலியைத் தவிர வேறொன்றுமில்லை: அடைவதற்கோ ஓர் உலகமே இருக்கிறது.!"

ஆம் இந்த நூற்றாண்டில் இருந்த முதலாளித்துவ சூழலில் அந்த கோஷமே, அந்த Definition தான் மிகச் சரியாதானதாக இருந்தது.

கணிப்புக்கள் காலத்தின் சூழலுக்கு ஏற்பத்தான் உருவாகும் என்பதால் காலத்தின் சூழலுக்கும் மாறுதலுக்கும் ஏற்ப மாறத்தான் வேண்டும்.

அப்படி மாறாத கணிப்புகள் காலத்தால் புறந்தள்ளியவை ஆகும். அத்தகைய காலத்தால் ஒதுக்கப்பட்ட கணிப்புகளை மந்திரம் போல ஜபிக்கிறவர்கள் தான் பிற்போக்குவாதிகள்.



மார்க்ஸ் விரும்பியது போல் அல்லது கணித்தது போல் அந்த 18, 19–ம் நூற்றாணடு முதலாளித்துவம் பல மாறுதல்களுக்கு இலக்காகி இன்று முற்றாக அழிந்துவிட்டது எனலாம். அதன் மிச்ச சொச்சங்களும், அதன் கூறுகளும் இருந்த போதிலும் கால மாற்றத்தால் அவை மேலும் மறைந்தொழியும்.

ஆயினும் மாறுதலும் வளர்ச்சியும் அடைந்த இந்த புதிய முதலாளித்துவத்தின் ஆக்கபூர்வமான நிலைப்பாடுகளைப் பார்க்கும் போது "முதலாளித்துவத்தை ஒழித்த பிறகு தான் சோஷலிசம;" என்ற கணிப்புமாறி "முதலாளித்துவத்தின் மூலமே அதனுடைய வளர்ச்சியின் மூலமே சோஷலிசத்தை அடைவது தான் சாத்தியம் " என்ற கணிப்பு உருவாக வேண்டும்: உருவாகும்.

சித்தாந்த ரீதியாகவே முதலாளித்துவமும் சோஷலிசமும் சமாதான சகவாழ்வுக்கு ஒத்திசையும் யுகம் இது.

நான் மதிக்கும் மார்க்ஸிய, இலக்கிய விமர்சகரான பேராசிரியர் கா.சிவத்தம்பி பேட்டியின் இடையில் இவ்வாறு கூறியுள்ளார்:

"..*There is a logic of marxism.* இந்த *logic of marxism*–த்தை மார்க்சியம் இடைக்காலத்தில் தவறவிட்டுவிட்டது. அந்தத் தர்க்கத்தை நாம் மீட்டெடுக்க வேண்டும் "
(தாமரை நவ.2000) – *நன்றி: குமுதம்.*

www.tamilarangam.net

# கறுப்பினத் தலைவர் மார்ட்டின் லூதர் கிங்கின் கொலை சதியல்ல



மக்கள் மத்தியில் கிங்

அமெரிக்க கறுப்பின தலைவரான மார்ட்டின் லூதர் கிங்கின் கொலையானது அமெரிக்க அரசு ஸ்தாபனம் உட்பட பலரும் பங்கேற்ற சதியாகாது. – மாறாக அது ஒரு தனிநபரால் மேற்கொள்ளப்பட்ட பிரத்தியோகமான கொலை என அண்மையில் அமெரிக்க நீதித் திணைக்களம் (US JUSTICE DEPARTMENT) முடிவொன்றினை வெளியிட்டுள்ளது. மேற்படி முடிவை மார்ட்டின் லூதர் கிங்கின் குடும்பத்தார் நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் புதிய கண்டுபிடிப்பு



கிங் கைது செய்யப்படுகிறார், வெள்ளை பொலிஸாரால்


முன்னதாக, மார்ட்டின் லூதர் கிங்கின் கொலை தொடர்பில் தீர்ப்புக் கூறிய ஓர் ஜீர்ரசபை (MEMPHIS CIVIL JURY) மெம்பிஸ் மதுபானசாலை உரிமையாளர்களில் ஒருவரான LLOYD JOWERS உம் அரச ஏஜன்சிகளை உள்ளடக்கிய இன்னும் பலரும் சேர்ந்து மேற்கொண்ட சதியே இக்கொலை என கூறிய தீர்ப்பைத் தொடர்ந்து மார்ட்டின் லூதர் கிங்கின் குடும்பத்தார் விரிவான ஓர் விசாரணைக்கான வேண்டுகோளை அமெரிக்க அரசிடம் விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை ஏற்று விசாரணையை 1998இல் நடாத்தி முடித்ததாய் இன்று கூறும் அமெரிக்க நீதித்திணைக்களம் இப்புதிய தீர்ப்பை வழங்கியுள்ளது.

பேய் அரசு செய்தால் சாத்திரம் மட்டுமா பிணம் தின்னும் – சட்டமும் கூடத்தான் என்கிறது கதை.

13.06.2000 PTI

www.tamilarangam.net




கொங்கோவின் முன்னால் பிரதமரான லுமும்பாவை (PATRICE LUMUMBA) 1961 இல் கொலை செய்து சாகடித்ததில் பெல்ஜியம் நேரடியாகவே சம்பந்தப்பட்டுள்ளது எனும் செய்தி

## லுமும்பாவின் உடல் பெல்ஜிய பொலிஸால் அமிலத்தில் கரைக்கப்பட்டது

ஆபிரிக்கா சம்பந்தமான ஆய்வாளரான LUDO DE WITTE யால் இன்று அம்பலத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இது குறித்த ஓர் பகிரங்க விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

காலணித்துவத்துக்கெதிராக கடுமையான முறையில் போர்க்கொடி தூக்கிய லுமும்பா, சுதந்திர கொங்கோவின் முதல் பிரதமரான போது வயது 36 மாத்திரமே.

ஆனால் லுமும்பா பதவி ஏற்று ஒரு மாதத்துக்குள்ளாகவே அவரை பூண்டோடு அழிக்கும் திட்டம் தயாரானது.

சரியாக பதவியேற்று ஒரு மாதமளவில் செம்பு உற்பத்தியில் செழுமை மிகு பிரதேசமாக விளங்கிய, கொங்கோவின் கட்டாங்கா பிரதேசம் (KATANGA) MOISE TSHOMBE யின் தலைமையில் சுயாட்சி கோரி போர் கொடி தூக்கிற்று.

சுயாட்சி வேடம் பூண்ட *TSHOMBE*, லுமும்பாவின் அரசுக்கெதிரான போராட்டத்தில் பெல்ஜியம், பிரான்ஸ், தென்னாபிரிக்காவின் கூலி படைகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தினார்.

இச்சூழலில் ஐக்கியநாட்டு சபையின் மிகப் பெரிய அமைதி காக்கும் படை கொங்கோவுக்கு வரவழைக்கப்பட்டது. ஆனால் பல இடங்களில் நடந்தது போல அது ஆற்றிய சேவை பூஜ்ஜியம் தான். (அல்லது எதிர்மறையானது). லுமும்பா கொல்லப்பட்டார்.

தொடர்ந்து, அவ்வேளையில் அவ்வளவாக



**சிம்பாவே உடன் பிரச்சனைக்குரிய கூட்டு**

பெயர் ஊர் தெரிந்திருக்காத நபரான கேணல் ஜோசப் டிசைரோ (JOSEPH DESIRE) மொப்புடு என்பவர் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினார். இவரே கொங்கோவை, சாய்ரே (ZAIRE) என்று பெயர் மாற்றம் செய்வித்தவர். இவரது ஆட்சி 1997 மேயில் முடியும் வரை மேற்கத்தைய நாடுகளின் அதீத விசுவாசவனாய் சேவகம் புரிந்தார்.

அமெரிக்கா லுமும்பாவை ஓர் தீவிர தேசியவாதியாகவும் கம்யூனிஸ்ட் அனுதாபியாகவும் பார்த்தது. லுமும்பாவின் கொலையில் CIA இன் பங்களிப்பு கடந்தகால அமெரிக்க செனட் விவாதங்களின் போதும் ஏனைய தஸ்தாவேஜிகளின் மூலமும் நிரூபமான ஒன்று.

ஆனால் *DEWITTE* யின் ஆய்வு (400 பக்கங்கள் கொண்ட நூல்) லுமும்பா கொலை செய்யப்பட்ட காலத்தில் கொங்கோவில் அமெரிக்கா சுதந்திரமாக செயல்பட கூடிய வாய்ப்புகள் இல்லை என்பதும் தனது செயல்பாட்டுக்கு அமெரிக்கா பெல்ஜியத்திலேயே தங்கியிருந்தது என்பதையும் பெல்ஜியம் அதிகாரிகளே இக்கொலையை நிறைவேற்றினர் என்பதையும் எடுத்துக் கூறுகிறது.



**சேகுவாரா திருப்தி பட்டதாக இல்லை.**

1960 ஒக்டோபரில் ஆப்பிரிக்காவுக்கான பெல்ஜிய அமைச்சர் *HAROLD ASPREMONT LYNDEN* குறிப்பாக கூறியிருந்தார். “கொங்கோவினதும் கட்டாங்காவினதும் பெல்ஜியத்தினதும் நலன்களுக்காக லுமும்பாவை இல்லாதொழித்தலே இறுதி தீர்வாகிறது” என.

ஜனவரி 17இல் லுமும்பா மொபுட்டு படைகளினால் கைது செய்யப்பட்டு பெல்ஜிய வெளிவிவகார அமைச்சரினதும் ஆப்பிரிக்காவுக்கான பெல்ஜிய அமைச்சரினதும் உத்தரவின் பேரில் அவரது உடல் கட்டாங்காவுக்கு கொண்டு செல்லப்பட்டு பெல்ஜிய பொலிஸ் கமிஷனரினால் அமிலத்தால் கரைக்கப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டது என *WITTE* இன் ஆய்வு கூறுகிறது.

*(GUARDIAN WEEKLY 20-26 January -2000)*

www.tamilarangam.net

சாது போலிருக்கும், சிறிய மேற்கத்தைய நாடுகள் வல்லரசுகளின் சிக்கல்மிக்க சதிகளை எப்படி கொண்டு நடாத்துகின்றன என்பதற்கு இவ்பெல்ஜிய சாதனை ஓர் முன்னுதாரணம்.

இப்போது கொங்கோவின் அண்மைக்கால ஜனாதிபதியான லோரன்ஸ் கபிலாவும் மர்மமான சூழலில் சுடப்பட்டுள்ளார்.

இவரது மரணம் தொடர்பாய் முதன்முதலாய் வெளிவந்த அறிக்கைகளில் ஒன்று பெல்ஜியத்தினது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கபிலாவின் மரணம் கூட கொங்கோ அதிகாரிகளால் ஊர்ஜிதப்படுத்தப்படாத வேளையில், பெல்ஜிய அமைச்சர் மேற்படி மரணத்துக்கு சதிமுயற்சியல்ல ஆனால் கருத்து வேறுபாடே காரணம் என்று மரணத்துக்கான காரணம் பொறுத்து கூறிய கூற்றுக்கள் கவனிக்கத்தக்கவை.

1939இல் கொங்கோ பெல்ஜியத்தின் ஆட்சியின் கீழ் இருந்த காலப்பகுதியில் பிறந்தவரான கபிலா, கியுபாவின் சேகு வாராவோடு தொடர்பு கொண்டிருந்தாலும் சேகுவாராவின் குறிப்புகள் கபிலா பொறுத்து திருப்தியைக் காட்டுவதாக இல்லை.

30 வருடகால மொபுட்டுவின் ஆட்சியை உகண்டா, ருவண்டா நண்பர்களின் உதவியுடன் 1996இல் வீழ்த்திய பின் பதவிக்கு வந்த கபிலா பின்னர் மேற்படி நணபர்களை விரோதித்துக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1998 முதல் பிராந்திய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் கொங்கோவில் தற்போது ஆறு வெளிநாட்டு இராணுவங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. கபிலாவுக்கு சிம்பாவே, அங்கோலா, நமீபியா ஆகியவை ஆதரவளித்தன. இவரை எதிர்த்து போரிட்ட கிளர்ச்சிக் குழுக்களுக்கு உகண்டா, ருவண்டா போன்ற நாடுகள் ஆதரவளித்தன.

வைரம், தங்கம், செம்பு போன்ற உலோகங்களின் விளைச்சலுக்குப் பேர்போன கொங்கோ இப்படியாக பிய்த்துக் குதறிப் பிடுங்கப்படுவது ஒன்றும் அதிசயமானதல்ல ~ எண்ணெய் வளம் கொண்ட மத்திய கிழக்கினைப் போல.

# சொல்லுங்கன்னா...!

அண்மைக்கால ஓர் ஆய்வின்படி இலங்கை அரசானது 1984க்கும் 1996க்கும் இடைப்பட்ட கால பகுதியில் 118308.7 கோடி ரூபாயை போருக்கு செலவழித்துள்ளது.

ஆனால் 1996இல், இலங்கையின் மொத்த உற்பத்தியின் பெறுமனம் 695,93.4 கோடி மாத்திரமே.

இதுபோக, 1999 மத்திய வங்கியின் அறிக்கை இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது 2 அல்லது 3விகிதத்தில் வருடத்திற்கு குறைந்து வருவதை சுட்டிக் காட்டியுள்ளது. மேற்படி அறிக்கையின் படி குறைந்த பட்சம் 60,000 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். 7 லட்சம் பேர் அகதிகளாயுள்ளனர். இவர்களில் 400,000 சிறுவர் சிறுமியர் இவர்களில் பெரும்பாலானோரின் மனோநிலை பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் அவசரகால பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 18ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (தினக்குரல் 16.02.2001)

இந்த யதார்த்தத்தின் பின்னணியிலேயே கின்னஸ் ரிகார்டை ஏற்படுத்தும் விதத்தில் மிக பெரிய யாசிக்கும் குழு (பிச்சைக்கார குழு என்பது மரியாதை குறைந்த வார்த்தை) பாரிஸ்க்கு உதவி வழங்கும் மகாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த பிரமாண்டமான குழுவை விட சுவாரசியமானது மகாநாடு முடிவில் இப்பிரமாண்ட குழுவினர் பத்திரிக்கைகளுக்கு அளித்த பதில்கள்:

'உதவி கிடைத்ததா'
'கிடைத்த மாதிரித் தான்'
'எவ்ளோ உதவி'
'க்கும்.. வெக்கமா இருக்கு.. இப்டி வெளிப்படையா கேட்டா'
'சொல்லுங்கனா..'
'சொல்லமாட்டோம்னா..'

இதுதான் நாட்டு மக்களுக்கு பொறுப்பு கூறும் ஓர் அரசின் லட்சணம். மக்களிடம் இருந்து உண்மை விடயங்களை மறைப்பது — அதற்கூடாக தமது அதிகாரங்களை கட்டிகாப்பது, பொதுவில் ஆளும் வர்க்கங்களின் தலையாய தந்திரோபாயம்தான். ஆனால் இந்த அளவுக்கு மறைப்பது என்பது வளரும் பாசிச முளைகளை சுட்டிக் காட்டுவதாய் உள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட 2001ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு அறிக்கையின் பிரகாரம் பாதுகாப்புச் செலவீனம் 1088கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இனி, இந்த லட்சணத்தில் மக்களின் கண்களைக் கட்டுவதென்பது தேவையான நிர்பந்தமாகிறது.

www.tamilarangam.net

# கார் மெக்கானிக்கை நோக்கி நாற்பது சூடுகள் !!!!!




கருப்பின மக்களின் துயர்



வான்கோவின் ஓவியம்

அமெரிக்க மாகாணங்களில் ஒன்றான PHILADELPHIA வில் தோமஸ்ஜோன் எனும் கறுப்பு நிறத்து கார்மெக்கானிக்கை துரத்திச் சென்ற பொலீஸார் அவனை நோக்கி நாற்பது சூடுகள் சுட்டது மாத்திரமல்ல அவனை வீதியில் இழுத்துப் போட்டு கொடூரமாக உதைத்தும் அடித்தும் நொறுக்கி இருக்கிறார்கள். 30 வயதான தோமஸ் குற்றுயிராக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவரது அடிவயிற்றிலும் கைகளிலும் சுடப்பட்டு இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இவர் இப்படி நடுதெருவில் அடித்து நொறுக்கப்பட்டதை யதேச்சையாக ஹெலிகப்டரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு நபர் வீடியோ எடுத்து விட குறிப்பிட்ட செய்தி அம்பலத்துக்கு வந்தது. 1992 இல் ரொட்னி கிங் என்பவர் இப்படி அடித்து நொறுக்கப்பட்டதும் பின் தற்செயலாக எடுக்கப்பட்ட வீடியோ மூலமாக அச்செய்தி அம்பலத்துக்கு வந்ததைத் தொடர்ந்து, கறுப்பின மக்களை நெரிக்கின்ற அமெரிக்க பொலிசாரின் மிருகத்தனம் உலகத்தின் முன் வெளிச்சத்துக்கு வந்தது.



தோமஸ்ஸை வெள்ளை பொலிஸார் பிய்த்து குதறுகின்றனர்

**மனித உரிமைகள்**

கதை இப்படி இருந்தும் கூட அமெரிக்கா, முக்கியமாக கிளிண்டனும், அல்பிரட் அம்மணியும் நாகூசாமல் மனித உரிமைகள் குறித்து ஐ.நா மேடைகளில் நெட்டி முழங்குவதும் அவர்களின் பிரதிநிதிகள் உலக நாடுகள் முழுவதும் மனித உரிமைகள் குறித்து வகை வகையாக உபதேசம் செய்வதும் இன்றைய 'பூகோளமயமாகும்' உலகில் கிட்டத்தட்ட ஓர் நியதியாகவே உருவாகி உள்ளது. இதனையே புஷ்ஷும் தொடர்வார் என எதிர்பார்க்கலாம். USA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செச்னிய யுத்தம்: ரஷ்ய சிந்தனையில் ஓர் புதிய திருப்புமுனை!!

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் பிரச்சனையைப் போன்று ரஷ்யாவின் பாதத்தில் தைத்த நெருஞ்சியாக செச்னிய பிரச்சனை உருவாகி உள்ளது.

ஜம்மு கஷ்மீரின் பின்னணியில் எப்படி ஒரு பாகிஸ்தானிய நலனும், அந்த நலனின் பின்னணியில் எப்படி ஓர் அமெரிக்க நலனும் மறைந்து ஒளிந்து இருக்கின்றதோ, அதே வகையில் செச்னியாவின் பின்னணியில் ஓர் ஆப்கானிஸ்தான் தொடர்பும் அதற்கு பின்னாலே ஓர் அமெரிக்க வலைபின்னலும் நீள்வதாகவே அரசியல் அவதானிகள் எண்ணம் தெரிவித்துள்ளனர்.

ஆனால் புட்டினின் அதிகாரத்தின் கீழ் ரஷ்யா செச்னிய பிரச்சனையை கையாண்ட விதம் யெல்சின் கையாண்ட விதத்தில் இருந்து குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை உடையதாக இருந்தது. ஆரம்ப காலங்களில் ... செச்னியாவுக்கு எதிரான படை நடவடிக்கைகளுக்கு சராசரி ரஷ்ய மக்கள் எந்த அளவுக்கு ஆதரவு தந்தார்கள் என்பது கேள்விக் குறியே.

அவர்களைப் பொறுத்த மட்டில் உள்நாட்டுப் பிரச்சனைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன.

பிரஸ்டோரிக்கா, மெக்டோனால்ட் கனவுகள் வெறும் உப்புச் சப்பற்ற நிலையை அடைந்துவிட, தாம் போதித்த மேற்கத்தைய சுதந்திரம் அவர்களை உலக வங்கியின் முன் பிச்சைக் கோப்பையுடன் நிறுத்தியதைத் தவிர யாதொன்றையும் சாதிக்காநிலையில், உள்நாட்டு பெருச்சாளிகள் ரூபிள்களைக் குவித்து கட்டிகொள்ள ரஷ்ய மக்களின் விழிப்புநிலை கருக்கட்டத் தொடங்கியது.

1999 இன் இறுதிப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின் பிரகாரம் 45வீதமான ரஷ்ய மக்கள் ஸ்டாலினை 20ம் நூற்றாண்டின் மிகப் பெரிய மனிதர் என வாக்களித்து தமது அரசியல் எண்ணப்பாட்டை வெளியிட்டனர்.

(VLADIMIR RADYUHIN In HINDU 19.12.1999)

இக்காலப்பகுதியில் ரஷ்ய மக்கள் வீதிகளில் ஸ்டாலினதும், லெனினதும் பதாகைகளை ஏந்தியவாறு கோஷிப்பது வழமையாகும் ஒரு பண்பை எட்டியது. அவர்களின் கோரிக்கை பழைய சோவியத்தை மீளக்கொணர்வது என்ற வகையில் வடிவம் பெற்றது. இது ஒரு புறம் இருக்க, இதே காலப்பகுதியில் ஜியர்ஜியா, தன் நாட்டின் மீது ரஷ்ய விமானங்கள் குண்டு வீசியதாக புகார் தொடுத்தது.

ஜியார்ஜியாவின் இந்த புகாருக்கு பெரிய ஓர் பின்னணியே உண்டு எனலாம்.

## ரஷ்ய சிதைவும் அமெரிக்காவின் ஊடுருவலும்

சோவியத் யூனியனின் சிதைவின் பின் அமெரிக்கா அரசியல் ரீதியாகவும், பொருளியல் ரீதியாகவும் ரஷ்யாக்கு ஆதரவு தந்தே தீருவோம் என நீட்டி முழங்கியது என்னவோ உண்மை தான்.

ஆனால் அமெரிக்கா ஒரு சதத்தையேனும் பயன் கருதாமல், நீட்டப்போவதில்லை என்பதை ரஷ்யாவும் ரஷ்ய மக்களும் மிக விரைவிலேயே கண்டுணர நேர்ந்தது.

விடயம் இத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லை. ஆனால் சோவியத்தை சிதைப்பதற்கு முன்னணியில் நின்ற அமெரிக்கா, ரஷ்யாவின் வாய்க்கு முன்னால் மெக்டோனால்ட் இறைச்சித் துண்டை காட்டிவிட்டு அதன் பின் கதவால் முன்னைய சோவியத் நாடுகளின் மூல வளங்களை,சந்தைகளை அபகரிக்கத் திட்டம் தீட்டிற்று.

இதன் முதல் கட்டமாக பழைய சோவியத்தில் அங்கம் வகித்த நாடுகள் ஒவ்வொன்றையும், ஒன்றன் பின் ஒன்றாக, ரஷ்யாவின் கண் முன்னாலேயே விழுங்கி கபளீகாரம் செய்யத் தொடங்கியது. அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோவின் கீழ்த் திசைநோக்கிய ஆதிக்கமும் விஸ்தரிப்பும் ரஷ்யாவின் பின்புற வாசல்படி வரை வந்தும் யெல்சின் விழித்ததாக தெரியவில்லை. இவற்றுக்கு உதாரணமாய் பின்வரும் பாரிய சம்பங்களை குறிப்பிடலாம்:

1. அஸர்பஜான், ஜியார்ஜியா கஸகஸ்தான் ஆசிய நாடுகள் துருக்கிக் கூடாக ஐரோப்பாவுக்கு கஸ்பியன் கடல் எண்ணை வளத்தை வழங்கும் வகையில் எண்ணெய் குழாய்களை கிடத்த ஒப்பந்தம் செய்தன. மேற்படி எண்ணெய் வளங்களை ரஷ்ய நிலப்பரப்புக்கூடாக விநியோகிப்பது மிகுந்த லாபகரமானது. மேலும் அத்தகைய ஒரு நடைமுறையை மேற்கொள்ளும்படி மாஸ்கோ மேற்படி நாடுகளிடம் பலமுறை எடுத்துக் கூறியும் மேற்படி நாடுகள் மேற்கத்தைய நாடுகளின் செல்வாக்குகளின் காரணமாக ரஷ்யாவின் மேற்படி கோரிக்கையைத் தட்டி கழித்துவிட்டன. (28.11.99 — HINDU)

இதன் மூலம் ரஷ்யாவுக்கு கிட்டவிருந்த வருமானம் இல்லாதுபோனது என்பது ஒரு புறம் இருக்க மேற்படி நிகழ்வு, பண்டைய சோவியத் நாடுகளிடை மேற்கத்தைய நாடுகளின் செல்வாக்கு யாது என்பதைச் சுட்டிக் காட்டும் ஓர் நிகழ்வாகவும் இருந்தது.

2. இதேப் போன்று மற்றுமொரு கஸ்பியன் எண்ணை வழங்கும் திட்டமானது TURK MENISTAN இலிருந்து துருக்கி வரை நீள்வும், அஃது ஜியார்ஜிய, அஸர்பஜான் ஆகிய நாடுகளுக்கூடு செல்லவும் வழிவகுத்தது.

www.tamilarangam.net

இத்திட்டம் அமுலுக்கு வரும் போது, கருங்கடலுக்கூடாக துருக்கிக்கு கப்பல் மூலம் எண்ணை ஏற்றுமதி செய்யும் ரஷ்யாவின் BLUE STREAM திட்டம் செயலிழந்து விடும். மேற்படி BLUE STREAM திட்டத்திற்கு அமெரிக்கா கடந்த காலங்களில் கடும் எதிர்ப்பை தெரிவித்து வந்திருந்தது.

(ருஷ்யாவின் நலன்களுக்கு, விருப்புக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மேற்படி இரு திட்டங்களும் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் எண்ணை விநியோக பாதைகள் பொறுத்து ரஷ்யா கொண்டுள்ள ஆதிக்கம் தரைமட்டம் ஆகிவிடும் என ஆய்வறிக்கைகள் சுட்டிக்-காட்டியுள்ளன.)

3. இது ஒரு புறம் இருக்க 99இன் இறுதிக் காலப்பகுதியில், ஜியார்ஜியா தலைவர், தான் மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில், 2005ம் ஆண்டில் ஜியார்ஜியாவை நேட்டோவின் ஓர் அங்கத்தவராக மாற்றிவிடுவேன் என்றும் கூளுரைத்தார்.

4. மறுபுறத்தில் இதே காலப்பகுதியில், ரஷ்ய ஆதிக்கத்துக்கு எதிராக தனது தேசத்தில் இராணுவ தளங்களை அமைத்துக் கொள்ள அமெரிக்காவுக்கும், துருக்கிக்கும் அஸர்பஜான் வேறு அழைப்பு விடுத்தது.

5. இதே காலப்பகுதியில் ரஷ்யாவின் தோழமை நாடாக தொடர்ந்து இருக்கும் ஆர்மேனியாவின் பிரதமரும் சபாநாயகரும் - ஓர் மர்மமான பயங்கரவாத தாக்குதலில் மரணமடைந்தனர். (இருவரும் ரஷ்யாவின் தீவிர ஆதரவாளர்களாக இருந்தவர்கள்.)



ருஷ்ய படைகள் - செச்னியாவில்



புதிய கூட்டு தயாராகிறது

6. இதேவேளை ஜியார்ஜியா, உக்ரேன், அஜர்பஜான், மோல்டோவா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய GUHAM அமைப்பு உஸ்பெகிஸ்தானையும் உள்ளடக்க வழிஅமைக்கும் வகையில் விஸ்தரிக்கப்பட்டது.

GUHAM எனப்படும் மேற்படி அமைப்பு அமெரிக்காவிலேயே அமைக்கப்பட்டது என்பது ஒரு புறம் இருக்க மேற்படி நாடுகள் முன்னைய சோவியத்தின் வீழ்ச்சியின் பின், ஒன்பது சோவியத் நாடுகளால் அமைக்கப்பட்ட COLLECTIVE SECURITY TREATY இல் தமது அங்கத்துவத்தை புதுப்பிக்க மறுத்துவிட்டன.

7. போததற்கு ஜியார்ஜிய இராணுவம் அமெரிக்க, ஜேர்மனிய புத்தி ஜீவிகளை தனது இராணுவத்தில் வேலைக்கமர்த்தும் கைங்காரியத்தையும் மேற்கொண்டது.

இவ் அனைத்து நிகழ்வுகளும் சோவியத்தின் சிதைவின் பின், அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் தங்குதடையற்ற விஸ்தரிப்புத் திட்டத்தையும் ஊடுருவலையும் அப்பட்டமாக வெளிக்கொணர்வதாய் இருந்தது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால் ரஷ்யாவை அதனது முந்தைய சோவியத் நாடுகளிடமிருந்து தனிமைபடுத்தலும், அதற்கூடாக அதனை பலம் இழக்கச் செய்வதும், அதற்கூடாக ஓர் திட்டமிட்ட ரீதியில் தனது நலன்களை முந்தைய சோவியத் நாடுகளில் மாத்திரமல்ல - உலக ரீதியாகவே

www.tamilarangam.net

முன்னெடுப்பதும் அமெரிக்காவின் சிந்தித்த தெளிந்த நடைமுறையாக – வேலைத்திட்டமாக அமைந்திருந்தது.

ஆனால் உலக வங்கியின் கடனுக்காகவும், தனது உள்நாட்டில் பழைய சோவியத்தை மீள்கொணர போராட துடிக்கும் எண்ணற்ற உழைக்கும் மக்களுக்கு எதிராக போராட்டத்தில் பங்காளியாக பிரசன்னம் கொள்வதற்காகவும், ரஷ்யா அமெரிக்காவின் ஆதரவை எதிர்பார்த்து காத்துக் கிடந்தது.

ஆனால் ரஷ்யாவின் எதிர்பார்ப்பு ஓர் மூலையில் கிடக்க அமெரிக்காவின் நடவடிக்கைகள் மேல் குறித்தவாறு தங்குதடையற்ற பிரவாகமாய் தொடர்ந்தது.



செச்னிய யுத்தம் ரஷ்யாவுக்கு மாத்திரமன்றி ரஷ்யா – அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்குமே ஓர் சோதனையாக மாறியது.

ஒரு புறத்தில், அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் செச்னிய விவகாரத்தில், ரஷ்யாவுக்கு எதிராக எந்த அளவுக்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்கின்றன என்பதை பழைய சோவியத்நாடுகள் கவனமாக அவதானித்து வந்தன.

ஏனெனில் ரஷ்யாவைப் பகைத்து, நேட்டோ சார்பாக தாம் எடுக்கக்கூடிய நிலைப்பாட்டில் நேட்டோநாடுகள் எந்த அளவுக்கு தமக்கு ஆதரவாக தந்து தம்மை எந்த ஓர் கடுமையான சூழலில் இருந்து மீட்டெடுக்க கூடியன என்பதை அவை கவனமாக கணிக்க வேண்டியிருந்தது.

இவ் எண்ணக்கருவை , இச்சிக்கலை, இதே போன்று உணர்ந்த அமெரிக்காவும் செச்னிய பிரச்சனையில் தனது பலத்தை வெளிக்காட்டி பழைய சோவியத் நாடுகளை ரஷ்யாவுக்கு எதிராக ( ரஷ்யாவின் செல்வாக்குப் பிடியில் இருந்து மீட்டெடுத்து) தனது ஆதிக்கப் பிடிக்குள் கொண்டு வந்து சேர்க்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது.

மறுபுறத்தில் தனது வீட்டின் பின் கதவு வரை வந்து சூறையாட முற்பட்டுள்ள சக்திகளுக்கு எதிராக தான் இப்போதேனும் தீர்க்கமாக ஓர் நடவடிக்கையை எடுக்காவிட்டால் முன்னைய சோவியத் நாடுகள் தனக்கு எதிராக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பல்கி பெருகி, இப்போது இருப்பதும் இல்லாதாகி –தானும் அமெரிக்காவின் முன்னால் மண்டியிடும் நிலையே நிரந்தரமாகி விடும் என்பது ரஷ்யாவின் எண்ணப்பாடாக இருந்தது.

இத்தகைய ஓர் செச்னிய பின்னணியில் அமெரிக்க தூண்டுதலுக்கு ஒவ்வ பின்வரும் விடயங்கள் நடந்தேறின:

1. 99ம் வருடத்தின் இறுதிப் பகுதியில் (19.12.99) G–8 அமைப்பில், செச்னிய விவகாரத்துக்காக, ரஷ்யாவை தனிமைப் படுத்தும் முயற்சிகள் நடந்தேறின.
2. கடந்த வருடத்தின் முற்பகுதியில் (7.4.2000) Council of Europe அமைப்பில் இருந்து ரஷ்யாவை விலக்கி வைக்க வேண்டும் என்ற தீர்மானம் பிரேரிக்கப்பட்டது.
3. இதுபோக கடந்த பெப்ரவரி துவக்கத்தில் ரஷ்ய கப்பல்களில் ஒன்றான VOL GONEFT -147, சர்வதேசிய கடற்பரப்பில் அமெரிக்கா காவால் சோதனையிடப்பட்டு சிறைப்பிடிக்கப் பட்டது. இந்நிகழ்வு ரஷ்யாவுக்கு தாங்கவொண்ணா தலைகுனிவை ஏற்படுத்தியது. அமெரிக்கா தனது செய்கைக்கு கூறிய காரணம், கப்பல் ஈராக்கில் இருந்து எண்ணை பெற்று சென்றது என்பதே. இக்கப்பலின் சிறைப்பிடிப்பு அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ரஷ்யாவை விட்டு புறப்பட்ட மறுதினமே நிகழ்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்தும் பழைய சோவியத் நாடுகளிடையே மாத்திரமல்ல – ஆனால் உலக நாடுகளுக்கு மத்தியில் – பரவலாக – ரஷ்யாவின் பலத்தை, சக்தியை கேள்விக் குறிக்குள்ளாக்கின.

இது ஒருபுறம் இருக்க மேற்படி நிகழ்வுகள் மறுபுறத்தில் ரஷ்ய மக்கள் மத்தியில் மேற்கத்தைய நாடுகளின் சதிக்கு எதிரான ஓர் தேசிய உணர்வை, தேசிய அலையை தட்டி எழுப்ப தொடங்கியது.

இத்தேசிய அலை, 1940களில் ஸ்டாலின் ஜெர்மனிக்கு எதிராக தட்டி எழுப்பிய தேசிய அலைகளில் இருந்து உள்ளடக்க ரீதியாகவே வித்தியாசப்பட்டது என்பதை குறித்தல் வேண்டும்.

1940இல் வித்தியாசப்பட்ட இத்தேசிய அலை புட்டினால் முக்கியமான மூன்று காரணங்களுக்காக பாவிக்கப்பட்டது எனலாம்.

1. ரஷ்யாவில் எழுந்த உழைக்கும் மக்களின் போராட்ட உணர்வை, மேற்படி தேசிய அலையாக மாற்றி திசை திருப்பி – பின் தள்ளி உள்நாட்டு முதலாளிகளின் நலன்களை கட்டிக் காக்க.
2. மேற்கத்தைய நாடுகளுடன் ஊடாடும் பழைய சோவியத் நாடுகளுக்கு ஓர் பாடமாக்க.
3. உலக நாடுகளிடை தனது செல்வாக்கினை மீள கட்டி அமைக்க

இம்மூன்று விவகாரங்களும் ஒன்றுடன் ஒன்று தங்கியும் பிணைந்தும் சார்ந்தும் விளைவுகளை உருவாக்கத்தக்கன என்பதை புட்டின் தலைமையிலான ரஷ்ய ஆளும் வர்க்கம் மிக நன்றாகவே புரிந்து வைத்திருந்தது.

செச்னிய குடியரசுக்கு எதிராக, ரஷ்யா தேவைக்கதிகமாக மூர்க்கத்தனத்தை பிரயோகித்தது உண்மை எனில் அதற்கான காரணிகளை மேற்படி தர்க்கங்களில் இருந்தே தேட வேண்டி இருக்கும்.


வெளிவந்துவிட்டது



தொடர்புகளுக்கு:
46/2, பழைய வாடிவீட்டுத் தெரு,
மட்டக்களப்பு

www.tamilarangam.net

# வானிலிருந்து உங்கள் கம்பியூட்டர் உளவு பார்க்கப்படுகின்றது!

## பிரமிக்க வைக்கும் கம்ப்யூட்டர் உளவு முறைகள்

பல வருடங்களாக பிறர் அறியா வண்ணமும், மிகுந்த அந்தரங்கமான முறையிலும் அணுந்து ரகசியங்களிலும் ஊடுருவி ஒற்று கேட்கும் முறைமை ஒன்றை கூட்டாக அமெரிக்காவும் – பிரிட்டனும் கடந்த பல வருடங்களாக கடைப்பிடித்து வந்துள்ள செய்தி இன்று அம்பலத்துக்கு வந்துள்ளது.

எச்லான் வலை பின்னல் (ECHLON NET WORK ) என்ற பெயரில் அழைக்கப்பட்ட இவ் ஒற்று கேட்கும் முறையானது உலகம் முழவதும் செயற்படக் கூடிய தொலைபேசி அழைப்புக்கள், ஈமெயில்கள், ஃபாக்ஸ் செய்திகள் – இவற்றை கவனமாக குறிப்பிட்ட வார்த்தைகளுக்காக அலசி ஆராய்ந்து அவற்றில் அக்குறிப்பிட்ட வார்த்தைகள் காணக்கிட்டும்பட்சத்தில் அச்செய்திகளை தனியாக பொறுக்கி எடுத்து அவற்றை பிறிதாக வகைப்படுத்தி தொகுத்து புலனாய்வு துறைக்கு சமர்ப்பிக்கும் சக்தி பெற்றன.




பிரிட்டனின் உதவியுடன் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஏஜென்சியால் 1990 இல் இருந்தே இயக்குவிக்கப்படுவதாக கூறப்படும் இவ்உளவு கேட்கும் முறை மணிக்கு கோடிக்கணக்கான செய்திகளைப் ஆய்ந்து தேடிப் பார்த்து, மோப்பம் பிடித்து, வகை பிரிக்கும் திறன் கொண்டது.

## ஐரோப்பிய பாராளுமன்றத்தில் அம்பலம்!

இவ் உளவு வலைப்பின்னல் (NET WORK) பத்து வருடங்கள் கழித்த பின்னரே, ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையினூடு அம்பலப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

விண்வெளியில் காணக்கிட்டும் உளவு பார்க்கும் செய்மதிகளையும் (SPY SATALITE) பூமியில் காணக்கிட்டும் செவி மடுக்கும் தளங்களையும் (Listening Posts) இணைந்த ஒரு வலைப்பின்னலாகவே இது தொழிற் படுகின்றது.

இவ்வலைப்பின்னவக்குரிய செவிமடுக்கும் தளங்கள் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளில் அமைந்துள்ளதாம்.

ஐரோப்பிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி அறிக்கையின் பிரகாரமும், *Indepen-dent on Sunday* எனும் பத்திரிக்கை விவாதிப்புகளின் படியும் பிரான்ஸ் கம்பனிகள் நடத்தி முடிக்கவிருந்த வியாபார ஒப்பந்தங்களை கடைசி நிமிடத்தில், அமெரிக்க கம்பனிகள் தனதாக்கி கொள்ள இவ் உளவு முறையே பாரிய அளவில் பாவிக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது.

இதுப் போக அண்மையில் பிரான்ஸின் பாதுகாப்பு அமைச்சின் உளவு பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையின் பிரகாரம் அமெரிக்காவின் ராட்ஷச கம்யூட்டர் கம்பெனியான *MICROSOFT* அமெரிக்க உளவு ஸ்தாபனங்களுக்கு பயன்படும் வகையில் தனது **MS-DOS** அமைப்பு முறைகளில் உளவு பார்க்கும் ஏற்பாடுகளை ரகசியமாக ஒளித்து பொருத்தி இணைத்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இச்செய்தியை அம்பலப்படுத்தியுள்ள கார்டியன் வீக்லி பத்திரிக்கை, மேற்படி ஏற்பாடு ஓர் கம்யூட்டரில் சேமிக்க வைக்கப்படும் எந்த ஓர் ரகசிய தகவலையும் – அது எந்த ஓர் சங்கேத பாஷையில் இருப்பினும் கூட – பிரித்துணர்ந்து, கைமாற்றிவிடும் திறன் கொண்டுள்ளது என குறிப்பிட்டுள்ளது.

சில காலத்தின் முன் இந்திய பாதுகாப்புதுறை ஆலோசகரான அப்துல் கலாம், தனது அரசாங்கத்துக்கு விடுத்த எச்சரிக்கையில், இந்திய ராணுவம் இந்தியாவில் செய்யப்பட்ட கம்யூட்டர்களை மாத்திரமே பாவிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறியதும் அண்மையில் மைக்ரோ சாஃப்ட் உரிமையாளரான பில்கேட் இந்தியாவுக்கு வருகை தந்து தனது கம்பனியை இந்தியாவின் உள்நாட்டுக் கம்பனி ஒன்றுடன் கூட்டு நடவடிக்கைக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதும் இவ்வகையில் சில விடயங்களை தொட்டு உணர்த்துவதாக உள்ளன.

உலக ரீதியான ஆக்கிரமிப்புக்கு இவ் ஏற்பாடுகள் தேவைதான். ஆனால் வெளிவந்துள்ளவை கடலடியில் மறைந்திருக்கக் கூடிய பனி சிகரத்தின் ஓர் நுனி மாத்திரமோ எனும் கேள்வி நிதானித்து நெருடக்கூடியது.

*(HINDU 05.07.00 GUARDIAN WEEKLY MARCH 2-8)*

**பிரார்த்தனை**

தேவ நிலையிலே  
சேர்ந்திடா விடினும்  
மானுடந் தவறி  
மடிவுறா வண்ணம்...  
–பாரதி

www.tamilarangam.net

# தொல்பொருள் ஆய்வு: பிரேமதாஸா ஸ்டைலில் வாஜ்பேய்

அக்பரின் மாளிகையானது அவ்விடத்தில் காணப்பட்ட இந்து கோயில்களையும், சிலைகளையும் இடித்து நிர்மூலமாக்கி விட்டே ....

பிரேமதாச அரசாங்கத்தைப் போல், இந்தியவில் பாரதீய ஜனதா அரசும் பல அதிசயிக்கத்தக்க தொல்பொருள் கண்டு பிடிப்புக்களை நடத்திவருவதாக தெிகிறது.

அண்மையில் ஃபாட்டேபூர் சிக்ரி (FATEHPUR SIKRI) எனும் இடத்தில் நடாத்தப்பட்ட "கண்டுபிடிப்பு" ஆக்ராவில் அமைந்துள்ள அக்பரின் மாளிகையானது அவ்விடத்தில் காணப்பட்ட இந்து கோயில்களையும், சிலைகளையும் இடித்து நிர்மூலமாக்கி விட்டே


**அக்பரின் மாளிகை எனது அழிக்கப்பட்டது ?**

அங்கு அமைக்கப்பட்டுள்ளது எனும் திடுக்கிடும் தகவலை வெளிக்கொணர்ந்துள்ளது.

இந்தியாவை பொருத்தமட்டில் இலங்கையைப் போலன்றி ஒரு தொல்பொருள் ஆய்வோ அன்றி கண்டுபிடிப்போ (ARCHEOLOGICAL SURVEY INDIA(ASI)விடம் சமர்ப்பிக்கப்படாது வெளியிடப்படக் கூடாது என்ற கடுமையான விதிமுறைக்கு உட்படுத்தப்படுகின்றது. இருந்தும் வாஜ்பேயின் அரசின் கீழ் அயோத்யாவின் பாப்ரி மசூதி விவகாரம் போலவே மேற்படி FATEHPUR SIKRI 'கண்டு பிடிப்பும்' ASI இடம் சமர்ப்பிக்கப்படவுமில்லை.

இதுபோக கண்டு பிடிப்பை செய்துள்ளவர்கள் மேற்படி கண்டுபிடிப்பை ஓர் அறிக்கை வடிவத்தில் உருவாக்கவோ அன்றி ஏனையோருக்கு கிட்ட செய்யவோ மறுத்துள்ளார்கள் என இந்திய பாராளுமன்றத்தில் சுட்டி காட்டப்பட்டுள்ளது. (6.7.2000)

மேலும் மிக அண்மையில் வாஜ்பேய் மீண்டும் பாப்ரி மசூதி பிரச்சனையை நியாயப்படுத்தவது போல் பேச்சை ஆரம்பித்துள்ளார். கூடவே, கிறிஸ்தவர்களின் மீதான திட்டமிட்ட தாக்குதலும் தொடர்கிறது. இவற்றையெல்லாம் நிதானித்து நோக்கும் போது மத, சாதி முரண்களை நோற்றுவித்து அதற் கூடாக தமது அதிகாரங்களை நிலைநாட்டி கொள்வது என்பது பாரதீய ஜனதாவின் முடிந்த முடிபாக இருக்கின்றது போல் தெரிகிறது.



**வெறியூட்டும் தந்திரம்**

RSS இன் மிகப்பிரமாண்டமான பிரசாரக் கூட்டம்.

– இப்பிரமாண்டமே, உள்ளடங்கிக் கிடக்கும் நச்சை தொற்றுவிக்கக் கூடிய இயல்பை கொண்டிருக்கின்றது. அடிப்படைவாதிகளினது ஒன்று சேரலின், இத்தகைய பிரமாண்டம் ஹிட்லரின் ஜெர்மனிய காலங்களை நினைவுக்கு கொண்டு வருவனவாய் உள்ளன.




**மல்லிகை**

இலக்கிய மாத இதழ்

தொடர்பு:

201 1/1, Sri Kathiresan St.,
Colombo – 13
Tel / Fax: 320721




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 228 தலித் மக்கள் கொலை! கிறிஸ்தவர்கள் மீது காட்டுமிராண்டித் தாக்குதல்!! ஆண்டவன் தந்த பரிசா இது?




பாரதீய ஜனதா ஆட்சியின் கீழ் என்றுமில்லாதவாறு இந்தியாவில் பல்வேறு மக்கள் விரோத பண்புகள் பெருகி தொடர்வதாக படுகின்றது.

மறுபுறத்தில் கிறிஸ்துவர்களின் மீது மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களும் நாளுக்கு நாள் பெருகி வருவதாக தெரிகின்றது.



228 தலித் மக்கள் கொலை கிறிஸ்தவர்களின் மீது காட்டுமிரா... ஆண்டவன் தந்த பரிசா இது?

**இந்நாட்டின் பிரதமரைப் போல், இந்தியாவில் இரண்டாம் ஸ்தானத்தை வகிக்கக் கூடிய அத்துவானி ஆர்.எஸ்.எஸ் கூட்டத்தின் முன்னணியில்.. பூகோள மயமாக்கலின் மறுபக்கம் .. ..**

'இந்து' பத்திரிகையின் ஒரு அறிக்கையின் பிரகாரம் நிலச்சொந்தக்காரர்களின் தனிப்பட்ட படையான ரன்வீர் சேனா இதுவரை குழந்தைகள், பெண்கள் உட்பட 228 தலித் மக்களை கொன்றொழித்தும், பல தலித் மக்களின் வீடுகளை தீக்கிரையாக்கியும் உள்ளது.(23.07.2000)

இவ் அட்டூழியங்கள் எந்த அளவுக்கு சென்றுள்ளது என்றால் , குஜராத் பூகம்ப அனர்த்தங்களுக்கு உட்பட்டு இறந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பொறுத்து,"அவர்கள் செய்த பாவங்களுக்காக ஆண்டவன் தந்த பரிசு இது" என ஒரு கிறிஸ்தவ அமைச்சரே குமுறும் அளவுக்கு வைத்துள்ளது. (இக்கூற்றுக்காக இவர் பின்னர் இராஜினாமா செய்ய நேரிட்டது).

போததற்கு, பாரதீய ஜனதாவின் முக்கிய பிரமுகர் ஒருவர் அண்மையில் ' தேசிய முகத்தை உடைய கிறிஸ்துவ மத ஸ்தாபனங்களுக்கு தாம் எதிர் இல்லை' என திருவாய் மலர்ந்தருளி உள்ளார்.

ஆனால் தேசியம், தேசியம் என தேசிய முகத்தை முன்னிறுத்த முனையும் பாரதீய ஜனதா அரசு, வெளிநாட்டுப் பொருட்களின் அனைத்து இறக்குமதிக்காக தனது சந்தைகளை பரக்க திறந்துப் போட்டே உள்ளது.

உதாரணமாக 1993-94 கால பகுதியில் தனது உணவுக்கான எண்ணைத் தேவைகளில் 96சதவீதத்தை உற்பத்தி செய்து 4வீதத்தை மாத்திரம் இறக்குமதி செய்த இந்தியா, கடந்த வருடம் 40சதவீத எண்ணையை இறக்குமதி செய்துள்ளது. இது உள்நாட்டு எண்ணை உற்பத்தியை வெகுவாக பாதித்து கிராம மக்களை கஷ்டத்துள் தள்ளி உள்ளது.

இதுப்போக, உலக வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், இறக்குமதித்தடைகள் அகற்றப்பட இன்னமும் போதிய கால அவகாசம் இருக்க, மேற்கத்தைய நாடுகளின் மறைமுக அழுத்தங்களுக்கு பணிந்து 714 பொருட்களுக்கான தடைகளை மூன்று வருடங்களுக்கு முன்னதாகவே அகற்றி கொண்டு அவற்றின் நல்ல பிள்ளையாகி உள்ளது.

இப்பிரச்சனைகளை அம்பலப்படுத்தி உள்ள முன்னாள் பிரதமர் வி.பி. சிங் ஒரு மூன்றாவது அணியை கட்டி எழுப்பும் யோசனையைத் தெரிவித்துள்ளார். (29.11.00)

ஆனால் சாதிக் கலவரங்களையும், மத கலவரங்களையும், இன கலவரங்களையும் வெவ்வேறு சமயங்களில், தனது ஸ்தாபனங்களினூடு தொடக்கி வைத்து மக்களின் சிந்தனையையே களிம்புப்போல் பற்றி பிடிக்க செய்யும் பாரதீய அரசின் நஞ்சார்ந்த சூழலில் மேற்படி முயற்சிகள் எடுபடுமா என்பது தெரியவில்லை.

www.tamilarangam.net

# கான்களின் ராஜ்யத்தை ஒடுக்குவோம்... - RSS



ஹ்ரித்திக் ரோஷான்

RSS இன் உத்தியோக பூர்வமற்ற சஞ்சிகையான PANCHAJANYA (பஞ்ஞசைன்யம்?) அண்மையில் ஜனரஞ்சகமான இந்திப்பட நடிகர் ஹ்ரித்திக் ரோஷனின் படத்தை தன் அட்டையில் தாங்கி வந்தது.

பஞ்சஜன்யா இதற்குரிய காரணத்தை




சாதியா? மதமா? ஓவியமா? திரைபடமா? காதலா் தினமா?அனைத்தையும் கௌவி பிடிக்கும் திறன் ! -பி.ஜே.பி

பின்வருமாறு விளக்கியது: 'ஹ்ரித்திக்கை நாம் மெச்ச வேண்டி உள்ளது. காரணம் இவரே 'கான்களின்' (சல்மான்கான், சாருகான், அமீர்கான்)..! ஆதிக்கத்தை பம்பாய் சினிமா உலகத்தில் முறியடித்தவர். முஸ்லீம்களின் ஆதிக்கத்தை முறியடிக்கும் ஓர் இந்து என்ற வகையில்.. ..!'

## படுலையும் ஆட்டிப்படைக்கு காடைக்கெடுத்த மதவெறி தயார்!

பாரதீய ஜனதாவின் அடிப்படைவாதம் எந்தெந்த மூலை முடுக்குகளுக்கு எல்லாம் சென்று எப்படி எப்படி ஊடுருவி மக்களை நஞ்சாக்க கூடியது என்பதற்கு இது ஓர் உதாரணம். கூடவே, இதற்குரிய தத்துவார்த்த வேர்களை, நியாயப்பாடுகளை RSSஇன் இந்துவத்தில் மாத்திரமல்ல ~ பின்நவீனத்துவத்திலும் ஒருவர் நியாயப்பாடுகளையும் கூட பின் நவீனத்துவம் முன்வைக்கக் கூடும். இந்நிகழ்வுகளை எல்லாம் தொகுத்து நிதானித்து பார்க்குமிடத்து, மொத்தத்தில் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் அடிப்படை விதிகள் ~ முறைமைகள் குறித்த நியாயப்பாடுகளை ஆளும்வர்க்கத்தின் கருத்தாக்கமானது நாளும் புதுப்பித்து புணரமைத்து புதிய வடிவங்களில் முன்வைக்கின்றது என்பது தெளிவாகின்றது.

ஓர் அலைவரிசையை அம்பலப்படுத்தி முடும் போது பிறிதொரு அலைவரிசையை துவக்கி வைத்துக் கொள்ளும் தேவை சம்பந்தப்பட்ட நலன்களுக்கு உண்டு.

ஆனால் அதையும் இடைவிடாது அம்பலபடுத்தும் பெரும் பொறுப்பை புத்திஜீவிகள் நாளும் புரியவில்லை எனில் மக்களை பலிக்கடாக்களாக்கும் நிகழ்வுகள் தங்குதடையின்றி தொடரும் என்றாகிறது. நேர்மையான புத்திஜீவிகளின் மௌனமே பேய்களின் ஆசுவாசத்திற்கு உகந்த சூழல் என்பார் பெரியோர்.

தொட்டுக் காட்டக் கூடியதாக இருக்கும் என்பது இன்று பரவலாக உணரப்படும் உண்மையாகும்.

கூடவே, இந்தப் பார்வைகள் உருவாக்க கூடிய எதிர்வினைகள் யாவை, அவை எத்தகையனவாய் இருக்கும் என்றெல்லாம் சிந்திக்கும் போது அதற்குரிய

www.tamilarangam.net

# தமிழ் இனி 2000 மாநாடும், அதற்குப் பின்னரும் ...

2000 செப்டெம்பரில் சென்னை, எழும்பூர், ஹொட்டேல் அட்லான்டிக் இல் 'தமிழ் இனி 2000' எனும் தமிழிலக்கிய மாநாடு நடைபெற்றது.

இலங்கையிலிருந்து சரிநிகரும், தமிழகத்திலிருந்து காலச்சுவடு, ஆறாம் திணை ஆகியனவும் இம்மாநாட்டை கணிசமான அளவு பொருட்செலவில் ஏற்பாடு செய்திருந்தன.

தமிழகம், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா மற்றும் புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்துகொண்டு ஆய்வுரைகளையும், கருத்துரைகளையும், கலந்துரையாடல்களையும் நிகழ்த்தினர்.

இவ்வாறான மாநாடுகள் நடைபெறும் போதெல்லாம் ஏற்படும் குறைநிறைகளும், கசாமுசாக்களும், கட்சி கட்டல்களும் இம் மாநாட்டிலும், அதன் பின்னரும் ஏற்பட்டன.

இலங்கையிலுள்ள ஏற்பாட்டாளர்களாகிய 'சரிநிகரில்' இம்மாநாடு சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட முன்னோடி ஒன்றுகூடல்களில் இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் தகுந்த பங்களிப்பு தரவல்ல தமிழ்ப் படைப்பாளிகளை கலந்துகொள்ளச் செய்யவேண்டுமென்ற விடயத்தில் முனைப்புக் காட்டப்பட்ட போதிலும், யாழ்ப்பாணத்திலிருந்து இம் மாநாட்டுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை செய்ய வல்லவர்களான அ. யேசுராசா, ஏ. ஜே. கனகரட்னா, தெணியான், சிதம்பரநாதன், சோ. பத்மநாதன், சொக்கன், செங்கை ஆழியான் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள முடியாதவாறு 'சூழலின் யதார்த்தம்' அமைந்துவிட்டிருந்தமை துர்ப்பாக்கியமானது.

மாநாடு தொடங்குவதற்கு முதல்நாள் மாலையில் சூட்டோடு சூடாக காலச்சுவடு வெளியீட்டகம் அதன் ஏழு புத்தகங்கள் கொண்ட பொதியொன்றை மாநாட்டு மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ள சென்னை அருங்காட்சியக மண்டபத்தில் வெளியிட்டது. அங்கு 'நிறப்பிரிகை' ஒரு துண்டுப்பிரசுரத்தை விநியோகித்தது. இம் மாநாடு, அதன் நோக்கங்கள், அதன் ஏற்பாட்டாளர்கள் ஆகியவை பற்றி கேள்வியெழுப்பி அத் துண்டுப் பிரசுரம் மேலும் சூடேற்றியது.

மாநாடு இரண்டு மண்டபங்களில் இரு பிரிவுகளாக ஒரே நேரத்தில் நிகழ்ந்தது.

அடித்தளத்தில் உள்ள மண்டபம் 'கைலாசபதி அரங்கு' என உருவகிக்கப் பட்டு இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுரைகள் சமர்ப்பிக்கப்பட்ட அதேநேரம், மேற்றளத்தில் உள்ள மண்டபம் 'புதுமைப்பித்தன் அரங்கு' எனப் பெயரிடப்பட்டு தமிழக இலக்கியம் தொடர்பான ஆய்வுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதனால் பெரிய வசதியீனம் பேராளர்களிடமும், பர்வையாளர்களிடமும் தோன்றியது. நிகழ்வுகள் தவறவிடப் படுவதால் இலங்கை, புலம்பெயர் இலக்கியவாதிகள் கவலையடைந்து காணப்பட்டார்கள். ஆனால் தமிழக இலக்கியவாதிகளில் பெரும்பான்மையானோர் இவ்விடயத்தைக் கண்டுகொள்ளவே யில்லை. கைலாசபதி அரங்கில் நிகழ்ந்த நிகழ்வுகளுள் ஏறத்தாள எல்லாவற்றிலுமே ஆர்வத்துடன் கலந்துகொண்டு, கருத்துக்களைப் பகிர்ந்து, விளக்கங்களைக் கோரிய ஒரேயொரு தமிழகப் படைப்பாளி பா. செயப்பிரகாசம் மட்டுமே.

விழாவில் ஆரம்பவுரை நிகழ்த்தியவர்களுள் ஒருவரான சுந்தர ராமசாமி அபிப்பிராய பேதங்களுக்கும், கோட்பாடுகளுக்கும், குழுவாதங்களுக்கும் அப்பால் தமிழ்ப்படைப்பாளிகள் ஆற்ற வேண்டிய சில விடயங்கள், கடப்பாடுகள் குறித்து வலியுறுத்திப் பேசினார்.

'பெருந்தலை'களான ஜெயகாந்தன், ஜெயமோகன், அ. மார்க்ஸ் ஆகியோர் இம மாநாட்டைப் புறக்கணித்தமை ஒரு குறிப்பிடத் தகுந்த விடயமாகும். அவ்வாறே 'பெருந்தலை'களான சுஜாதா, மாலன் போன்றோர் இறுதி நேரத்தில் தமிழக அரங்கில் கலந்துகொள்ள நேர்ந்ததும் அதன் மறுதலையாக குறிப்பிடப்பட வேண்டியதே.

ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த சிலர் அவற்றைச் சுருக்கி குறித்த சில நிமிடங்களுக்குள் சொல்ல முடியாமல் திணறினார்கள். மாநாட்டு உரைகளைத் தொடர்ந்து மாந்தி இட்லி, தோசை, வடை, சாம்பார் இத்தியாதிகளால் வயிறும் புத்தியும் மந்தித்து சோம்பித் திரிந்த சிலருக்கு, எப்போதும் தம்மை ஒரு பிரச்சினைக்குரிய பிரம்மாவாக முன்னிறுத்துவதில் வெகு ஆர்வமாக இருக்கின்ற 'அண்ணன் சாருநிவேதிதா' வின் 'ஹைபார்ட்' தனங்களைக் கண்டு களித்து கொஞ்சம் கொடுப்புக்குள் சிரிக்கக் கிடைத்ததும் வாஸ்தவமே!

மாநாட்டில் உரைகளைத் தவிர ஒர நிகழ்வுகளாக அமைந்தவை சில.

முதலாவது, சிறிய அளவிலான ஒரு ஓவிய சிற்பக் கண்காட்சியும் அதனுடன் தொடர்புடைய ஒரு சிறு கைநூலின் வெளியீடும்.

இரண்டாவது, விழா நாட்களின் இரண்டு முன்னிரவுகளில் நிகழ்த்தப்பட்ட திறந்த வெளி நாடகங்கள் இரண்டு

இவ்விரண்டுமே வெற்றியைப் பெருமளவில்

www.tamilarangam.net

ஆயுதங்கள் விற்க கூடாது என்று அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இவ் ஒப்பந்தத்தின் படி, 1989-91 ஆண்டு காலப்பகுதியில் ஈரானுடன் செய்து கொண்ட ஆயுத ஏற்றுமதிக்கான ஒப்பந்தத்தை ரஷ்யா அமுல்படுத்தவில்லை.

ஆனால் இன்று தனது அமெரிக்க ஒப்பந்தத்தை தூக்கி எறிந்துள்ள ரஷ்யா மிக பரந்துபட்டதும் அதிநவீனமானதுமான ஆயுதங்களை கொடுப்பதற்கு இசைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இவ் வாயுதங்கள் MIG - 29, SU -24MK ஜெட்டுகள், கிலோவகை நீர் மூழ்கிகள், S - 200VE விமான எதிர்ப்பு ஏற்பாடுகள், T-72 டாங்குகளுக்கான லைசென்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளதாக கூறப்படுகின்றது. *(VLADIMIR RADYAHIN)* இன்னுமொரு பயங்கரவாத நாடாக பிரகடனப்படுத்தப் பட்டிருக்கும் ஈரானுடனான இவ் ஒப்பந்தம் குறித்து வினா எழுப்பப்பட்ட போது, 'எங்கள் மேல் யாரும் தங்களின் சித்தத்தை திணிக்க முடியாது..' என புட்டினால் விளக்கம் தரப்பட்டது.



விமான பறத்தலுக்கான தடையை மீறிய ரஷ்ய குழுவினரின் ஈராக்கிய விஜயம் - புதிய சவால்

8. இவை தவிர, டிசம்பரில் புட்டினின் கியுப விஜயம், ஈராக்குக்கான ரஷ்ய குழுவினரின் தடையை மீறிய விஜயம் ஆகியன அனைத்தும் உலக அரங்கில் ரஷ்யா மேற்கொண்டு வரும் மிக முக்கிய நகர்வுகளாக கணிக்கப்படுகின்றன.

இதுபோக கடந்த டிசம்பர் வரையிலான எட்டு மாதங்களில் மாத்திரம் புட்டின் 19 வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டார். இதுபோக மிக அண்மையில் இனி ரஷ்ய கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பில் தமது ரோந்துகளை மீள தொடங்கும் என்றஅறிவிப்பையும் செய்துள்ளார். இது எதை கூறுகின்றதென்றால் கடந்த பத்து வருடங்களாக தவிர்க்கப்பட்டிருந்த ரஷ்ய கப்பல்களின் கடல் ரோந்துக்கள் மீள ஆரம்பமாகப் போகின்றது என்பதையே.

இனி இந்த ஒரு பின்னணியிலேயே புஷ்ஷின் நியமனத்தை பிரிட்டன் போன்ற நாடுகள் வரவேற்ற விதமும், புஷ்ஷின் அமைச்சரவை தெரிவுகளும் ஆழ்ந்து நோக்கத் தக்கனவையாக இருக்கின்றன. விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளால் அமெரிக்கா எதிர்கொள்ளும் அபாயம் குறித்த விசாரணை கமிஷனின் தலைவராக, அண்மைக் காலம் வரை இருந்த ரம்ஸ்பெல்டே அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளராக புஷ்ஷால் நியமிக்கப்பட்டிருக்கிறார் இஃது அமெரிக்காவின் ஏவுகணைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான பச்சை கொடி காட்டலே அன்றி வேறில்லை என்பது தெளிவு.

இவை அனைத்தையும் ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து, வரவிருக்கும் காலங்கள் சந்தைகளை மீளப் பகிர்தல் தொடர்பிலானமுரண்களை, மிக மிக அழுத்தமாக முன்னெடுக்கும் காலங்களாக இருக்க கூடுமே அன்றி, சுதந்திரங்களை அமெரிக்கா பிய்த்து உலக மக்களுக்கு பிச்சை போட்டுக் கொண்டிருக்கும் காலமாக உருவெடுக்காது என்றாகிறது.

## பின்னிணைப்பு:

மிகப்பிந்தி கிடைக்கும் செய்திகள், புஷ் ஏற்கனவே உலக நாடுகளின் நியாயமான எதிர்ப்புகளை புறந்தள்ளி ஏவுகணைக்கூடு உலகை சர்வநாசமாக்க திடசங்கற்பம் பூணும் நடைமுறைக்கு இறங்கிவிட்டதை காட்டி நிற்பதாய் உள்ளன.

உதாரணமாக எதிரி நாட்டு ஏவுகணைகளை வானில் வைத்து லேசர்கதிர் மூலம் சுட்டுவீழ்த்தும் ஸ்டார்வோர் சோதனை வெற்றி பெற்றுள்ளதாகவும் 2012ஆம் ஆண்டளவில் வானில் லேசர் ஆயுதங்கள் நிலைநிறுத்தப்படும் எனவும், இதற்கென 240 மில்லியன் டொலரை அமெரிக்கா செலவு செய்யும் எனவும் ஜோர்ஜ் புஷ்ஷின் பதவி ஏற்புக்குப்பின் அமெரிக்கா அறிவித்துள்ளதாக ராயிட்டர் ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது. (26.01.2001).

கிளிண்டனின் 60 பில்லியன் டொலர் செலவிலான, தரையிலிருந்து எதிரி ஏவுகணைகளை செயலிழக்கச் செய்யும் திட்டத்திற்குப் பதிலாகவே மேற்படித்திட்டம் செயல்முறைக்கு வரவிருப்பதாக மேலும் தெரிய வருகிறது.

மூலதனக் குவியலின் இன்றைய நலனை சரியாக முன்னெடுக்கும் புஷ்ஷின் இந்நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டவை தான் என்றாலும் இதற்கெதிரான சர்வதேச நடவடிக்கைகள் எப்படியாய் வடிவெடுக்கும் என்பதை பொறுத்தே பார்க்கலாம்.

ஈராக்கின் மீது மேற்கொள்ளபடும் தாக்குதல்களும் அமெரிக்காவின் தற்போதைய ஆக்கிரமிப்பு எண்ணப்பாடு குறித்த அறிவிப்பை உலகுக்கு தெரிவிப்பதாய் உள்ளது.

என் தந்தை . . . .

துறந்த நடைகளுடையான்
உங்கள்
சூனியப்பொய் சாத்திரங்கள்
கண்டு நகைப்பான்
ஏழைகளைத் தோழமைகொள்வான்
செல்வம்
ஏறியார் தமைக்கண்டு
சீறிவிழுவான் . . .

- பாரதி

www.tamilarangam.net

# உண்மை ஒளிர்கவென்று பாடவோ

'மெல்ல கனவாய் பழங்கதையாய்' எனும் பிரமாண்டமான நாவலை உருவாக்கித் தந்த விசாலத்தின் புதிய நாவல் 'உண்மை ஒளிர்கவென்று பாடவோ'.

244 பக்கங்களைக் கொண்டிருக்கும் இந்நாவலுக்கான முன்னுரை *பிரச்சனைக்குரிய* வகையில் இந்திரா பார்த்தசாரதியால் எழுதப்பட்டுள்ளது.

முன்னுரையின் சில பகுதிகள் :

'தன் வரலாறும் தன் வரலாற்றை ஒட்டிய பல சமூக வரலாற்றுச் செய்திகளும், கற்பனையும் கலந்த, இந்த நாவலாசிரியரின் முதல் நாவலாகிய "மெல்லக்கனவாய் பழங்கதையாய்" பரவலாகப் பேசப்பட்டு விவாதிக்கப்பட்டது. 'உண்மை ஒளிர்கவென்று படவோ?' என்ற இந்த நாவலும் ஒரு வகையில் பார்க்கப் போனால், வரலாற்று நாவல்தான். தமிழ் நாட்டின் தென்மேற்குக் கோடியில் நிகழும் சம்பவங்கள் வரலாற்றுப் பின்னணியில் கூறப்படுகின்றன.
'

" " "

'இந்தியாவை ஆங்கிலேயர்கள் கைப்பற்றவில்லை. இந்தியா ஆங்கிலேயர்களின் கையில் தானாகவே விழுந்த கனி' என்கிறார்கள் ஆங்கிலேய வரலாற்றறிஞர்கள். உலக வரலாற்றைப் பார்க்கும் போது அரசியல் அதிகாரத்துக்கு உறுதுணையாக இருப்பது மதந்தான் என்பதை நம்மால் உணரமுடிகிறது.

" " "

இந்நாவலின் வரலாற்றுச் சமூகச் செய்திகள், சமகாலக் களத்திலும், கண்ணோட்டத்திலும் இலக்கிய நயத்தோடு நுணுக்கமாகச் சித்தரிக்கப் படுகின்றன. இந்நாவலின் முக்கிய பாத்திரங்களாகிய மீனாவும், நேசனும் இந்தத் தலைமுறையைச் சார்ந்தவர்கள். மதம் பற்றியும் சாதிவேறுபாடுகள் குறித்தும் ஒத்த அபிப்பிராயம் உடையவர்கள். வெவ்வேறு மதத்தைச் சார்ந்த இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். என்றாலும் நேசனை ஏற்றுக்கொள்வதில் மீனாவுக்கு ஒரு 'விதமான கலாச்சார பயம்' தடையாக இருக்கின்றது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

" " "

விசாலம் எந்த சாதிக்கும் வக்காலத்து வாங்கவில்லை. அதே சமயம் மதம் என்ற பேரில் நடக்கின்ற எல்லா விதமான கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களை இவர் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை. மீனா




என்ற இந்துப் பெண்ணும் நேசன் என்ற கிறிஸ்துவ இளைஞனும் அவரவர் மதங்களிலுள்ள, இக்காலத்தில் ஏற்க முடியாத கொள்கைகளைச் சிறிதும் அஞ்சாமல் கேள்விக்குள்ளாக்குகிறார்கள். இருந்தும் இருவராலும் மனரீதியாக இணைய முடியவில்லை என்பதுதான் 'ட்ராஜெடி'.

" " "

இந்நாவலில் பெண்கள், ஆண்களால் நடத்தப்படும் விதத்தைப் பார்க்கும் போது மீனுவின் முடிவு சரி என்றுதான் நமக்குத் தோன்றும்.

" " "

வீரமாமுனிவர் கிறிஸ்த்தவத்துக்கு தமிழ்க்கலாச்சார அடையாளங்கள் தருவது அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

" " "

கிறிஸ்த்தவ மதச் செய்திகளை வரலாற்று பூர்வமாக ஆழமாக ஆய்வு செய்து இலக்கியமாக்கியிருக்கிறார் விசாலம். மனிதநேயம் என்ற நேர்மையான கோட்பாட்டை உருவாக்கி, அதை ஒரு ஸ்தாபனமாக ஆக்கிவிடாமல், பாதுகாத்து உலக மக்களுக்குள் இணக்கம் ஏற்படும் படியாகச் செய்ய வேண்டும் என்பதே இந்நாவலின் அடிநாதம்.

1952 முதல் பத்தாண்டுக்காலம் வரை கம்யூனிஸ்ட் கட்சியிலும், மகளீர் இயக்கங்களிலும் தீவிர ஈடுபாடுகொண்டிருந்த விசாலத்தின் முதல் சிறுகதை 1954இல் சரஸ்வதியில் வெளிவந்திருக்கிறது. 1994 இல் வெளிவந்த 'மெல்ல கனவாய் பழங்கதையாய்' அவ்வாண்டுக்கான புதுவை அரசின் பரிசைப் பெற்றிருக்கிறது. இப்போது இவ் எழுத்தாளரின் இந்த நாவல் .

வெளியீடு : விஜயா பதிப்பகம்
20, ராஜ வீதி
கோவை - 641001

**அட்டை:** மத்திய கிழக்கு ~ பிந்துவெவெ அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் குமுறலின் ஓவிய வடிவாக்கங்கள்.

**ஓவியங்கள்:** எஸ். சிவப்பிரகாசம், சதானந்தன்

www.tamilarangam.net




# அலுகோசு

ஒரு கயிறு
ஒரு சுத்தியல்
ஒரு இரும்புக் கம்பி
தாருங்கள் எனக்கு
ஒரு தூக்கு மரத்தை நான் ஆக்குவதற்காக

எங்கள் மத்தியில்
இன்னும் ஓர் கும்பல்
எஞ்சியுள்ளது
அவமானத்தை அது சாப்பிடுகிறது
தலை குனிந்து நடந்து செல்கின்றது
அவர்களின் பிடரியை நிமிர்த்துவோம் நாங்கள்

எதிர்ப்படும் ஒவ்வொரு கையையும்
நக்கும் ஒருவனை
எப்படி நாங்கள் எம்மிடை வைக்கலாம்?

**றஷீட் ஹுசைன்**
நன்றி
**பலஸ்தீனக் கவிதைகள்**

தனிச்சுற்றுக்காக மட்டும்

நந்தலாலா இலக்கிய வட்டத்திற்காக
ஹட்டன் எஸ். சிவப்பிரகாசம்
அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்